பொருளடக்கம்

| எண் | தலைப்புகள் | பக்கம் |
|---|---|---|
| 1. | நீங்கள் தப்லீக் செய்யுங்கள். அதன் மூலம் ஒருவருக்கு நேர்வழி பெறுவதற்கு காரணியாக இருங்கள். நாம் தப்லீக் செய்வது அவசியமானதாகும். மேலும் நேர்வழி பெறுவதற்கான நேரத்தை கொடுக்க வேண்டும் | 1 |
| 2. | திருக்குர்ஆன் வசனங்கள் | 2 |
| 3. | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்குணங்களும், நன்னடத்தையும் முற்றிலும் திருக்குர்ஆனிற்கேற்பவே அமைந்திருந்தது | 3 |
| 4. | அவர் ஒரு பேரரசர், ஆன்மீக அரசர்களின் தலைவர். அவருக்கு உலகின் அனைத்து கருவூலங்களின் திறவுகோல்களும் வழங்கப்படும் | 4 |
| 5. | 2017 ஆம் ஆண்டு காதியானில் நடைபெற்ற ஆண்டு மாநாட்டில் ஹுஸூர் அவர்கள் நேரலை மூலமாக ஆற்றிய சொற்பொழிவு | 6 |
| 6. | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பலதார மணமும் அதன் நுட்பமான ஞானமும் | 13 |
| 7. | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை - மக்கா வெற்றியின் வியக்கத்தக்க சம்பவங்களின் ஒளியில் | 15 |
| 8. | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை இறைவன் பக்கம் அழைத்தல் என்பதன் ஒளியில் | 24 |

لا إله إلا الله محمد رسول الله

# நீங்கள் தப்லீக் செய்யுங்கள். அதன் மூலம் ஒருவர் நேர்வழி பெறுவதற்கு காரணியாக இருங்கள். நாம் தப்லீக் செய்வது அவசியமானதாகும். மேலும் நேர்வழி பெறுவதற்கான நேரத்தை கொடுக்க வேண்டும்

மக்கள் இறைவன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். தன்னைப் படைத்தவனும் எஜமானனுமாகிய அல்லாஹ்வை அடையாளங்கண்டு கொள்ள வேண்டும். ஏகத்துவத்தையே அவர்கள் முழங்க வேண்டும் என்பதிலேயே நம் தலைவரும் எஜமானருமாகிய ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மிகுந்த ஏக்கம் இருந்தது.

நபியின் முதல் பணி என்னவென்றால், பூமியிலிருந்து காணாமல் போன ஏகத்துவத்தை நிலைநாட்டுவதே ஆகும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உள்ளத்தில் மக்கள் நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பதில் எந்த அளவுக்கு ஓர் ஏக்கம் இருந்தது என்றால் அதை அல்லாஹ்வே கூறுகின்றான். لَعَلَّكَ بَاخِعٌ نَّفْسَكَ أَلَّا يَكُونُوا مُؤْمِنِينَ

அவர்கள் நம்பிக்கையாளர் ஆகவில்லை என்பதற்காக நீர் ஒருவேளை உம் உயிரையே மாய்த்துக் கொள்வீர் போலும் (26:4).

நபிமொழியில் இவ்வாறு வருகிறது. ஒரு சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் கூறினார்கள்: இறைவன் மீது ஆணையாக! உம் மூலமாக ஒரு மனிதர் நேர்வழி பெற்றால் அது உயர்ந்த செந்நிற ஒட்டகம் கிடைப்பதை விட சிறந்ததாகும். (முஸ்லிம், நூல் : ஹதீக்கத்துஸ் ஸாலிஹீம் ஹதீஹ் எண் 586)

இது தொடார்பாக ஒரு சில விஷயங்களை வாசகர்களுக்கு முன்னால் சமர்ப்பிக்கப்படுகின்றது. அதாவது ஒருவர் நம்பிக்கை கொள்வதனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எந்த அளவு மகிழ்ச்சி ஏற்படுகின்றது என்பதையும் அன்னார் மக்கள் தங்கள் இறைவன், படைத்தவன் மற்றும் எஜமானன் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும் என்பதில் எந்த அளவுக்கு மிகுந்த ஆர்வம் இருந்தது என்பதையும் இந்த சம்பவத்தின் மூலம் அறியலாம்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்த யூதச் சிறுவன் திடீரென நோயுற்றான். எனவே, அவனை நோய் விசாரிக்க ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனிடம் வந்து அவனுடைய தலைமாட்டில் அமர்ந்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள் என்றார்கள். உடனே அவன் தன்னருகிலிருந்து தந்தையைப் பார்த்தான். அப்போது அவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றிற்கு கட்டுப்படு என்றதும் அவன் இஸ்லாத்தை ஏற்றான். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இவனை நரகத்திலிருந்து பாதுகாத்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் எனக் கூறியவாறு அங்கிருந்து வெளியேறினார்கள். (புகாரி ஜனாஸாவின் சட்டங்கள் ஹதீஸ் 1356)

மக்களை இஸ்லாத்தின் பால் அழைக்கின்ற இந்த பணி அன்னாரின் கட்டாயக் கடமை என்பதில் எவ்வித ஐயமும் இல்லை. மேலும் அன்னார் தன்னுடைய வாழ்நாள் முழுவதும் இப்பணியை செய்தார்கள். ஆனால் இந்த தப்லீக் பணியின் பின்னனியில் மக்களின் மீது மிகுந்த பற்றும், கருணையும், அன்பும், நேசமும் இருந்தது. நபிமார்கள் மக்களிடம் ஒரு தாய் தன்னுடைய பிள்ளைகளிடம் காட்டுகின்ற அன்பு, கருணையை விட அதிகமாக அன்பை செலுத்துகிறார்கள். இதன் காரணமாகத்தான் ஒரு பணிவிடை செய்கின்ற சிறுவன் நம்பிக்கை கொண்டதன் காரணமாக நெருப்பிலிருந்து பாதுகாக்கப்பட்டு விட்டான் என்று அறிந்தவுடன் மிகவும் மகிழ்ச்சி அடைந்தார்கள். அதே போன்று அத்தாஸ் என்பவர் நம்பிக்கை கொண்ட அருமையான சம்பவம் இவ்வாறு உள்ளது.

ஷவ்வால் 10, நபவியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாயிஃபிற்கு தனியாக சென்றார்கள். அல்லது சில அறிவிப்புகளின்படி ஸைது பின் ஹாரிஸா (ரலி) அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் சென்றதாக வந்துள்ளது. அங்கு சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பத்து நாட்கள் நகரத்தின் தலைவர்களை ஒருவர் பின் ஒருவராக சந்தித்து பிரச்சாரம் செய்தார்கள். ஆனால் மக்காவை போன்ற இந்த நகரத்தின் நிலையும் இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுதல் என்பது அவர்களது நியதியில் இல்லாமல் போயிற்று. இறுதியில் தாங்கள் தாயிஃபின் மிகப்பெரிய தலைவரான அப்து யா லைலை சந்தித்து இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அழைப்பு விடுத்தார்கள். ஆனால் அவன் அன்னாரின் அழைப்பை நிராகரித்து விட்டான்.

மாறாக, ஏளனம் செய்யும் விதத்தில் அன்னார் நோக்கி இவ்வாறு கூறினான். நீங்கள் உண்மையாளர் என்றால் உங்களுடன் கலந்துரையாடல் செய்வதற்கு எனக்கு எந்த தகுதியும் இல்லை. நீங்கள் பொய்யர் என்றால் கலந்துரையாடலில் எந்த பயனும் இல்லை. மேலும் அன்னாரின் போதனையின் தாக்கத்தின் கீழ் அந்த நகரத்தின் இளைஞர்கள் வந்து விடுவார்களோ என்று எண்ணி உங்கள் பேச்சை கேட்க இங்கு தயாராக இல்லை என்று கூறியவாறு அன்னாரை இந்த நகரத்திலிருந்து வெளியேறுமாறு கூறினான்.

(தொடர்ச்சி 31-வது பக்கம்...)

**அவனே எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்த போதிலும் அவனது கட்டளைகளை படித்துக்காட்டி, அவர்களைத் தூய்மைப்படுத்தி, அவர்களுக்கு வேதத்தையும் நுட்பமான அறிவையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பினான்.**

❁ هُوَ الَّذِيْ بَعَثَ فِي الْاُمِّيّٖنَ رَسُوْلًا مِّنْهُمْ يَتْلُوْا عَلَيْهِمْ اٰيٰتِهٖ وَيُزَكِّيْهِمْ وَيُعَلِّمُهُمُ الْكِتٰبَ وَالْحِكْمَةَ ۗ وَاِنْ كَانُوْا مِنْ قَبْلُ لَفِيْ ضَلٰلٍ مُّبِيْنٍ ۝ وَّاٰخَرِيْنَ مِنْهُمْ لَمَّا يَلْحَقُوْا بِهِمْ ؕ وَهُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ۝ ذٰلِكَ فَضْلُ اللّٰهِ يُؤْتِيْهِ مَنْ يَّشَآءُ ؕ وَاللّٰهُ ذُو الْفَضْلِ الْعَظِيْمِ ۝

அவனே எழுதப்படிக்கத் தெரியாத மக்களுக்கு அவர்கள் இதற்கு முன்னர் தெளிவான வழிகேட்டில் இருந்த போதிலும் அவனது கட்டளைகளை படித்துக்காட்டி, அவர்களைத் தூய்மைப்படுத்தி, அவர்களுக்கு வேதத்தையும் நுட்பமான அறிவையும் கற்றுக் கொடுக்கும் ஒரு தூதரை அவர்களிலிருந்தே அனுப்பினான். (62:3,4)

**ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் இந்த வசனத்திற்கு இவ்வாறு விரிவுரை கூறுகின்றார்கள்:**

**(வசனம் எண் 3)** இந்த வசனத்தில் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மட்டும் உரிய தனிச்சிறப்பு எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அது இதுவாகும். அன்னார் தன்மீது நம்பிக்கை கொண்டவரிகளிடத்தில் வசனங்களை ஓதிக்காட்டுவதுடன் அப்போது அவர்களை தூய்மைப்படுத்தி விடுகின்றார்கள். அதாவது அந்த வேதத்திலுள்ள அறிவையும் ஞானத்தையும் பற்றி அவர்களுக்கு எடுத்துக் கூறுவதற்கு முன்னதாகவே அவர்களை தூய்மைப்படுத்தி விடுகின்றார்கள். இது திருக்குர்ஆனின் மகத்தான ஓர் அற்புதமாகும். இதற்கு முன்னதாக சூரா அல் பக்கராவின் 130 வது வசனத்தில் ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் ஒரு துஆ குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வருகை தொடர்பானதாகும்.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் அல்லாஹ்வின் வசனங்களை அவர்களுக்கு ஓதிக்காட்டி அவற்றின் அறிவையும் ஞானத்தையும் அவர்களுக்கு புரிய வைத்து அதன் விளைவாக அவர்களை தூய்மைப்படுத்துகின்ற ஒரு தூதரை அனுப்புமாறு துஆ செய்தார்கள். இந்த துஆ ஏற்றுக் கொள்ளப்பட்டது தொடர்பாக மூன்று இடங்களில் குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அந்த மூன்று இடங்களிலும் பெருமானார் (ஸல்) அவர்கள் வசனங்களை ஓதுவதுடன் அவர்களை தூய்மைப்படுத்தியதாகவும் அதற்குப் பிறகே அவர்களுக்கு வேதத்தையும் ஞானத்தையும் கற்றுக் கொடுத்ததாகவும் கூறப்பட்டிருக்கின்றது. இது திருக்குர்ஆனின் ஒரு சிறப்பான அற்புதமாகும். 23 வருடங்களாக அது இறக்கப்பட்டுள்ளது. ஆனால் அதன் வசனங்களில் எங்குமே எந்த முரண்பாட்டையும் எவரும் காண முடியாது.

**(வசனம் எண் 4)** இந்த வசனத்தில் ஆகரீன்கள் அதாவது பின்னவர்களைப் பற்றி கூறப்பட்டுள்ளது. பின்னவர்களில் ஒரு தூதரின் வருகை பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது. இதைப் பற்றியே இதற்கு முன்னுள்ள வசனத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(هُوَ الَّذِيْ بَعَثَ فِي الْاُمِّيّٖنَ رَسُوْلًا) ஆனால் இந்த வசனத்தின் இறுதியில் வசனம் எண் 2 ன் இறுதியில் குறிப்பிடப்பட்ட இறைவனின் அந்த நான்கு பண்புகள் குறிப்பிடப்படவில்லை. மாறாக, அஸீஸ் மற்றும் ஹகீம் என்ற இரு பண்புகள் மட்டுமே திரும்பவும் கூறப்பட்டுள்ளது. இதிலிருந்தும் எந்த தூதர் பற்றி ஆரம்பத்தில் கூறப்பட்டிருந்ததோ அவர் சுயமே மீண்டும் வர மாட்டார். மாறாக, அவரது நிழலாக ஒருவர் தோன்றுவார். அவர் ஷரீஅத்துடைய நபியாக இருக்க மாட்டார் என்பது தெரிய வருகின்றது. உள்ளத்தை ஈர்க்கக் கூடிய இன்னொரு விஷயம் என்னவென்றால் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் தொடர்பாகவும் இந்த இரண்டு பண்புகளுமே எடுத்துக் கூறப்பட்டிருக்கின்றது. இது தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்.

بَلْ رَّفَعَهُ اللّٰهُ اِلَيْهِ ؕ وَكَانَ اللّٰهُ عَزِيْزًا حَكِيْمًا

❁ قُلْ لَّوْ شَآءَ اللّٰهُ مَا تَلَوْتُهٗ عَلَيْكُمْ وَلَاۤ اَدْرٰىكُمْ بِهٖ ۖ فَقَدْ لَبِثْتُ فِيْكُمْ عُمُرًا مِّنْ قَبْلِهٖ ؕ اَفَلَا تَعْقِلُوْنَ ۝

மேலும் நீர் (அவர்களிடம்) கூறுவீராக: (வேறெதாவது போதிக்க) அல்லாஹ் நாடியிருந்தால், நான் இதனை உங்கள் முன் ஓதிக்காட்டியிருக்கமாட்டேன். அவன் இதனை உங்களுக்கு அறிவித்திருக்கவும் மாட்டான். நான் இதற்கு முன்னர் உங்களிடையே ஒரு நீண்ட வாழ்நாளைக் கழித்திருக்கின்றேனே; இதன் பிறகும் நீங்கள் ஏன் உணர்வதில்லை? (10:17)

**ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் இந்த வசனத்திற்கு இவ்வாறு விரிவுரை கூறுகின்றார்கள்:**

இணை வைப்பவர்கள் பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவன் மீது பொய்யை புனைந்து கூறியவாறு திருக்குர்ஆனை சுயமே இயற்றினார்கள் என்று குற்றம் சுமத்துகின்றனர். فَقَدْ لَبِثْتُ فِيْكُمْ عُمُرًا இதனை இறைவன் உறுதியாக மறுக்கின்றான். எந்த தூதரைப் பற்றி சுதூக் (உண்மையாளர்), அமீன் (நம்பிக்கைக்குரியவர்) என்று நீங்கள் கூறி வந்தீர்களோ அவர் தான் நபி என்று வாதம் செய்வதற்கு முன்னதாக நாற்பது வயது வரை எந்தவொரு மனிதரிடத்திலும் கூட அவர் பொய் கூறியதில்லை. அவ்வாறிருக்க இப்போது திடீரென்று இறைவன் மீது இட்டுக்கட்டி அவரால் எவ்வாறு பொய் கூற முடியும்.

❁ هُوَ الَّذِيْۤ اَرْسَلَ رَسُوْلَهٗ بِالْهُدٰى وَدِيْنِ الْحَقِّ لِيُظْهِرَهٗ عَلَى الدِّيْنِ كُلِّهٖ ۙ وَلَوْ كَرِهَ الْمُشْرِكُوْنَ ۝

**அவனே தனது தூதரை நேர்வழியுடனும் உண்மையான மார்க்கத்துடனும் இதனை அவன் எல்லா மார்க்கத்தின் மீதும் வெற்றி பெறச் செய்வதற்காக அனுப்பினான். (இறைவனுக்கு) இணை வைப்பவர்கள் (இதனை) எந்த அளவு வெறுத்தாலும் சரியே. (61:10)**

**ஹஸ்ரத் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் (ரஹ்) அவர்கள் இந்த வசனத்திற்கு இவ்வாறு விரிவுரை கூறுகின்றார்கள்:**

**(வசனம் எண் 7)** இந்த வசனத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் அஹ்மதிய்யத் என்ற மகிமை வெளிப்படுவது தொடர்பான முன்னறிவிப்பு செய்யப்பட்டிருக்கின்றது. அன்னார் முஹம்மதாகவும் வெளிப்பட்டார்கள். அது பற்றிய முன்னறிவிப்பை ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்கள் செய்திருந்தார்கள். அன்னார் அஹ்மதாகவும் வெளிப்பட்டார்கள். அது பற்றிய முன்னறிவிப்பை ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்கள் செய்திருந்தார்கள்.

**(வசனம் எண் 10)** இந்த வசனத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் உலகளாவிய நபியாக இருப்பது பற்றி விளக்கமாக எடுத்துக் கூறப்பட்டுள்ளது. அதாவது ஏதாவதொரு மார்க்கத்தை ஏற்றுக் கொண்டவர்களிடம் மட்டும் அவர்கள் அனுப்பப்படவில்லை. மாறாக, முழு உலகிலும் தோன்ற இருக்கின்ற ஒவ்வொரு மார்க்கத்தை பின்பற்றுபவர்களுக்கும் அவர்கள் நபியாக அனுப்பப்பட்டிருக்கின்றார்கள். அவர்கள் அந்த மார்க்கத்தை பின்பற்றுபவர்கள் மீது வெற்றி பெறுவார்கள்.

**ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:**

இது திருக்குர்ஆனின் ஒரு மகத்தான முன்னறிவிப்பாகும். இது தொடர்பாக ஆராய்ச்சியாளர்களான ஆலிம்கள் ஒருமித்த கருத்தை உடையவர்களாக இருக்கின்றார்கள். அதாவது இந்த முன்னறிவிப்பு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் கைகளால் நிறைவேறும்.

(திர்யாக்குல் குலூப், ரூஹானி கஸாயின் தொகுதி 15 பக்கம் 232)

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்குணங்களும், நன்னடத்தையும் முற்றிலும் திருக்குர்ஆனிற்கேற்பவே அமைந்திருந்தது

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கம்பீரமான தோற்றம் கொண்டவராக இருந்தார்கள். அன்னாரது முகம் 14 ஆம் நாள் நிலவைப் போன்று பொலிவுடன் இருந்தது. அன்னாரது பேச்சு சுருக்கமாகவும் ஆனால் தெளிவாகவும் ஞானம் நிறைந்ததாகவும் இருந்தது. மேலும் வீண் விஷயங்களிலிருந்து தவிர்ந்தாகவும் இருந்தது. அன்னார் யாரையும் பழித்துரைப்பதும் இல்லை. ஏளனம் செய்வதுமில்லை. சின்னஞ்சிறு அருள்களைக் கூட பெரியதாக வெளிப்படுத்துவார்கள். அன்னாரிடம் நன்றியுணர்வு மிகைத்திருந்தது.**

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கம்பீரமான தோற்றம் கொண்டவராக இருந்தார்கள். அன்னாரது முகம் 14 ஆம் நாள் நிலவைப் போன்று பொலிவுடன் இருந்தது. அன்னாரது பேச்சு சுருக்கமாகவும் ஆனால் தெளிவாகவும் ஞானம் நிறைந்ததாகவும் இருந்தது. மேலும் வீண் விஷயங்களிலிருந்து தவிர்ந்தாகவும் இருந்தது. அன்னார் யாரையும் பழித்துரைப்பதும் இல்லை. ஏளனம் செய்வதுமில்லை. சின்னஞ்சிறு அருள்களைக் கூட பெரியதாக வெளிப்படுத்துவார்கள். அன்னாரிடம் நன்றியுணர்வு மிகைத்திருந்தது. ஹஸ்ரத் ஹஸன் பின் அலி (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள்:

நான் எனது மாமா ஹிந்த பின் அபீ ஹாலா அவர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றம் பற்றிக் கேட்டேன். இவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தோற்றம் பற்றி கூறுவதில் மிகவும் திறமை பெற்றவராவார். அவர்கள் என்னிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தொடர்பாக எப்படிப்பட்ட விஷயங்களை கூற வேண்டும் என நான் விரும்பினேன் என்றால் அதை நான் எனது மனதில் பதிய வைத்துக் கொள்ள வேண்டும். ஆக ஹிந்த அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கம்பீரமான தோற்றம் கொண்டவராக இருந்தார்கள். அன்னாரது முகம் 14 ஆம் நாள் நிலவைப் போன்று பொலிவுடன் இருந்தது. நடுத்தர உயரம் கொண்டவர்களாக இருந்தர்கள். அதாவது குள்ளத்திலிருந்து உயரமாகவும், உயரத்திலிருந்து சற்று சிறிதாகவும் இருந்தார்கள். தலை பெரியதாகவும் முடி சுருளாகவும் அடர்த்தியாகவும் காது வரை இருந்தது. முடியின் வடு தெளிவாகவும் நிறம் பளீர் வெண்மையாகவும் நெற்றி பெரிதாகவும், புருவம் நீளமாகவும், ஒல்லியாகவும், நெருக்கமாகவும் ஒன்றுடன் ஒன்று ஒட்டாமலும் இருந்தது.

ஆனால் நடுவில் வெள்ளையாக இருந்தது. போகப்படும் சமயத்தில் அது தெளிவாக தெரிந்தது. மூக்கு ஒல்லியாக இருந்தது. அதிலிருந்து நூர் வெளிப்பட்டது. வெளிப்படையாக பார்ப்பவருக்கு அது சற்று தூக்கியது போன்று தென்பட்டது. முடி அடர்த்தியாக இருந்தது. முகம் வென்மையாகவும், மிருதுவாகவும் இருந்தது. வாய் பெரிதாகவும், பற்கள் வரிசையாகவும் பளபளப்பாகவும் இருந்தன. கண் இமைகள் மெல்லியதாக இருந்தது. கழுத்து நீண்டதாகவும் வ வெண்மையாகவும் சுத்தமாகவும் சிவப்பாக மின்னியது.

நடுத்தர மனிதராகவும், உடல் சற்று பருமனாகவும் ஆனால் முற்றிலும் பொருத்தமாகவும் இருந்தது. வயிறும் நெஞ்சும் ஒன்றுபோல் இருந்தது. அகன்று விரிந்த மார்பும், உறுதியான உடலும் மென்மையான மற்றும் மின்னும் தோலும் இருந்தது. மார்பும் வயிறும் முற்றிலும் முடிகள் இல்லாமல் நெஞ்சிலிருந்து தொப்புள் வரை ஒரு மெல்லிய கோடு ஒன்று இருந்தன. கை முட்டியிலும், தோளிலும் சற்று முடிகள் இருந்தது. மணிக்கட்டு பெரிதாக இருந்தது. உள்ளங்களை பெரிதாகவும், சதையினால் நிரம்பியிருந்தது. விரல்கள் நீளமாகவும், நேர்த்தியாகவும் இருந்தன. காலின் பாதம் தடிமனாக இருந்தது. கால்கள் மென்மையாகவும், பளபளப்பாகவும் தண்ணீர் கூட வழுங்கி விழுமளவிற்கு இருந்தன. கால்களை எடுத்து வைக்கும் போது முழுமையாக எடுத்து வைப்பார்கள். நடை சீராகவும் கண்ணியமாகவும் இருந்தது. யாரையாவது திரும்பி பார்த்தால் முழுவதுமாக திரும்பி பார்ப்பார்கள். பார்வை எப்போதும் தாழ்ந்திருக்கும். அன்னார் எப்போதும் பாதி கண்ணால் பார்த்து வந்தார்கள். தனது சஹாபாக்களுக்கு பின்னாலே செல்வார்கள். அவர்கள் கவனத்தில் கொள்வார்கள்.

(ஷமாயில் திர்மிதி பாடம் ஃபீ கல்கி ரஸூலில்லாஹி (ஸல்)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அறிவிக்கிறார்கள்: நான் எனது மாமா ஹிந்த பின் அபீ ஹாலா அவர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உரைநடையைப் பற்றிக் கேட்ட போது அவர்கள் கூறினார்கள்.

எப்போதும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஏதோவொரு தொடர் மற்றும் ஆழ்ந்த சிந்தனையில் இருப்பது போன்று தோன்றும். மேலும் ஏதாவதொரு சிந்தனையில் இருப்பதால் நிம்மதியற்று இருப்பது போன்று தோன்றும். அன்னார் பெரும்பாலும் அமைதியாக இருப்பார்கள். தேவையில்லாமல் பேசமாட்டார்கள். பேசும் போது மிகத்தெளிவாக பேசுவார்கள். அன்னாரது பேச்சு சுருக்கமாகவும் ஆனால் தெளிவாகவும், ஞானம் நிறைந்ததாகவும் இருந்தது. மேலும் வீண் விஷயங்களிலிருந்து தவிர்ந்ததாகவும் இருந்தது. அன்னார் யாரையும் பழிந்துரைத்ததும் இல்லை.

ஏளனம் செய்ததுமில்லை. சின்னஞ்சிறு அருள்களைக் கூட பெரிதாக வெளிப்படுத்துவார்கள். அன்னாரிடம் நன்றியுணர்வு மிகைத்திருந்தது. எந்த பொருளையும் பழிந்துரைப்பதில்லை. மேலும் எந்தப் பொருளையும் தனக்கு மிகவும் பிடித்திருக்கிறது என்பது போன்று புகழ்வதில்லை. உணவு மற்றும் அருந்தும் விஷயத்தில் சுவை மற்றும் சுவையின்மையின் சமயத்தில் உலகமே வெடிக்கும் அளவிற்கு கோபப்படுவது அன்னாரது வழக்கமல்ல.

எப்போதும் நடுநிலையை கைக்கொள்வார்கள். உலக விஷயங்களுக்காக கோபமடைய மாட்டார்கள். தவறாக கருதவும் மாட்டார்கள். ஆனால் உண்மையை அவமதித்தால் அல்லது மறுத்தால் பிறகு அன்னாரது கோபத்திற்கு முன்பு யாராலும் நிற்க முடியாது. மேலும் இழப்பீடு கிடைக்கும் வரை நிம்மதியற்று இருப்பார்கள். தனக்காக ஒருபோதும் சினம் கொண்டதில்லை. பழிவாங்கியதுமில்லை. சைகை காட்டும் போது முழு கையினால் காட்டுவார்கள். விரல்களை மட்டும் அசைக்க மாட்டார்கள். மேலும அன்னார் ஆச்சரியப்படும் போது கைகளை திருப்பிக் கொள்வார்கள்.

ஏதாவதொரு விஷயத்தில் அழுத்தம் கொடுக்க வேண்டுமென்றால் ஒரு கையை மற்றொரு கையின் மீது அதாவது வலது உள்ளங்கையில் இடது கை பெருவிரலை அடிப்பார்கள். ஏதாவது விருப்பமில்லாத விஷயத்தை பார்த்தால் முகம் திருப்பிக் கொள்வார்கள். மேலும் மகிழ்ச்சியின் சமயத்தில் ஓரளவு கண்களை மூடிக் கொள்வார்கள். அன்னாரின் அதிகபட்ச சிரிப்பு புன்முறுவல் அளவுக்கே இருக்கும். சத்தமாக சிரிக்க மாட்டார்கள். அன்னார் சிரிக்கும் போது மேகத்திலிருந்து வெண்ணிற ஆலங்கட்டி விழுவது போன்று அன்னாரது பற்கள் தென்படும்.

(ஷமாயில் திர்மிதி பாடம் கைஃப கான கலாமி ரஸூலில்லாஹி ஸல்லல்லாஹு அலைஹிவ ஸல்லம்)

*(தொடர்ச்சி 32-வது பக்கம்....)*

# அவர் ஒரு பேரரசர், ஆன்மீக அரசர்களின் தலைவர். அவருக்கு உலகின் அனைத்து கருவூலங்களின் திறவுகோல்களும் வழங்கப்படும்

## ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றுகளிலிருந்து...

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

இணை வைப்பவர்கள் அசுத்தமானவர்கள், தீயவர்கள், படைப்பினங்களிலேயே மிகவும் மோசமானவர்கள், அறிவீனர்கள், ஷைத்தானின் சந்ததிகள், அவர்களின் வணக்கத்திற்குரியவை நரகத்தின் எரிபொருளாகும் என்ற வசனங்கள் இறங்கிய போது அபூதாலிப் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை அழைத்து, எனது சகோதரரின் மகனே! தற்போது உனது பழித்துரைத்தலினால் சமுதாயம் கோபமடைந்துள்ளது. மேலும் விரைவில் உன்னை அழித்து விடக்கூடும். என்னையும் கூட சேர்த்து அழிக்கக்கூடும். நீர் அவர்களின் புத்திமான்களை அறிவீனர்கள் என்றும் அவர்களின் பெரியவர்களை மோசமான படைப்புகள் என்றும், அவர்களின் கண்ணியத்திற்குரிய கடவுள்களை நரகத்தின் எரிபொருள் என்றும் பெயர் வைத்துள்ளாய்.

மேலும் அவர்கள் அனைவரும் தீயவர்கள், ஷைத்தானின் சந்ததிகள், கெட்டவர்கள் என்று ஆக்கியுள்ளாய். நான் நன்மையை நாடியவாறு உன்னிடம் கூறுகின்றேன். நீ உனது நாவை கட்டுப்படுத்திக் கொள். பழித்துரைப்பதை விட்டு விடு. என்னிடம் சமுதாயத்திற்கு எதிராக நிற்பதற்கு ஆற்றல் இல்லை என்று கூறினார்கள்.

அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், எனது சிறிய தந்தையே! இது பழித்துரைப்பதல்ல. மாறாக, இது உண்மையும் சத்தியமும் ஆகும். மேலும் இதுவே எனது வேலையாகும். இதற்காகத்தான் நான் அனுப்பப்பட்டுள்ளேன். இதற்காக மரணிக்க நேர்ந்தாலும் மகிழ்ச்சியாக அதனை ஏற்றுக் கொள்வேன். எனது வாழ்வு இந்த வழியிலேயே அர்ப்பமணாகும். நான் மரண பயத்தால் உண்மையை விட்டு விலக முடியாது. சிறிய தந்தையே! உங்களுக்கு இதனால் கஷ்டம், கவலை இருக்குமென்றால் என்னை உங்களது பாதுகாப்பில் இருந்து விடுவித்துக் கொள்ளுங்கள்.

இறைவன் மீது ஆணையாக! எனக்கு உங்களுடைய எந்தத் தேவையுமில்லை. நான் இறை கட்டளைகளை எட்ட வைப்பதிலிருந்து ஒருபோதும் தவிர்ந்திருக்க மாட்டேன். என்னுடைய இறைவனின் கட்டளைகள் எனது உயிரைவிட மிகவும் முக்கியமானதாகும். இறைவன் மீது ஆணையாக! ஒருவேளை இந்த வழியில் நான் கொல்லப்பட்டால் நான் மீண்டும் மீண்டும் உயிர் பெற்று எப்போதும் இந்த வழியிலேயே மரணிக்க விரும்புகின்றேன். இது அச்சப்படக்கூடிய இடமில்லை. மாறாக, இந்த வழியில் கஷ்டங்களை தாங்குவதில் எனக்கு எல்லையில்லா ஆனந்தம் ஏற்படுகிறது என்று கூறினார்கள்.

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சொற்பொழிவு ஆற்றிக் கொண்டிருந்தார்கள். மேலும் அவர்களது முகத்தில் உண்மையும், ஒளியும் நிரம்பிய அழுகையும் வெளிப்பட்டுக் கொண்டிருந்தது. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த சொற்பொழிவை முடித்தவுடன் உண்மையின் பிரகாசத்தை கண்ட அபூதாலிப் அவர்களின் கண்களிலிருந்து தன்னையும் அறியாமல் கண்ணீர் வழிந்தோடியது. மேலும் அவ்ரகள் நான் உனது உயர்வான நிலைமையை அறியாதவனாக இருந்தேன். நீயோ வேறொரு கோணத்தில் வேறொரு உயர்வில் இருக்கின்றாய். நீ சென்று உனது பணியை பார். எனக்குள் ஆற்றல் இருக்கும் வரை நான் உன்னுடன் இருப்பேன் என்று அவர்கள் கூறினார்கள்.

(இஸாலே அவ்ஹாம், ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 110)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள் :

அபூதாலிப் அவர்களது இந்த சம்பவம் நூல்களில் எழுதப்பட்டுள்ளது. ஆனால் இந்த அனைத்து வரிகளும் இல்ஹாம் ஆகும். இதனை இறைவன் இந்த எளியவனின் மனதில் இறக்கினான். ஒரு சில வரிகள் மட்டுமே விளக்கத்திற்காக என் புறமிருந்து கூறப்பட்டவையாகும். இந்த இல்ஹாமிய வார்த்தைகளிலிருந்து அபூதாலிப் அவர்களின் அனுதாபமும், கவலையும் தெரிய வருகிறது. ஆனால் நிச்சயமாக இந்த அனுதாபம் நுபுவ்வத்தின் ஒளிகளையும், உறுதியின் அடையாளங்களையும் பார்த்ததனால் ஏற்பட்டதாகும்.

நமது தலைவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நாற்பது வயது வரை உள்ள ஒரு பெரிய காலகட்டம் மிகவும் ஆதரவற்ற, கஷ்டமான ஓர் அநாதையின் நிலையில் இருந்தது. எந்தவோர் உறவினரும், அன்பரும் இந்த தனிமையின் காலகட்டத்தில் தனது உறவின், அன்பின் உரிமையை நிறைவேற்றவில்லை. எந்த அளவுக்கு என்றால் அந்த ஆன்மீக பேரரசர் தனது சிறிய வயதில் அனாதைகளைப் போன்று சில பாலைவன வாசிகள் மற்றும் நாடோடி பெண்களிடம் ஒப்படைக்கப்பட்டார்கள். அந்த கஷ்டமான ஏழ்மையான நிலையிலேயே படைப்பினங்களின் அந்த தலைவர் சிறு வயதினை கழித்தார்கள். சிறிது புரியும் திறன் கொண்ட வயதை அடைந்த போது அனாதை மற்றும் உலகில் எந்த உறவினரும் இல்லாத ஆதரவற்ற பிள்ளைகளைப் போன்று அந்த பாலைவனவாசிகள் உலகங்களின் அந்த சேவகரிடம் ஆடுகளை மேய்க்கும் வேலையை ஒப்படைத்தார்கள்.

அந்த கஷ்டகாலத்தில் மிகவும் சாதாரணமான தானியங்களையும், ஆடுகளின் பாலையும் தவிர வேறு உணவு கிடைத்ததில்லை. பருவ வயதினை அடைந்த போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவ்வளவு அழகாக இருந்தும் கூட எந்த சிறிய தந்தையும் அவர்களின் திருமணம் குறித்து கவலைப்படவில்லை. இருபத்தைந்து வயதை அடைந்த போது எதிர்பாராதவாறு இறையருளால் மட்டுமே மக்காவின் ஒரு தலைவி அன்னாரை திருமணம் செய்ய விரும்பினார்கள்.

இது மிகவும் ஆச்சரியத்திற்குரிய இடமாகும். ஏனென்றால் எந்த உயர் நிலையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சொந்த சிறிய தந்தைகள் அபூதாலிப், ஹம்ஸா மற்றும் அப்பாஸ் போன்றோர் இருந்தார்கள். குறிப்பாக அபூதாலிப் அவர்கள் மக்காவின் தலைவர் மற்றும் தனது சமுதாயத்தில் தலைவருமாக இருந்தார்கள். உலக செல்வங்கள் அதிகமாகவே அவரிடம் இருந்தது. இவ்வளவு வசதியான நிலையில் அவர்கள் இருந்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அந்த நாட்கள் மிகவும் கஷ்டத்திலும், பசியிலும், ஆதரவற்றும் தான் கழிந்தது. எந்த அளவுக்கென்றால் காட்டுவாசிகளின் ஆடுகளை மேய்க்கும் நிலை ஏற்பட்டது. இந்த கஷ்டமான நிலையைப் பார்த்து யாருக்கும் இரக்கம் ஏற்படவில்லை. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இளமை வயதினை அடைந்த போது எந்த சிறிய தந்தைக்கும் நாமும் தந்தையை போன்றவர்கள் தான். ஆகையால் அன்னாரது திருமணம் போன்ற முக்கியமான விஷயங்களின் பக்கம் கவனம் செலுத்த வேண்டும் என்ற சிந்தனை கூட யாருக்கும் வரவில்லை. எந்த அளவுக்கு என்றால் அவர்களது வீட்டிலும் அவர்களது உறவினர்கள் வீட்டிலும் பெண்கள் இருந்தனர்.

மேலும் இந்த இடத்தில் இயல்பாகவே ஒரு கேள்வி உருவாகிறது. அதாவது அவர்கள் ஏந்த இந்த அளவு கவனக்குறைவாக இருந்தார்கள்? இதற்கான பதில் இதுவேயாகும். அவர்கள் நமது தலைவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை தாய் தந்தையற்ற ஒரு அனாதையாகவும், வசதியில்லாதவராகவும் எந்த செல்வமும் இல்லாதவராகவும், எவ்வித வருமானம் இல்லாதவராகவும் கண்டனர். இப்படி கஷ்டப்படுபவருடன் அனுதாபம் கொள்வதனால் என்ன பயன் என அவர்கள் எண்ணினர். அவரை தனது மருமகனாக்கினால் தனது பிள்ளைகளையும் சேர்த்து கஷ்டத்தில் ஆழ்த்த வேண்டியவது வரும் என கருதினர். ஆனால் அவர்களுக்கு அன்னார் ஒரு பேரரசர், ஆன்மீக அரசர்களின் தலைவர், அவருக்கு உலகின் அனைத்து கருவூலங்களின் திறவுகோல்களும் வழங்கப்படும் என்பதை அவர்கள் அறிந்திருக்கவில்லை.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள் :

உண்மையான புகழுக்குரியவன் அல்லாஹ் மட்டுமே ஆவான். அவனை கண்களால் பார்க்க முடியாது. ஆனால் அவன் பார்வை வரை அடைகின்றான். அவனின் உண்மை நிலையை புரிவது என்பது இரவு பகலை விட எவ்வளவு தூரமோ அவ்வளவு தூரமாகும். அவன் திருக்குர்ஆன் மற்றும் தனது நபி (ஸல்) அவர்கள் மூலம் ஊர் மற்றும் காடுகளில் உள்ள அனைத்து மக்களிடமும் இஸ்லாத்தின் அழைப்பை எட்ட வைத்தான். மேலும் அன்பிற்குரிய நபி, காத்தமுன் நபிய்யீன், ஃபக்ருல் முர்ஸலீன் மீது தருதும் ஸலாமும் உண்டாவதாக.

அன்னார் ஆதாரங்களுடன் வந்தார்கள். அவர்கள் மக்களின் தேவைகளை நிறைவேற்றினார்கள். உலகத்தின் சீர்திருத்தத்தை தன்மீது சுமந்து கொண்டார்கள். ஆக ஆசைகளை கொண்டிருந்தவர்கள் ஆன்மீக கூட்டத்தில் இணைந்தார்கள். கோபப்படக்கூடியவர்கள், ஏசிப்பேசுபவர்கள் ஒழுக்கமுள்ளவர்களாகவும், பரிசுத்தமாகவும் ஆகினர். அல்லாஹ்வே! தனது அற்புதங்களினால் ஏனைய அனைத்து நபிமார்களையும் விட மேன்மைபெற்ற அந்த உம்மி நபி மீது தருது மற்றும் ஸலாமை இறக்குவாயாக. அன்னார் தனது வாழ்வு மற்றும் பண்பில் அனைத்து மேன்மையினையும் உள்ளடக்கி விட்டார்கள். தீயவர்களாகவும், நயவஞ்சகர்களாகவும் இருந்த மக்களிடம் அன்பை ஏற்படுத்தினார்கள். மேலும் ஏகத்துவவாதியாக இல்லாமல் இணை வைப்பவர்களாக இருந்த சமுதாயத்தினை சீர்திருத்தினார்கள். இறையச்சமில்லாமல் தீயவர்களாக இருந்தவர்களை, இறைவழியில் செல்லாமல் சுயமாக நடந்து கொண்டவர்களை தூய்மைப்படுத்தினார்கள்.

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எழுதப்படிக்கத் தெரியாதவராக இருந்தார்கள். உலகம் மற்றும் மார்க்கக் கல்வி எதையும் அவர்கள் கற்கவில்லை. அன்னார் படிக்கத் தெரியாத சமுதாயத்தில் வளர்ந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எந்த ஆலிமிடமும், அறிஞரிடமும சென்றதில்லை. தனது வீட்டை விட்டு வெளியே சென்றதுமில்லை. தனது நண்பர்கள் மற்றும் அண்டை அயலாரை விட்டு ஒருபோதும் பயணம் சென்றதில்லை. இவ்வாறிருந்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அனைத்து ஆலிம்கள் மற்றும் உலக மக்கள் அனைவரை விடவும் தனது அறிவு, ஆற்றல், அருள் மற்றும் பரக்கத்துகளில் முந்திச் சென்று விட்டார்கள். எந்த அளவுக்கு என்றால், அன்னாரது வழிகாட்டல்கள் கிழக்கிலுள்ளவர்களையும், மேற்கிலுள்ளவர்களையும், தன்னவர்களையும், அந்நியர்களையும் சூழ்ந்து கொண்டிருந்தது.

பாதுகாப்பு விரும்பும் ஒவ்வொருவரும் தனது கைகளை அன்னாரின் அருள் மற்றும் பரக்கத்தின் பக்கம் விரித்திருந்தனர். மக்களின் கைகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருள் மற்றும் நன்மையினை பெரும் பொருட்டு நீண்டிருந்தது. ஆக, அன்னார் மக்களுக்கு அமைதியின் வழியினை காட்டினார்கள். அவர்களுக்கு எல்லா விதமான பிளவிலிருந்தும், இருளிலிருந்தும் இரட்சிப்பை பெற்றுத் தந்தார்கள். அவர்களை ஒவ்வொரு நயவஞ்சகத்திலிருந்தும், சண்டை சச்சரவுகளிலிருந்தும் தூய்மைப்படுத்தினார்கள். மேலும் அன்னார் கண்களுக்கு ஒளியை வழங்கினார்கள். நல்லெண்ணத்தை உருவாக்கினார்கள். கைதிகளுக்கு விடுதலை வழங்கினார்கள்.

எந்த அளவுக்கு என்றால், அன்னார் மக்களின் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளும் மற்றும் இறை திருப்தியை பெறும் ஆன்மாவை உருவாக்கினார்கள். அவர்களது நிராகரிப்பின் உயர்வை குளிர்வித்தார்கள். அவர்களிடம் உறுதித் தன்மையை ஏற்படுத்தினார்கள். அவர்களை கொள்கைளில் வெற்றியடைவதற்கும் மற்றும் உறுதியாக இருப்பதற்கும் தயார் செய்தார்கள். அவர்கள் தனது பாதங்களில் நின்ற போது அவர்கள் தனது வழியையும், நோக்கத்தையும் கண்டனர். அவர்கள் தனது குறிக்கோளை நிர்ணயித்தனர். சுவையான மற்றும் சுத்தமான நீர் நிலையினை அவர்கள் சென்றடைந்தனர். அவர்கள் பரிசுத்தப்படுத்தப்பட்டார்கள். அவர்கள் எப்படிப்பட்ட கலப்பற்ற மற்றும் தூய்மையானவர்களாக அவர்கள் ஆக்கப்பட்டார்கள் என்றால் அவர்கள் மக்களிலேயே சிறந்தவர்கள் என்று அழைக்கப்பட்டார்கள்.

(கராமத்துஸ் ஸாதிக்கீன், உருது மொழியாக்கம் பக்கம் 5)

நாங்கள் கத்தே நுபுவ்வத் கொள்கையை நவூதுபில்லாஹ் மறுப்பவர்கள் ஆவோம் என்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது ஆட்சேபனை மற்றும் குற்றச்சாட்டானது முற்றிலும் அநீதியானதும் முட்டாள்தனமான ஆட்சேபனையும் ஆகும். இந்த பெயர் தாங்கி ஆலிம்கள் பொய்யுரைக்கின்றனர் என்றும் அது உண்மைக்கு முற்றிலும் புறம்பானது என்றும் அஹ்மதிய்யா ஜமாஅத் ஆரம்பத்திலிருந்து இன்று வரை வாதித்து வருகிறது. இவர்களுடைய கூற்றிற்கு உண்மையுடன் எவ்வித தொடர்பும் கிடையாது.

---

இன்றைய நாட்களில் நாம் பார்க்கின்ற ஆண்டு மாநாடுகளும் கூட அல்லாஹ்வின் கருணைக்கு சாட்சியாகும். அதுவன்றி நம்மிடமிருக்கின்ற காரணிகளால் உலகின் எல்லா மூளை முடுக்குகளிலும் இஸ்லாத்தின் உண்மை தூதினை நாம் எட்ட வைக்க முடிந்திருப்பது சாத்தியமற்றதாகும். ஆகு, இந்த பிரச்சாரப் பணிகளை இறைவன் தானே செய்கின்றான். மேலும் நாம் தொலைக்காட்சி வாயிலாகவும், சமூக வலைதளங்கள் மூலமாகவும் கத்மே நுபுவ்வத்தின் உண்மையினை உலகிற்கு எடுத்துரைப்பதும் தப்லீக்கின் ஒரு பகுதியாகும். ஏனெனில் அல்லாஹ் நம்மை இக்கடமைக்காக நியமித்துள்ளான்.

---

மேலும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகில் பரப்ப வேண்டும் என்பதே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வழிகாட்டலாகவும் இருக்கிறது. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு அல்லாஹ் வழங்கியதும் இக்கட்டளையை தான். மேலும் இக்காலகட்டத்தில் இஸ்லாத்தின் வெளியீட்டிற்காக இறைவன் நமக்கு வழங்கி இருக்கின்ற காரணிகள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தோடு தொடர்புடையவையாக இருந்தது. எனவே தப்லீக் செய்வதும், உலகிற்கு கத்மே நுபுவ்வத்தின் உண்மையான பொருள் என்னவென்பதையும் இஸ்லாத்தின் உண்மையான போதனை என்ன ? என்பதையும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வாதம் என்ன? என்பதையும் உலகிற்கு எடுத்துரைப்பது நம் அனைவரின் மீதான கடமையாகும்.

---

இறுதி நபித்துவ கொள்கை பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எடுத்துக்கூறிய ஞானம் நிறைந்த விளக்கங்கள்

---

அல்லாஹ் தனது நேசத்திற்குரியவரின் மார்க்கத்தை மறுபடியும் உலகில் அதன் அசல் வடிவில் நிலைநாட்டுவதற்காகவும், பரப்புவதற்காகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பினான். அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அவர் வெற்றியையும் பெற்றுத் தருவார் என்ற வாக்குறுதியுடன் அனுப்பப்பட்டிருக்கையில் அவருடைய வளர்ச்சியை உலக அரசங்களத்தால் ஏற்படுத்தப்படிருக்கும் தடைகளும், ஆலிம்களின் அநீதிகளும், பழிச்சொற்களும் எவ்வாறு தடுக்க முடியும். நான் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அடியாரின் போதனைக்கேற்ப அன்னாரது நோக்கத்தை செயல்படுத்தியவர்களாக இன்று உலகில் 210 நாடுகளில் காத்தமுன்னபிய்யீன் அவர்களின் கொடியை பறக்கவிட்டுள்ளோம்.

---

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபிமார்களின் காத்தம் என்பதிலும் திருக்குர்ஆன் வேதங்களின் காத்தம் என்பதிலும் எந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் காத்துமுல் குலஃபாவின் வருகையைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு அறிவித்திருந்தார்களோ, மேலும எவரிடம் தனது ஸலாத்தை எட்ட வைக்குமாறு கூறியிருந்தார்களோ அவரே ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் ஆவார்கள். மேலும் எந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத்தில் இணைந்ததால் பெயர் தாங்கி ஆலிம்கள் எங்களை காஃபிர்கள் என்றும், இஸ்லாத்தை விட்டும் வெளியேறியவர்கள் என்றும் கூறுகின்றனரோ அவர்களிடமிருந்தே அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பு மற்றும் நேசம் கொள்ளும் வழிமுறையை கற்றிருக்கிறோம்.

---

இன்று அஹ்மதிய்யதின் எதிரிகள் எதிரிகளின் இந்த எதிர்ப்பின் காரணத்தாலும், பகைவர்களின் பகைமையின் காரணத்தாலும் ஒவ்வொரு அஹ்மதியின் மீதும் முன்பை விட அதிகமாக பொறுப்புகள் உள்ளன. அவர்கள் தங்கள் ஈமானிய மற்றும் செயல்பாடுகளின் நிலையில் இறைவனை நமக்கு மிக அருகில் கொண்டு வந்து சேர்க்கும் அளவிற்கு மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.

---

காதியான் ஆண்டு மாநாட்டில் 44 நாடுகளைச் சேர்ந்த 20048 நபர்கள் கலந்து கொண்டார்கள்.

காதியானில் நடைபெற்ற உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஆண்டு மாநாட்டின் சந்தர்ப்பத்தில் 31 டிசம்பர் 2017 அன்று இலண்டனிலுள்ள **பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலிலுள்ள தாஹிர் ஹாலில்** M.T.A -வின் செயற்கைக்கோள் தொடர்புகள் மூலம் சய்யிதுனா அமீருல் முஃமினீன் **ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ்** (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் நேரலை மூலமாக ஆற்றிய நிறைவு சொற்பொழிவு

أَشْهَدُ أَنْ لَا إِلٰهَ إِلَّا اللّٰهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ وَأَشْهَدُ أَنَّ مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ
أَمَّا بَعْدُ فَأَعُوذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ - بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ
اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعَالَمِيْنَ. الرَّحْمٰنِ الرَّحِيْمِ. مٰلِكِ يَوْمِ الدِّيْنِ. إِيَّاكَ نَعْبُدُ
وَ إِيَّاكَ نَسْتَعِيْنُ. اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ. صِرَاطَ الَّذِيْنَ أَنْعَمْتَ عَلَيْهِمْ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ.

அஹ்மதிய்யத்தின் எதிரிகள் இன்றைய தினங்களிலும், எப்போதும் தங்களது எண்ணப்படி ஒரு குற்றச் சாட்டை வைக்கின்றனர். மேலும் அது எவ்வாறான குற்றச்சாட்டு என்றால் அவர்களது கருத்துப்படி அது அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தை இஸ்லாத்தின் வட்டத்தை விட்டும் வெளியேற்றுகிறது. இன்றைய தினங்ளில் என்று நான் கூறியதன் காரணம், இந்த குற்றச்சாட்டு எப்போதும் இருக்கத்தான் செய்கிறது. ஆனால் இன்றைய தினங்களில் அஹ்மதிய்யா ஜமாஅத் நவூதுபில்லாஹ் கத்மே நுபுவ்வத்

கொள்கையை மறுக்கிறது என்ற குற்றச்சாட்டு அதிகமாக சுமத்தப்படுகிறது. அவர்கள் தங்களது குற்றச்சாட்டில் உண்மையாளர்களாயின் நிச்சயமாக அவர்கள் கூறுவது உண்மையாகும். ஆனால் இது ஒரு மிகப்பெரிய பொய் ஆகும். இது எப்படிப்பட்ட பொய் என்றால் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்திற்கும் இதற்கும் முற்றிலும் தொடர்பு கிடையாது. மாறாக, எங்களது நம்பிக்கையும், மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான நேசரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹும் கூறுவது யாதெனில், எவரொருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன் நபிய்யீனாக ஏற்கவில்லையோ அவர் காஃபிரும் இஸ்லாத்தை விட்டு வெளியேறியவரும் ஆவார் என்பதாகும்.

ஆக நாங்கள் கத்தே நுபுவ்வத் கொள்கையை நவூதுபில்லாஹ் மறுப்பவர்கள் ஆவோம் என்று அஹ்மதிய்யா ஜமாஅத்தின் மீது செய்யப்படும் ஆட்சேபனை மற்றும் குற்றச்சாட்டானது முற்றிலும் அநீதியானதும் முட்டாள்தனமான ஆட்சேபனையும் ஆகும். ஒருபுறம் நாங்கள் எங்களை முஸ்லிம் என்று கூறிக்கொண்டு மறுபுறம் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் தோற்றுநரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் கூற்றின்படி கத்மே நுபுவ்வத் கொள்கையை ஏற்றும் கூட காஃபிராகி விடுவதா?

இந்த பெயர் தாங்கி ஆலிம்கள் பொய்யுரைக்கின்றனர் என்றும் அது உண்மைக்கு முற்றிலும் புறம்பானது என்றும் அஹ்மதிய்யா ஜமாஅத் ஆரம்பத்திலிருந்து இன்று வரை வாதித்து வருகிறது. ஆனால் பொது முஸ்லிம்களை அவர்கள் எந்த அளவுக்கு பயமுறுத்துகின்றனர் எனில் அஹ்மதிகள் என்ன கூறுகிறார்கள் என்று சாதாரணமாக சிந்திப்பதற்கும், புரிந்து கொள்வதற்கும், கேட்பதற்கும் கூட தயாராக இருப்பதில்லை.

ஆனால் இதன் பால் எவர் கவனம் கொண்டு எங்களது விஷயத்தைக் கேட்டு திருக்குர்ஆன் மற்றும் நபிமொழியை புரிந்து கொள்கின்றாரோ அவர்கள் உண்மையில் அஹ்மதி முஸ்லிம்கள் தான் உண்மையான முஸ்லிம்கள் என்றும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை நேசரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் அவர்களை ஏற்றுக் கொண்டு தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அந்தஸ்தை அறிய முடியும் என்பதையும் ஏற்றுக் கொள்கின்றனர்.

துணைக்கண்டமான இந்தியா மற்றும் பாகிஸ்தானின் பெரும் ஆலிம்கள் தங்களது சுய இலாபத்தைக் கருத்தில் கொண்டு தங்களடு மடமையினை மறைப்பதற்காக எவ்வாறாலும் அவர்களது பகுதியிலிருக்கும் முஸ்லிம் பெருமக்களை அஹ்மதிகளுக்கருகிலும் வராமலிருக்கச் செய்ய முழு மூச்சில் இறங்கியுள்ளனர்.

இதே போன்று மற்ற இஸ்லாமிய நாடுகளிலும் அஹ்மதிகளுக்கு அவப்பெயரை ஏற்படுத்த முயன்று வருகின்றனர். மேலும் தற்போது அவர்களது நிலை யாதெனில் ஒரு பெரும் கூட்டத்தை அவர்கள் ஆப்பிரிக்காவிற்கு அனுப்ப தொடங்கி விட்டனர். அங்கிருந்தும் செய்திகள் வருகின்றன. அவர்களிடம், நீங்கள் அஹ்மதிய்யத்தை விட்டு விடுங்கள். நாங்கள் உங்களுக்கு பள்ளிவாயில் கட்டித் தருகிறோம். நாங்கள் உங்களுக்கு உதவுகிறோம் என்ற ஆசை காட்டுகின்றனர். ஆனால் இஸ்லாம் என்றால் என்னவென்று தெரிந்திராக அவர்களிடம் அந்த முஸ்லிம்கள் அஹ்மதிய்யத்தின் மூலமாக உண்மை இஸ்லாத்தை, தொழுகையை, திருக்குர்ஆனைக் கற்று அல்லாஹ்வின் அருளால் உறுதியாக இருக்கும் இந்த புதிய அஹ்மதிகள்தான் இத்தனை வருடங்களாக உங்களுக்கு நினைவு வரவில்லையா? இன்று அஹ்மதிய்யா ஜமாஅத் வந்து எங்களுக்கு திருக்குர்ஆனை ஓதிக்கொடுத்து, எங்களுக்கு பள்ளிவாயிலைக் கட்டிக் கொடுத்து, எங்களது பிள்ளைகளை சீர்திருத்தி, அவர்களுக்கு திருக்குர்ஆனையும், தொழுகையையும் கற்றுத்தந்து மார்க்க அறிவை கொடுத்ததும் உங்களுக்கு நினைவு வந்ததா ? எங்களிடமிருந்து சென்று விடுங்கள். ஒருபோதும் நாங்கள் உங்களது கூற்றைக் கேட்க தயாரில்லை என்று கூறுகின்றனர்.

ஆயினும் அவர்கள் தங்களது முயற்சியில் ஈடுப்பட்டுள்ளனர். ஆனால் இந்த மனித முயற்சிகள் மற்றும் திட்டங்கள் இறைவனது திட்டங்களுக்கு முன் நிலைத்திருக்க முடியாது என்பதை அவர்கள் நினைவில் கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் நியதி யாதெனில் அவன் வாக்களிக்கப்பட்ட மஸீஹை ஏற்றவர்களை அதிகரிக்கச் செய்வதே ஆகும் – இன்ஷா அல்லாஹ்.

எனவே அஹ்மதிய்யத்தின் முன்னேற்றத்தை எவ்வகையிலும் தடுக்க முடியாது என்பதில் அஹ்மதிகளாகிய நமக்கு சிறிதும் ஐயமில்லை. அல்லாஹ் வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு, நான் உம்மை கண்ணியப்படுத்தி உயர்த்துவேன் என்ற இல்ஹாமை இறக்கியுள்ளான்.

(ஆஸ்மானீ ஃபைஸ்லா, ரூஹானி கஸாயின் தொகுதி 4 பக்கம் 342)

ஆயினும் அஹ்மதிய்யத்தின் எதிரிகளது கடின முயற்சிக்கு பிறகும் அதாவது இவர்கள் இஸ்லாத்தின் அடிப்படைக் கொள்கையை ஏற்றுக் கொள்வதில்லை என்று பகிரங்கப்படுத்தியும், நூற்றுக்கணக்கான ஆயிரக்கணக்கான மக்கள் அஹ்மதிய்யத்தில் தினமும் இணைவதை நாம் காண்கிறோம். மேலும் முஸ்லிம்களிலிருந்தும் ஜமாஅத்தில் இணைகின்றனர். அல்லாஹ் அன்னாருக்கு நான் உமது பிரச்சாரத்தை உலகின் எல்லை வரை எட்ட வைப்பேன் என்று கூறியுள்ளான்.

(அல்ஹகம் தொகுதி 2 இதழ் எண் 5,6 – 1898 மார்ச் 27 மற்றும் ஏப்ரல் 6 பக்கம் 13)

மேலும் சிலர் அவர்கள் எங்கிருக்கிறார்கள்? என்பதும், எவ்வாறு அவர்களுக்கு அஹ்மதிய்யத்தைப் பற்றி தெரிந்தது என்று நமக்கு தெரியாது. ஆனால் அவர்கள் முயற்சி செய்து நம்மை தொடர்பு கொண்டு இப்போது ஜமாஅத்தில் இணைய விரும்புகின்றனர். இன்றைய காலகட்டத்தின் வளர்ச்சிகள் இப்பிரச்சாரத்திற்கு தாமாகவே வழி வகுத்து விட்டன. பிறகு எதிரிகளின் செயல்கள், அவர்களது சொற்பொழிவுகள், சமூக வளைதளங்கள் வாயிலாக பரப்புகின்ற அவர்களது தவறான கருத்துக்கள் மற்றும் தங்களது சமூகத்தில் அஹ்மதிகள் தொடர்பாக பேசப்படுகின்ற அவர்களது கூற்றுக்கள் தான் பல நல்லியல்புடையோர்களை நம் பால் கவனமூட்டுகின்றன. ஆக இவை அல்லாஹ்வின் பணியாகும். இவற்றை மனித சூழ்ச்சிகளால் தடுக்க முடியாது.

மேலும் இன்றைய நாட்களில் நாம் பார்க்கின்ற ஆண்டு மாநாடுகளும் கூட அல்லாஹ்வின் கருணைக்கு சாட்சியாகும். அதுவன்றி நம்மிடமிருக்கின்ற காரணிகளால் உலகின் எல்லா மூலை முடுக்குகளிலும் இஸ்லாத்தின் உண்மை தூதினை நாம் எட்ட வைக்க முடிந்திருப்பது சாத்தியமற்றதாகும். ஆக, இந்த பிரச்சாரப் பணிகளை இறைவன் தானே செய்கின்றான். மேலும் நாம் தொலைக்காட்சி வாயிலாகவும், சமூக வலைதளங்கள் மூலமாகவும் கத்மே நுபுவ்வத்தின் உண்மையினை உலகிற்கு எடுத்துரைப்பதும் தப்லீக்கின் ஒரு பகுதியாகும்.

ஏனெனில் அல்லாஹ் நம்மை இக்கடமைக்காக நியமித்துள்ளான். மேலும் இஸ்லாத்தின் தூதுச் செய்தியை உலகில் பரப்ப வேண்டும் என்பதே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வழிகாட்டலாகவும் இருக்கிறது. மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹிற்கு அல்லாஹ் வழங்கியதும் இக்கட்டளையைத்தான். மேலும்

இக்காலகட்டத்தில் இஸ்லாத்தின் வெளியீட்டிற்காக இறைவன் நமக்கு வழங்கி இருக்கின்ற காரணிகள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலத்தோடு தொடர்புடையவையாக இருந்தன.

எனவே தப்லீக் செய்வதும், உலகிற்கு கத்மே நுபுவ்வத்தின் உண்மையான பொருள் என்னவென்பதையும் இஸ்லாத்தின் உண்மையான போதனை என்ன? என்பதையும், ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வாதம் என்ன? என்பதையும் உலகிற்கு எடுத்துரைப்பதும் நம் அனைவரின் மீதான கடமையாகும்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுன் நபிய்யீனாக இருப்பது பற்றியும், அன்னாரது உயர்ந்த அந்தஸ்து பற்றியும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் வார்த்தைகளிலேயே சிலவற்றை இன்று நான் எடுத்துரைப்பேன். அஹ்மதியல்லாத பல முஸ்லிம்களும் நமது நிகழ்ச்சிகளைக் காண்பவர்களாகவும் கேட்பவர்களாகவும் இருக்கின்றனர். அவர்களுக்கும் இவ்விஷயங்கள் வழிகாட்டக் கூடியவையாக விளங்குகின்றன.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள் :

திருக்குர்ஆனில் இறைவனின் இவ்வழிகாட்டலின் மீது எனக்கு முழு நம்பிக்கை உள்ளது. இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீன் என்று கூறியிருக்கின்ற அதே வேளையில் அன்னாரது ஷரீஅத்தையும் முழுமைபடுத்தி இருக்கின்றான். அல்யவ்ம அக்மல்து லகும் தீனகும் என்றும் பிரகடனப்படுத்தியுள்ளான். மார்க்கமும் முழுமை பெற்று விட்டது. நிஃமத்துகளும் முழுமை பெற்று விட்டன. மேலும் இறைவனை பொருத்தவரை இஸ்லாம்தான் பிடித்தமான மார்க்கமாகும். மேலும் இப்போது இறைத்தூதர் (ஸல்) அவர்களின் நடைமுறையை விட்டு விட்டு வேறு வழியினைப் பின்பற்றுவது பித்அத் ஆகும்.

அன்னார் எதிரிகளை விளித்துக் கூறினார்கள்: இப்போது கூறுங்கள். நீங்கள் கடைபிடிப்பவை நீங்களே உருவாக்கிக் கொண்ட செயல்களும், தரூதும் ஆகும். மேலும் புல்லே ஷாஹ்வின் வரிகள் போன்றவற்றை போதுமானதாகக் கருதி விடாதீர்கள். இவையே மார்க்கம் என்று எண்ணப்பட்டு விட்டது. அவர்களுடைய தொழுகைகளில் சுவை ஒன்றுமில்லை. மேலும் தொழுகைகளில் சுவையூட்டுவதற்குப் பதிலாக தங்களால் உருவாக்கப்பட்ட திக்ருகளில் அவர்களுக்கு ஈர்ப்பு அதிகமாகி விட்டது. தங்களது தலைப்பாகைகளை கழற்றி எறிந்து விட்டு ஆடல் பாடல்களில் ஈடுபட ஆரம்பித்து விடுகின்றனர். பாடுவது மட்டுமின்றி ஆடலும் ஆரம்பித்து விடுகிறது. கொண்டாடுகின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள் : ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் இவ்வாறான செயல்கள் நடைபெற்றனவா ? மேலும் அன்னார் கூறிய விஷயங்கள் வாக்களிக்கப்பட்ட மஸீஹின் காலகட்டத்தில் மட்டுமின்றி இன்னும் இவ்வாறான கூட்டங்கள் முஸ்லிம்களிடத்தில் நடைபெறுகின்றன. பங்க்டா (பஞ்சாபி நடனம்) ஆடுகின்றனர். இன்றைய நாட்களில் சமூக வலைதளங்களில் அவர்களுடைய செயல்பாடுகளை சாதாரணமாகவே காணலாம். அவர்கள் வித விதமான ஒப்பனை செய்து கொள்கின்றனர். எவ்வாறாயினும் நீங்கள் என்மீது, நான் நுபுவ்வத்திற்கான வாதத்தை செய்து விட்டேன். கத்மே நுபுவ்வத்தின் முத்திரையை உடைத்து விட்டேன். நான் ஒரு தனிப்பட்ட நுபுவ்வத்திற்கான வாதத்தை செய்கிறேன் என்று ஆட்சேபிக்கிறீர்கள்.

அன்னார் கூறுகிறார்கள் : என்னுடைய வாதம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அடிமைத்துவத்தில் இருந்தவாறு, அன்னாரது ஷரீஅத்தின்படி அமல் செய்வதும், செய்ய வைப்பதுமாகும். ஆனால் நீங்கள் உங்களையே பார்ப்பதில்லை. பொய்யான நுபுவ்வத்தை நீங்களே உருவாக்கியுள்ள அதே நேரத்தில் நபிக்கு மாற்றமாக, திருக்குர்ஆனுக்கு மாற்றமாக நீங்கள் புதுப்புது திக்ருகளை உருவாக்கியுள்ளீர்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூய போதனைகள் மற்றும் நடைமுறைக்கும் அதிகமாகவோ அல்லது குறைவாகவோ நாங்கள் ஏதும் செய்கின்றோமா அல்லது நீங்கள் செய்கின்றீர்களா என்ற நீதியுடன் நீங்களே கூறுங்கள். மேலும் அதே போன்று தொழுகையிலும் துஆக்களின் பக்கமும் கவனமில்லாத அல்லாஹு சபைகள் உள்ளன. மேலும் நாம் அறிந்திராத பல்வேறு சடங்குகளும் பித்அத்துகளும் உருவாக்கப்பட்டுள்ளன. பீர்கள், ஃபக்கீர்களின் அடக்கஸ்தலங்களில் ஸஜ்தா செய்கின்றனர். இஸ்லாமிய மார்க்கத்தில் இவ்வனைத்து பித்அத்களையும் தங்களுடைய நோக்கங்களைப் பெறுவதற்காக அவர்கள் இணைத்துள்ளனர்.

அன்னார் கூறினார்கள் : இந்த ஆட்சேபனையை என்மீது சுமத்தாதீர்கள். உங்களுடைய நிலைமையைப் பாருங்கள்.

(மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 88 – 90. 1985 ஆண்டு பதிப்பு இங்கிலாந்தில் வெளியிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்தைப் பற்றி எடுத்துரைத்தவாறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள் :

நினைவில் கொள்ளுங்கள். எப்பொழுது வரை ஒருவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீனாக உறுதியாக நம்பவில்லையோ, எப்பொழுது வரை மார்க்கத்திலில்லாத சடங்குகளிலிருந்து விலகவில்லையோ (அதாவது தமது மார்க்கத்தில் புதிது புதிதாக உருவாக்கியுள்ள பித்அத்துகளை விட்டு) மேலும் தனது சொல் மற்றும் நடைமுறையால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை காத்தமுன்னபிய்யீனாக ஏற்கவில்லையோ அப்போது வரை எவரும் உண்மையான முஸ்லிமாக ஆக முடியாது.

அன்னார் கூறுகிறார்கள் : ஸஅதி தன் கவிதையில் எவ்வளவு அழகாக கூறியுள்ளார். அதன் பொருள் இதுவாகும். இறையச்சம், உண்மை மற்றும் உளத்தூய்மைக்காக அவசியம் முயற்சி செய். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய வழிமுறைகளை விட்டு விடாதே என்பதாகும்.

அன்னார் கூறுகின்றார்கள் : என்னுடைய வருகையின் நோக்கம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்தையும் நுபுவ்வத்தையும் மீண்டும் நிலை நாட்டுவதே ஆகும்.

அன்னார் கூறுகின்றார்கள் : இறைவனால் மக்களுக்காக என்றைன்றைக்கும் நிலைநாட்டப்பட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நுபுவ்வத்தை நிலைசெயச் செய்யவும், மக்களால் தங்களது பித்அத்துகளின் மூலமாக உருவாக்கப்பட்ட அவ்வனைத்து பொய் நுபுவ்வத்துகளையும் (அதாவது பீர்கள் மற்றும் ஃபக்கீர்களின் சபைகள்) தூள் தூளாக ஆக்க வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும்தான் இறைவன் நமது உள்ளத்தில் அதீத உணர்வை இட்டிருக்கிறான். மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள கத்மே நுபுவ்வத்தின் மீது நாங்கள் நம்பிக்கை கொண்டுள்ளோமா அல்லது அவர்களா ? என்று செயல் ரீதியாக ஆராய்ந்து பாருங்கள்.

பிறிதோரிடத்தில் இவ்விஷயத்தை தொடர்ந்தவாறு அன்னார் கூறுகிறார்கள் :

கத்மே நுபுவ்வத் என்பதற்கு வாயளவில் காத்தமுன்னபிய்யீன் என்று ஏற்றுக் கொள்வதையே இறை விருப்பம் எனக் கொண்டு உங்களுக்கு பிடித்தமான செயல்களையே செய்து வந்து

தங்களுக்கென்று தனி ஷரீஅத்தை உருவாக்கிக் கொள்வது அநீதியும் தீய செயலுமாகும். அஹ்மதியல்லாதவர்கள் விநோதமான பல பித்அத்களை உருவாக்கியுள்ளார்கள். பக்தாதி தொழுகை, மாகூஸ் தொழுகை போன்றவற்றை உருவாக்கியுள்ளனர். திருக்குர்ஆன் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது நடைமுறையிலிருந்து எங்காவது இவ்வாறு தென்படுகிறதா ? அதே போன்று யா ஷைக் அப்துல் காதிர் ஜீலானி என்று கூறுவது திருக்குர்ஆனிலிருந்து எங்கேனும் நிரூபணம் ஆகிறதா? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது காலத்தில் ஷைக் அப்துல் காதிர் ஜீலானி அவர்கள் இருந்திருக்கவே இல்லை. பிறகு யார் இவ்வாறு கூறியது?

அன்னார் கூறுகிறார்கள் : வெட்கப்படுங்கள். இதற்குப் பெயர்தான் இஸ்லாமிய ஷரீஅத்தை பேணுவதும் கட்டுப்படுவதுமா?

அன்னார் கூறுகிறார்கள் : இந்த பித்அத்தான விஷயங்களை ஏற்றவர்களாக, அதனை செய்தவர்களாக இருந்து கொண்டு நான் காத்தமுன்னபிய்யீனின் முத்திரையை உடைத்து விட்டேன் என்று என்னை ஆட்சேபிப்பதற்கு நீங்கள் தகுதியானவர்கள்தானா? என்பதை நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள். உண்மை என்னவெனில், ஒருவேளை நீங்கள் உங்களுடைய பள்ளிவாயில்களில் பித்அத்களை நுழைய விடாமலிருந்து காத்தமுன்னபியீன் (ஸல்) அவர்களின் உண்மையான நுபுவ்வத்தின் மீது ஈமான் கொண்டு அன்னாருடைய நடைமுறைகளையும் அடிச்சுவட்டையும் தங்களது இமாமாக ஆக்கி அதன்படி சென்றிருநதால் பிறகு எனது வருகையின் அவசியம் நேர்ந்திருக்குமா?

அன்னார் கூறுகின்றார்கள் : உங்களுடைய பித்அத்களும் புதிய நுபுவ்வத்துகளும் அல்லாஹ்வின் தன்மானத்தை தூண்டியதால்தான் இந்த பொய்யான நுபுவ்வத்துகளின் சிலைகளை உடைத்து ஒன்றுமற்றதாக ஆக்குவதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் போர்வையில் ஒரு மனிதரை அனுப்பும் திட்டம் இறைவனுக்கு ஏற்பட்டது. இந்த பணிக்காகத்தான் இறைவன் என்னை அனுப்பியுள்ளான்.

அன்னார் கூறுகிறார்கள் : பீர், ஃபக்கீர்களுக்கு ஸஜ்தா செய்வதும் அவர்களது இடங்களை சுற்றி வருவதும் முற்றிலும் சாதாரணமான விஷயமாகி விட்டது.

பிறகு அன்னார் தனது வருகையின் நோக்கம் மற்றும் ஜமாஅத்தை தோற்றுவித்ததற்கான நோக்கத்தை எடுத்துரைத்தவாறு கத்மே நுபுவ்வத்தின் உண்மைத்துவத்தை விளக்கியவாறு மேலும் கூறுகிறார்கள்:

அல்லாஹ் இந்த ஜமாஅத்தை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நபித்துவத்தையும் கண்ணியத்தையும் மறுபடியும் நிலைநாட்டுவதற்காகவே நிறுவினான். மற்றவர்களது நேசராகக் கருதப்படும் ஒருவரைப் போன்று மேலும் ஆயிரக்கணக்கானோர் இருந்தால் அவர் மீதான அன்பு மற்றும் நேசத்தில் என்ன சிறப்பு இருந்துவிடப் போகிறது. பின்பு இவர்களது வாதத்தின்படி இவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மீதான் அன்பு மற்றும் நேசத்தில் தொலைந்தவர்கள் எனில் ஆயிரக்கணக்கான கபர்களை வணங்குவது எவ்வாறு உகந்ததாகும். ஒருபுறம் நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது அன்பில் தொலைந்திருக்கிறோம் என்று கூறிவிட்டு மறுபுறம் கபர்களிடம் துஆ கேட்பதற்காக மட்டும் செல்வதில்லை. வணங்கவும், பூஜை செய்யவும், ஸஜ்தா செய்யவும் செல்கின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள் : மதீனா தைய்யிபா செல்லத்தான் செய்கின்றார்கள். செல்வதும் சரியானதுதான். ஹஜ் மற்றும் உம்ராவிற்காகவும் செல்கின்றனர். துஆவும் செய்கின்றனர். ஆனால் அஜ்மீருக்கும் இதர அடக்கஸ் தலங்களுக்கும் வெறும் தலையுடன், வெறும் கால்களுடன் செல்கின்றனர். அவர்களுக்கும் அதே அந்தஸ்தை வழங்கியுள்ளனர். பாக் பத்தனின் (பாகிஸ்தானிலுள்ள ஓர் இடத்தின் பெயர்) ஜன்னல் வழியாகக் கடந்து செல்வதையே ஈடேற்றத்திற்கு போதுமானதாகக் கருதுகின்றனர். அங்குள்ள பெரியவரின் ஜன்னல் வழியாக கடந்து செல்வதனால் கதவு வழியாக கடந்து செல்வதனால் ஈடேற்றம் கிடைத்து விடும் என்றும் அவர்கள் பித்அத்துகளை உருவாக்கியுள்ளனர்.

அன்னார் கூறுகிறார்கள் : ஒருவர் ஒரு கொடியை நட்டு வைத்துள்ளாரெனில், வேறு வழிமுறைகளை கையாளுகின்றனர். அம்மக்களுடைய சந்தனக்கூடு மற்றும் விழாக்களைக் கண்டால் இவர்கள் என்னவெல்லாம் செய்கின்றனர் என்று ஓர் உண்மையான முஸ்லிமின் உள்ளம் பதபதைத்துப் போகும்.

அன்னார் கூறுகிறார்கள் : ஒருவேளை இறைவனுக்கு இஸ்லாத்தின் மீதான தன்மானம் இல்லாதிருந்தால் இன்னத்தீன இந்தல்லாஹில் இஸ்லாம் (ஆலி இம்ரான் : 20) என்பது இறைவனின் வார்த்தையாக இல்லாமலிருந்திருந்தால், இன்னா நஹ்னு நஸ்ஸல்னத் திக்ர வ இன்னா நன்னு ல ஹாஃபிழூன் (அல்ஹிஜ்ர் :10) என்பது அவனது வார்த்தையாக இல்லாமலிருந்திருந்தால் சந்தேகமின்றி இஸ்லாத்தின் நிலையானது அது அழிந்து விடுவதில் எவ்வித ஐயமும் இருந்திருக்க முடியாது. ஆனால் அல்லாஹ்வின் தன்மானம் பெருக்கெடுத்து அவனது கருணை மற்றும் பாதுகாப்பிற்கான வாக்குறுதியானது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய நிழலை மீண்டும் அனுப்பவும், இக்காலகட்டத்தில் அன்னாரது நுபுவ்வத்தை மறுபடியும் உயிர்ப்பித்துக் காட்டவும் நாடியது. எனவேதான் அவன் இந்த ஜமாஅத்தை நிறுவி என்னை நபியாகவும், மஹ்தியாகவும் ஆக்கி அனுப்பினான்.

எனவே அல்லாஹ் தனது நேசத்திற்குரியவரின் மார்க்கத்தை மறுபடியும் உலகில் அதன் அசல் வடிவில் நிலைநாட்டுவதற்காகவும், பரப்புவதற்காகவும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களை அனுப்பினான். அல்லாஹ்வால் அனுப்பப்பட்ட அவர் வெற்றியையும் பெற்றுத் தருவார் என்ற வாக்குறுதியுடன் அனுப்பப்பட்டிருக்கையில் அவருடைய வளர்ச்சியை உலக அரசங்களத்தால் ஏற்படுத்தப்பட்டிருக்கும் தடைகளும், ஆலிம்களின் அநீதிகளும், பழிச்சொற்களும் எவ்வாறு தடுக்க முடியும்? நான்தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மையான அடியாரின் போதனைக்கேற்ப அன்னாரது நோக்கத்தை செயல்படுத்தியவர்களாக இன்று உலகில் 210 நாடுகளில் காத்தமுன்னபிய்யீன் அவர்களின் கொடியை பறக்கவிட்டுள்ளோம்.

மேலும் அல்லாஹ் இந்த ஜமாஅத்தை என்ன காரணத்தால் நிறுவினான் என்பதை விளக்கியாவறு ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகிறார்கள் :

தற்போது இருவகையான ஷிர்க் உருவாகிவிட்டன. அவை இஸ்லாத்தை ஒன்றுமற்றதாக ஆக்குவதற்காக கடும் முயற்சிகளை மேற்கொண்டன. இறைவனின் அருள் மட்டும் இல்லாமலிருந்திருந்தால் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்ட அவனது விருப்பத்திற்குரிய மார்க்கத்தின் பெயரும் கூட மிஞ்சியிருக்காது. ஆனால் இன்னா நஹ்னு நஸ்ஸல்னத் திக்ர வ இன்னா நஹ்ன ல ஹாஃபிழூன் (15:10) என்று அவன் வாக்குறுதியளித்திருந்தான். இக்கட்டான சூழ்நிலையின் போது அந்த வாக்குறுதியை பாதுகாக்க நாடியான்.

அன்னார் கூறுகிறார்கள் : காவலாளியின் பணி சாட்சியங்களை விசாரிப்பதும், குற்றவாளிகளைக் கண்டு தமது திட்டத்தின்படி செயல்படுவதுமாகும். அதே போல் இன்றும் குழப்பக்காரர்கள் ஒன்று

கூடி விட்டனர். பல குழப்பங்கள் ஒன்று திரண்டு விட்டன. இஸ்லாத்தின் கோட்டையின் மீது அனைத்து விதமான எதிரிகளும் ஆயுதமேந்தி தாக்குதல் தொடுக்க ஆயத்தமாகி விட்டிருந்தனர். எனவே நுபுவ்வத் வழியிலான கிலாஃபத்தை நிலைநாட்ட இறைவன் நாடினான். இஸ்லாத்திற்கெதிராக இந்த சக்தி உண்மையில் நீண்ட காலமாக பல்கிக் கொண்டிருந்தன. இறுதியில் பிளந்து வந்து விட்டன. எவ்வாறு விந்து ஆரம்பத்திலிருக்குமோ அவ்வாறு இருந்து பின் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு குழந்தையாக வெளிவருமோ அவ்வாறே இஸ்லாத்தின் பகைமையின் குழந்தை வெளிவந்து விட்டது. மேலும் அது வளர்ச்சியடைந்தது. முழு ஆற்றலுடனும் உத்வேகத்துடனும் உள்ளது.

இதனைத்தான் நாம் இன்றைய நாட்களில் பார்க்கிறோம். உலகின் எல்லா பகுதிகளிலும் உலகவாதிகளும் இஸ்லாத்தை எதிர்க்கின்றனர். அவர்களுடைய நோக்கம் எல்லைகளைக் கைப்பற்றுவதும், அரசியல் ரீதியாக வலுப்பெறுவதும் ஆகும். ஆனால் இஸ்லாத்திற்கு அவப்பெயரை ஏற்படுத்தி அவர்கள் வலுவடைய விரும்புகின்றனர். இஸ்லாமிய நாடுகளின் செல்வங்களை அடையவும் நாடுகிறார்கள். அதாவது மார்க்க ரீதியாகவும் பௌதீக ரீதியாகவும் எல்லா வகையிலும் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் குறி வைக்கின்றனர். முழு உத்வேகத்துடனும் ஆற்றலுடனும் இந்த எதிர்ப்பு சூழ்ந்து விட்டது என்று அன்னார் கூறுகின்றார்கள்.

எனவே அதனை அழிப்பதற்காக இறைவன் விண்ணிலிருந்து ஒரு ஆயுதத்தை இறக்கினான். உட்புறமும் வெளிப்புறமும் உருவாகிவிட்டிருந்த ஷிர்க்கினை அகற்றவும், இறைவனின் ஏகத்துவத்தையும் வலிமையையும் நிலைநாட்டுவதற்காகவும் இந்த ஜமாஅத்தை நிறுவினான். உள்ளுக்குள் முஸ்லிம்களும் கபர்களின் வணக்கங்கள் புரிந்ததனால் ஒரு ஷிர்க் உருவாகி விட்டிருந்தது. வெளிப்படையில் அல்லாஹ்வை ஏற்றுக் கொண்டதனால் மக்கள் நிராகரிக்கத் தொடங்கி விட்டனர். ஷிர்க்கானது அதிகமாகிக் கொண்டே வருகிறது. உலக ஆசை எனும் ஷிர்க்கில் மூழ்கி விட்டனர்.

எனவே அன்னார் கூறினார்கள்: இவ்வாறான அனைத்து வித ஷிர்க்குகளையும் அகற்ற இறைவன் இந்த ஜமாஅத்தை நிறுவினான்.

அன்னார் கூறுகிறார்கள் : இந்த ஜமாஅத் இறைவனுடையதாகும். நான் வலியுறுத்திக் கூறுகின்றேன். எவ்வித ஐயமுமின்றி இது இறைவனிடமிருந்து வந்ததாகும். அவன் சுயமே தன் கையால் இதனை நிறுவினான். இவ்வாறாக அவன் இந்த ஜமாஅத்திற்காக வெளிப்படுத்த இருந்த தனது ஒத்துழைப்பையும், உதவியினையும் காட்டி விட்டான்.

(மல்ஃபூஸாத் பாகம் 3 பக்கம் 90 – 92. 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பிறகு அன்னார் மேலும் அதனை விளக்கியவாறு கூறுகிறார்கள்:

இறைவன் புறமிருந்து வருபவர்கள் இரு வகைப்படுவர். ஒருவர் ஷரீஅத்தைக் கொண்டு வருபவர். மற்றொருவர் ஷரீஅத்தைக் கொண்டு வந்தவரின் பணிகளை செயல்படுத்துவதற்காக இறைவன் புறமிருந்து வருகின்றனர்.

அன்னார் கூறுகின்றார்கள் : இறைவன் புறமிருந்து வரக்கூடிய நபி இரு பிரிவினராவர். ஒருவர் மூஸா (அலை) போன்று ஷரீஅத்தை உடையவர்கள். மற்றொருவர் ஹஸ்ரத் ஈஸா (அலை) போன்று ஷரீஅத்தை உயிர்ப்பிக்க வருபவர்கள். அதே போன்று நமது ஈமான் யாதெனில், நபித்துவத்தின் முத்திரையான நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முழுமையான ஷரீஅத்தைக் கொண்டு வந்தார்கள். எனவே காலத்தின் தகுதியானது கத்மே நுபுவ்வத்தாகி விட்டது.

எனவே ஹுஸூர் அவர்களுக்குப் பிறகு நாங்கள் வேறொரு ஷரீஅத்தைக் கொண்ட நபியின் வருகையை ஒருபோதும் ஏற்பவர்கள் அல்லர். எவ்வாறு நமது இறைத்தூதர் (ஸல்) அவர்கள் மூஸாவின் ஒப்புமையை உடையவராக இருக்கின்றார்களோ அவ்வாறு அன்னாருடைய சமுதாயத்தின் காத்தமாக, காத்தமுல் குலஃபாவாகிய வாக்களிக்கப்பட்ட மஸீஹும் ஹஸ்ரத் ஈஸா (அலை) அவர்களைப் போன்று வர வேண்டியதிருந்தது.

ஆக, நான்தான் அந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹும், காத்தமுல் குலஃபாவும் ஆவேன். ஈஸா எந்தவொரு ஷரீஅத்தையும் கொண்டு வரவில்லை. ஆனால் மூஸாவின் ஷரீஅத்தை உயிர் பெறச் செய்ய வந்தார்கள். நானும் எந்தவொரு புரிய ஷரீஅத்தையும் கொண்டு வரவில்லை. மேலும் திருக்குர்ஆனுக்குப் பிறகு வேறெந்த ஷரீஅத்தும் வர முடியும் என எனது உள்ளம் ஒருபோதும் ஏற்காது. ஏனெனில் அது முழுமையான வேதமும் வேதங்களுக்கெல்லாம் காத்தமாகும். அவ்வாறே இறைவன் என்னை முஹம்மதிய்ய ஷரீஅத்தை உயிர்பெறச் செய்ய இந்நூற்றாண்டில் காத்தமுல் குலஃபாவாக அனுப்பியுள்ளான். இலட்சக்கணக்கான மக்களிடையே எப்போதும் பரப்பப்படுகின்ற, அச்சிடப்படுகின்ற, வீணடிக்கப்படாத இறைவன் புறமிருந்து எனக்கு கிடைத்த இறைவனின் இல்ஹாம்கள் வீணாகிவிடாது. அவை நிலைத்திருக்கும்.

(மல்ஃபூஸாத் தொகுதி 2 பக்கம் 272. 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சிடப்பட்டது)

பிறகு அன்னார் உறுதியான வார்த்தைகளால் இவ்வாறு கூறினார்கள், நான் அடைந்த அனைத்தும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளினால்தான்.

ஆகவே இது பற்றி ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவ்ரகள் கூறுகிறார்கள் :

நான் சத்தியமாகக் கூறுகிறேன். ஒட்டுமொத்த நன்மைகளையும், புகழையும் அனைத்து அழகிய பண்புகளையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பால் திருப்பவே எனது உள்ளத்தின் உண்மையான ஆசையாகும். என்னுடைய எல்லா விதமான மகிழ்ச்சியும் இதில்தான் உள்ளது. இறைவனது ஏகத்துவத்தையும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கண்ணியத்தையும் உலகில் நிலைநிறுத்தவே நான் அனுப்பப்பட்டதன் முக்கிய நோக்கமாகும். என்னைப் பற்றி எத்துணை புகழ்ச்சியின் வாசகங்களையும், கண்ணியப்படுத்தும் விஷயங்களையும் அல்லாஹ் கூறியுள்ளானோ அவையனைத்தும் உண்மையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை நோக்கியே திரும்புகிறது என்பதை நான் நிச்சயமாக அறிவேன்.

அதாவது அவர்களையே சார்ந்துள்ளது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு நன்றி செலுத்தவே ஆகும். அன்னாருடைய அருளினாலேயே ஆகும்.

அன்னார் கூறுகிறார்கள் : ஏனெனில் நான் அன்னாரது அடிமையே ஆகும். அன்னாரது நுபுவ்வத்தின் தீபத்திலிருந்து ஒளியினைப் பெற்றவனாவேன். அதுவன்றி வேறொன்றும் நமக்கென்று நிரந்தமானது இல்லை. இது தொடரப்பாக எனது உறுதியான கொள்கை யாதெனில், ஒருவேளை எவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடமிருந்து அருளைப் பெறாமலேயே சுதந்திரமான நபி ஆவேன் என்று வாதிப்பாரெனில் அவன் சபிக்கப்பட்டவனும், இழிவிற்குரியவனும் ஆவான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கட்டுப்படாமல் எவரும் இறைவன் புறமிருந்து வர முடியாது என்பதில் நிரந்தரமாக இறைவனது முத்திரை

இடப்பட்டுவிட்டது. (மல்ஃபூஸாத் தொகுதி 3 பக்கம் 287 – 1985 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் அச்சடிக்கப்பட்டது)

அல்லாஹ்வின் பால் செல்வதற்கும், அல்லாஹ்வை அடைவதற்குமான ஒரே வழி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களே ஆவார்கள். ஆக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காத்தமுல் அன்பியா ஆவார்கள் என்பதும், திருக்குர்ஆன் வேதங்களுள் காத்தம் என்பதும் எங்களது ஈமானின் அங்கமாகும். மேலும் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் எவ்வித புது ஷரீ அத்தையும் கொண்டு வரவுமில்லை. வேறெவரும் புதிய ஷரீ அத்தைக் கொண்டு வரவும் முடியாது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயர்ந்த அந்தஸ்தின் எதிர்பார்ப்பின் காரணத்தினாலேயே இறைவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பின்பற்றி வந்த காரணத்தாலும் அன்னாரது அடிமைத்துவத்தில் வந்த காரணத்தினாலும் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு நபியின் அந்தஸ்தை வழங்கினான். மேலும் வேதத்தையுடைய நபியின் அடிமைத்துவத்தின் காரணத்தாலும், வேறெந்தவொரு நபியின் அடிமைத்துவத்தின் காரணத்தாலும் நபியின் அந்தஸ்து கிடைக்கப்பெற்ற வேறெந்த நபியும் இல்லை.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நபிமார்களின் காத்தம் என்பதிலும் திருக்குர்ஆன் வேதங்களின் காத்தம் என்பதிலும் எந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹ் மற்றும் காத்துமுல் குலஃபாவின் வருகையைப் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நமக்கு அறிவித்திருந்தார்களோ, மேலும் எவருக்கு தனது ஸலாத்தை எட்ட வைக்குமாறு கூறியிருந்தார்களோ அவரே ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்கள் ஆவார்கள். மேலும் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உண்மை அடியார் என்பதும் எங்களின் நம்பிக்கையாகும். மேலும் அந்த நம்பிக்கையில் நாங்கள் நிலைத்திருக்கின்றோம்.

(அல்முஃஜிமில் அவ்ஸத் தொகுதி 3 பக்கம் 383,384. ஹதீஸ் எண் 4898, பாபுல் ஜன் மின் இஸ்முஹூ ஈஸா, தாருல் ஃபிக்ரி அம்மான் பதிப்பகம் 1999)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை விட ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களுக்கு எந்த அஹ்மதி உயர் அந்தஸ்தை வழங்குகின்றாரோ அவர் நிச்சயமாக முஸ்லிம் இல்லை. நான் முன்னரும் கூறியது போன்று மற்ற முஸ்லிம் ஆலிம்களும், அரசாங்கங்களும், நாங்கள் கத்மே நுவுவ்வத்தை நம்புவதில்லை என்றும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை இறுதி நபியாக ஏற்றுக்கொள்வதில்லை என்றும் எங்களுக்கெதிராக எல்லா விதமான மார்க்கத் தீர்ப்புகளையும் வழங்கி அஹ்மதிகளுக்கு துன்பமிழைக்கவும், கொலை செய்யவும் பாமர முஸ்லிம்களைத் தூண்டுகின்றனர். ஆயினும் எங்களுடைய ஈமானை ஒருபோதும் சிதறடிக்க முடியாது – இன்ஷா அல்லாஹ். ஏனெனில் நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எங்களிடம் நாடியவற்றை அடைந்திருக்கின்றோம். மேலும் எந்த வாக்களிக்கப்பட்ட மஸீஹின் ஜமாஅத்தில் இணைந்ததால் பெயர் தாங்கி ஆலிம்கள் எங்களை காஃபிர்கள் என்றும், இஸ்லாத்தை விட்டும் வெளியேறியவர்கள் என்றும் கூறுகின்றனரோ அவர்களிடமிருந்தே அல்லாஹ் மற்றும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீது அன்பு மற்றும் நேசம் கொள்ளும் வழிமுறையை கற்றிருக்கிறோம்.

இன்று அஹ்மதிய்யதின் எதிரிகள் எதிரிகளின் இந்த எதிர்ப்பின் காரணத்தாலும், பகைவர்களின் பகைமையின் காரணத்தாலும் ஒவ்வோர் அஹ்மதியின் மீதும் முன்பை விட அதிகமாக பொறுப்புகள் உள்ளன. அவர்கள் தங்கள் ஈமானிய மற்றும் செயல்பாடுகளின் நிலையில் இறைவனை நமக்கு மிக அருகில் கொண்டு வந்து சேர்க்கும் அளவிற்கு மாற்றத்தைக் கொண்டு வர வேண்டும்.

அன்னார் கூறுகிறார்கள்: ஒருவேளை விண்ணின் இறைவனுடன் நமது உறுதியான தொடர்பு இருக்குமெனில் இந்த பூலோக பகைவர்களால் நம்மை ஒன்றும் செய்து விட முடியாது.

(நூஹ் நபியின் கப்பல், ரூஹானி கஸாயின் தொகுதி 18 பக்கம் 15)

விண்ணின் இறைவனுடன் நமது தொடர்பை உருவாக்கிக் கொள்ள முயற்சி செய்ய வேண்டும். நிச்சயமாக அந்த நாள் வரவிருக்கிறது. அப்போது எல்லா எதிரிகளும் காற்றாக மாறிவிடுவார்கள். பகைவர்கள் தலை குப்புற விழுந்து விடுவார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களிடம் செய்த அனைத்து வாக்குறுதிகளும் நிறைவேறும். ஆனால் அதற்காக நான் கூறியது போன்று நம்முள் ஒரு தூய மாற்றத்தை உருவாக்க வேண்டியுள்ளது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் நமது ஈமானிய செயல்பாடுகளில் எத்தகைய தரத்தை காண விரும்புகின்றார்கள் என்பது குறித்து அன்னார் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

என்னுடைய பைஅத்தில் இணைந்திருக்கின்ற என் நண்பர்களே! இறைவன் திருப்தி அடைகின்ற விஷயங்களை அடைவதற்கான நல்வாய்ப்பை எனக்கும் உங்களுக்கும் இறைவன் வழங்குவானாக. இன்று நீங்கள் சிறிய எண்ணிக்கையில் உள்ளீர்கள். ஏளனமாகப் பார்க்கப்படுவீர்கள். தொன்றுதொட்டே நடந்து வரும் அதே இறை நடைமுறைக்கேற்ப உங்கள் மீதும் ஒரு சோதனைக்குரிய காலம் வரவுள்ளது. நீங்கள் தடுமாற வேண்டுமென்று எல்லா புறங்களிலிருதும் முயற்சிகள் மேற்கொள்ளப்படும். நீங்கள் எல்லா வகையிலும் துன்புறுத்தப்படுவீர்கள். மேலும் பல விதமான பேச்சுக்களை நீங்கள் கேட்க வேண்டியது வரும். உங்களுக்கு நாவாலும், கைகளாலும் துன்பமிழைக்கின்ற ஒவ்வொருவரும் இஸ்லாத்திற்கு பேருதவி செய்கின்றோம் என்றே எண்ணுவர். நீங்கள் எல்லா விதத்திலும் சோதிக்கப்பட வேண்மென்பதால் சில இறை சோதனைகளும் உங்களுக்கு வரும்.

அப்போது நன்றாக கேட்டுக் கொள்ளங்கள். வெற்றி பெறவும், மேலோங்கவும், நீங்கள் உங்களுடைய வரட்டு வாதங்களாலும், கேலி கிண்டலுக்கு பதிலாக கேலி கிண்டல் செய்வதும், பழிச்சொல்லுக்கு பதிலாக பழித்துரைப்பதுமான வழிமுறைகள் மேற்கொள்வதும் ஏற்புடையதல்ல. ஏனெனில் நீங்கள் இந்த வழிமுறையைக் கையாண்டால் உங்களது உள்ளங்கள் கடினமானதாகி விடும். மேலும் உங்களிடம் இறைவன் வெறுக்கின்ற, வெறுக்கத்தக்க பார்வையுடன் பார்க்கின்ற அந்த பேச்சுக்கள் மட்டுமே எஞ்சியிருக்கும். எனவே நீங்கள் உங்கள் மீது படைப்பினங்களுடையதும், இறைவனுடையதுமாகிய இரு சாபங்களைப் பெற்றுக் கொள்ளாதீர்கள்.

அன்னார் கூறுகின்றார்கள் : நினைவில் கொள்ளுங்கள். மக்களுடைய சாபம் இறைவனுடைய சாபத்துடனிருக்கவில்லையென்றால் ஒரு பொருட்டுமில்லை. ஒருவேளை இறைவன் நம்மை அழிக்க நாடவில்லை என்றால் நம்மை வேறு யாராலும் அழிக்க முடியாது. ஆனால் நமது அவனே நமது எதிரியாகி விட்டால் நம்மை யாராலும் காப்பாற்ற முடியாது.

அன்னார் கூறுகின்றார்கள் : நாம் எவ்வாறு இறைவனை திருப்தியடையச் செய்ய முடியும். அவன் எவ்வாறு நம்முடன் இருப்பான் என்பதற்கு இறைவன் எனக்கு அடிக்கடி வழங்கிய பதில் இறையச்சத்தால் என்பதாகும். ஆகவே இறையச்சத்தை உருவாக்க வேண்டிய அவசியம் உள்ளது. மேலும் இறையச்சத்தில் மேம்பட வேண்டிய அவசியம் நமக்கு உள்ளது. மேலும் இறையச்சம் யாதெனில் அனைத்து நன்மைகளிலும் நாம் முன்னேறிச் செல்ல முயற்சிக்க வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள்: எனதருமை சகோதரர்களே! இறையச்சமுடையவராக ஆகுவதற்கு நீங்கள் முயற்சி செய்யுங்கள். செயலின்றி அனைத்து விஷயங்களும் வீணானவையாகும். மேலும் உளத்தூய்மையின்றி எந்தவொரு செயலும் ஏற்றுக் கொள்ளப்படாது. ஆக இறையச்சம் யாதெனில் அவ்வனைத்து தீங்குகளிலிருந்தும் தவிர்ந்திருந்தவாறு இறைவன் புறம் அடியெடுத்து வையுங்கள். மேலும் இறையச்சத்தின் நுண்ணிய வழிகளையும் கவனத்தில் கொள்ளுங்கள். அனைத்தையும் விட முதலாவதாக உங்களுடைய உள்ளத்தில் பணிவு மற்றும் தூய்மையை உருவாக்குங்கள். மேலும் உண்மையாகவே உள்ளத்தால் மென்மையானவராகவும், அமைதியானவராகவும், பணிவுடையவராகவும் ஆகிவிடுங்கள். அனைத்து நன்மை மற்றும் தீமைகளின் விதை முதலில் உள்ளத்தில்தான் உருவாகிறது. ஆதலால் உள்ளத்தில் மென்மையை உருவாக்குங்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: உங்களது உள்ளம் தீங்கற்றதாக இருக்கிறதெனில் உங்களது நாவும் தீங்கற்றதாக ஆகிவிடும். அவ்வாறே உங்களது கண்களும், உங்களது அனைத்து உறுப்புகளும் தீங்கற்றதாக ஆகிவிடும். எல்லா ஒளியும் இருளும் முதலில் உள்ளத்தில் தன் உருவாகும். பிறகு மெது மெதுவாக முழு உடலிலும் பரவி விடும்.

அன்னார் கூறுகின்றார்கள்: எனவே உங்களது உள்ளத்தை எப்போதும் சோதித்துக் கொண்டே இருங்கள். வெற்றிலையை சுவைப்பவர் தனது வெற்றிலைகளை பரிசோதித்துக் கொண்டே இருப்பார். வீணான பகுதியை வெட்டி வெளியே எறிந்து விடுவார். அதே போன்று நீங்களும் உங்களது உள்ளங்களின் மறைமுக எண்ணங்களையும், மறைமுக பழக்கங்களையும், மறைமுக உணர்ச்சிகளையும், மறைமுக ஆற்றல்களையும் உங்களது கண்காணிப்பில் வைத்துக் கொள்ளுங்கள். மேலும் உங்களது முழு உள்ளமும் அசுத்தமாகி நீங்களும் வெட்டப்படாமலிருக்க எந்த எண்ணத்தை, பழக்கத்தை, ஆற்றலை வீணானதாகக் கருதுவீர்களோ அவற்றை வெட்டி வெளியே எறிந்து விடுங்கள்.

அன்னார் கூறுகின்றார்கள்: அதன் பிறகு உங்களது உள்ளங்களின் தூய எண்ணங்கள், தூய நோக்கங்கள், தூய உணர்வுகள் மற்றும் தூய விருப்பங்கள் யாவும் உங்களது உறுப்புகள் மற்றும் அனைத்து ஆற்றல்களின் வாயிலாக வெளிப்பட்டு முழுமையைப் பெற வேண்டி நீங்கள் முயற்சி செய்யுங்கள். மேலும் இறைவனிடத்தில் ஆற்றலையும் தைரியத்தையும் கேளுங்கள். அதாவது செயல் ரீதியாகவும் அது வெளிப்பட வேண்டும். அப்போதுதான் உங்களது நன்மைகள் உச்சத்தை எட்டும். ஏனெனில் எவ்விஷயம் உள்ளத்திலிருந்து வெளிப்பட்டு உள்ளத்திலேயே அடைபட்டு விடுகிறதோ அவை எந்த வித மேன்மையையும் அடையச் செய்யாது.

அன்னார் கூறுகிறார்கள்: இறைவனது மேன்மையை உங்களது உள்ளத்தில் நிலைபெறச் செய்யுங்கள். அவனது வல்லமையை உங்கள் கண்முன் நிறுத்துங்கள். திருக்குர்ஆனில் சுமார் ஐநூறு கட்டளைகள் உள்ளன என்பதை நினைவில் கொள்ளுங்கள். மேலும் அவன் உங்களுடைய அனைத்து உறுப்புகள், ஆற்றல்கள், நடவடிக்கைகள் மற்றும் அனைத்து நிலைமைகளையும் ஒட்டுமொத்த வாழ்வினையும் ஒட்டுமொத்த ஞானத்தின் தரத்தையும், இயல்வின் தரத்தையும், நடத்தையின் விதத்தையும் தனிப்பட்ட மற்றும் ஒருங்கிணைந்த தரத்தின் அடிப்படையிலும் ஓர் ஒளிமயமான அழைப்பை உங்களுக்கு வழங்கியிருக்கிறான்.

எனவே அறிவின் அடிப்படையிலும் இயல்பின் அடிப்படையிலும், மேலும் இறைத் தொடர்பின் அடிப்படையிலும், தனிப்பட்ட முறையிலும், ஒன்று கூட்டியும், ஒரு அழைப்பினை இறைவன் வழங்கியிருக்கின்றான். அதனை ஒவ்வோர் அஹ்மதியும் புரிந்து கொள்ள வேண்டிய அவசியம் உள்ளது. அதற்காக எங்கு அறிவினைப் பெற வேண்டுமோ, எங்கு ஈமானை முன்னேற்றமடையச் செய்ய வேண்டுமோ அங்கு செயல் ரீதியாகவும் அதனை வெளிப்படுத்த வேண்டும்.

அன்னார் கூறுகின்றார்கள் : எனவே நீங்கள் அந்த ஓர் அழைப்பினை நன்றியுடன் ஏற்றுக் கொள்ளுங்கள். உங்களுக்காக எவ்வளவு உணவு தயார் செய்யப்பட்டிருக்கிறதோ அவை அனைத்தையும் உண்ணுங்கள். மேலும் அவை அனைத்திலிருந்தும் பயனடையுங்கள். எவரொருவர் இவ்வனைத்து கட்டளைகளில் ஏதேனும் ஒன்றைவிட்டு விடுகிறாரோ அவர் தீர்ப்பு நாளின்போது தண்டனைக்குரியவராக இருப்பார் என்று நான் உண்மையாகவே கூறுகிறேன். நீங்கள் ஈடேற்றம் பெற நாடினால் எளிமையான மார்க்கத்தைப் பேணுங்கள். மேலும் பணிவுடன் திருக்குர்ஆனின் கழப்பையை தோளில் தாங்குங்கள். தீயவன் அழிந்து போவான். வரம்பு மீறுபவன் நரகத்தில் தள்ளப்படுவான். யார் பணிவுடன் தலை வணங்குகிறாரோ அவர் மரணத்திலிருந்து காப்பாற்றப்படுவார். பௌதீக செல்வங்களின் நிபந்தனைகளுடன் இறைவனை வணங்காதீர்கள். உலக விருப்பங்களை நிறைவேற்றுவதற்காக உங்களை விருப்பங்களை நிறைவேற்றும் நிபந்தனைகளை உங்களது வணக்கத்தில் இணைக்காதீர்கள். இவ்வாறு அது வணக்கமாக இருக்காது.

அன்னார் கூறுகிறார்கள் : ஒருவேளை நீங்கள் உலக நிபந்தனைகளை இணைப்பீர்களெனில் அவ்வாறான எண்ணத்திற்காக படுகுழி உள்ளது. மாறாக, நீங்கள் படைத்த இறைவனுக்கு செலுத்த வேண்டிய கடமை உங்கள் மீது இருக்கிறது என்று அவனை வணங்குங்கள். இறை வணக்கமே உங்களது வாழ்க்கையாகி விட வேண்டும். மேலும் அந்த உண்மையான நேசன் திருப்தி கொள்ள வேண்டுமென்பதே உங்களது நன்மைகளுக்கான நோக்கமாக இருக்க வேண்டும். ஏனெனில் அதனை விட தாழ்ந்த எண்ணமானது தடுமாற்றத்தின் இடமாகும்.

(இஸாலே அவ்ஹாம், ரூஹானி கஸாயின் தொகுதி 3 பக்கம் 546 – 548)

அல்லாஹ் நம்மை இவ்வனைத்து விஷயங்களின் படியும் செயலாற்றுவதற்கான நல்வாய்ப்பினை வழங்குவானாக. ஒவ்வொரு நாளும் நமது பாதங்கள் நன்மைகளில் முந்திச் செல்பவையாக இருக்க வேண்டும். பாகிஸ்தானின் அஹ்மதிகளும் குறிப்பாக தங்களது துஆக்களின் பக்கம் கவனம் செலுத்துங்கள். அங்கு அஹ்மதிகள் மீது மிக அதிகமாக கடுமை காட்டப்படுகின்றது. தினம் தினம் ஒரு புதிய சட்டம் அவர்களுக்காக இயற்றப்படுகிறது. உருவாக்கப்படுகிறது. அவர்கள் அதிகமதிகமாக இறை நெருக்கத்தை பெற முயற்சிக்க வேண்டும். அல்லாஹ் அனைத்து அஹ்மதிகளையும் தனது பாதுகாப்பில் வைப்பானாக. எதிரிகளின் அனைத்து சூழ்ச்சிகளும் பயனற்றதாகி விடட்டும்.

ஆண்டு மாநாட்டிற்குப் பிறகு தற்போது காதியானில் இருக்கின்ற அனைவரையும் அல்லாஹ் நலமுடன் தத்தமது வீடுகளில் சேர்ப்பானாக. மேலும் ஆண்டு மாநாட்டின் அருள்களை என்றென்றும் அவர்களது வாழ்வின் அங்கமாக ஆக்குவானாக.

இதற்குப் பிறகு துஆ செய்வோம். அதற்கு முன்னதாக நான் அங்கு கலந்து கொண்டவர்களின் எண்ணிக்கையை கூறி விடுகிறேன். அல்லாஹ்வின் அருளால் தற்போது காதியானில் 44 நாடுகளிலிருந்து 20048 நபர்கள் கலந்து கொண்டுள்ளனர். இது கடந்த ஆண்டை விட 6000 அதிகமாகும். மேலும் இங்குள்ளவர்களின் எண்ணிக்கை 5300 ஆகும். அல்லாஹ் கலந்து கொண்ட அனைவரது பாதுகாவலனாகவும் உதவியாளனாகவும் இருப்பானாக. ஆமீன்.

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பலதார மணமும் அதன் நுட்பமான ஞானமும்

மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதியுள்ள சீரத் காத்தமுன்னபிய்யீன் என்ற நூலிலிருந்து ஒரு பகுதி

திருக்குர்ஆனிலிருந்து திருமணத்திற்கான நோக்கங்கள் நான்கு என்று தெரிய வருகிறது. முதலில் மனிதன் சில உடல் ரீதியான மற்றும் ஒழுக்கம் மற்றும் ஆன்மீக ரீதியிலான நோய்களிலிருந்தும் அவற்றின் தீய விளைவுகளிலிருந்தும் பாதுகாப்பாக இருப்பதாகும். இதனை அரபியில் இஹ்ஸான் என்று கூறுகின்றோம். அதன் பொருள் ஒரு கோட்டைக்குள் பாதுகாப்பாக இருப்பதாகும். இரண்டாவது நோக்கம், ஒருவரது தலைமுறை எஞ்சியிருப்பதாகும். மூன்றாவது நோக்கம், சிறந்த வாழ்க்கை துணை கிடைப்பதும் அதன் மூலம் உள்ளம் நிம்மதியைப் பெறுவதும் ஆகும். நான்காவது நோக்கம், அன்பு மற்றும் கருணையின் தொடர்புகளை விரிவுபடுத்துவதாகும். இவ்வாறே பலதார மணம் தொடர்பாக இஸ்லாத்தின் ஷரீஅத்தில் அதன் நோக்கங்கள் இரு வகையில் கூறப்பட்டிருக்கின்றன.

முதலாவது நோக்கம், ஒருவர் திருமணம் செய்வதற்காக ஏற்கனவே குறிப்பிடப்பட்டுள்ள நோக்கங்களே ஆகும். இதைத்தவிர சில முக்கிய நோக்கங்களையும் பலதார மணத்துடன் தொடர்புபடுத்தி இஸ்லாம் கூறி இருக்கின்றது. சில சமயங்களில் ஒரு மனைவியுடன் வாழ்வதன் மூலம் திருமணத்திற்கான நோக்கம் முழுமையாக நிறைவு பெறாமல் இருந்தால் இரண்டாவது மனைவியின் தேவை ஏற்படுகின்றது.

உதாரணமாக, திருமணத்தின் மூலமாக மனிதன் சில நோய்களிலிருந்தும், தீமைகளிலிருந்தும், தீய செயல்களில் ஈடுபடுவதிலிருந்தும் தப்பித்து விடுகின்றான். ஆனால் சில சூழ்நிலைகளில் ஒரு மனைவி அவனுக்கு போதுமானதாக இருப்பதில்லை. ஏனெனில் ஒரு மனைவிக்கு மாதவிடாய், கருவுற்றிருக்கின்ற காலகட்டம், கரு கலைந்து விடுவது, குழந்தைக்கு பால் கொடுப்பது இதைத்தவிர அவளுக்கு ஏற்படுகின்ற பல்லேறு வகையான நோய்கள் போன்ற தருணங்களில் மனிதனால் தன்னுடைய இறையச்சத்தையும் தூய்மையையும் நிலைநிறுத்த முடியாமல் போனால் அல்லது குறைந்த பட்சம் அவனது எண்ணங்களில் தூய்மையற்ற நிலை மிகைத்து விட்டால் அல்லது தனித்திருப்பதன் காரணமாக ஏதாவது உடல் ரீதியிலான நோய்களால் அவனுக்கு பாதிப்பு ஏற்படும் நிலை இருந்தால் அத்தகைய மனிதனுக்கு பல திருமணங்களை செய்வதை தவிர வேறு எதுவும் சரியான சிகிச்சையாக இருக்க முடியாது.

இவ்வாறே நிக்காஹ்வின் இன்னொரு நோக்கம், தனது தலைமுறையை எஞ்சியிருக்கச் செய்வதாகும். ஒரு நபருக்கு தனது ஒரு மனைவியின் மூலம் சந்ததிகள் இல்லாமல் இருந்தால் அல்லது ஆண் சந்ததிகள் இல்லாமல் இருந்தால் அந்த ஒரு காரணமே இரண்டாவது திருமணம் செய்வதற்கு அனுமதி தரக்கூடியதாக ஆகி விடுகின்றது.

திருமணத்தின் மூன்றாவது நோக்கம், சிறந்த வாழ்க்கை துணை கிடைப்பதும் அதன் மூலம் உள்ளத்திற்கு நிம்மதி ஏற்படுவதும் ஆகும். இந்த நோக்கம் ஒரு மனைவியின் மூலமாக நிறைவேறாமல் போனால் மனைவி படுத்த படுக்கையில் இருப்பவளாக ஆகிவிட்டால் அல்லது அவளுக்கு பைத்தியம் பிடித்து விட்டால் பிறகு அத்தகைய நபர் தனக்கு சிறந்த வாழ்க்கைத் துணையை ஏற்படுத்திக் கொள்வதற்காகவும், உள்ளத்தில் நிம்மதியை பெறுவதற்காகவும் இரண்டாவது திருமணம் செய்ய வேண்டியது வருகிறது.

திருமணத்தின் இன்னொரு நோக்கம், பல்வேறு குடும்பங்கள் ஒன்றிணைவதன் மூலம் அன்பு மற்றும் கருணையின் தொடர்புகள் விரிவடைவதாகும். இத்தகைய தொடர்புகள் ஏற்படுவது சிற நேரங்களில் குடும்பம் அல்லது சமுதாயம் அல்லது நாடு அல்லது அரசியல் அல்லது மார்க்கம் ஆகியவற்றிற்கு மிகவும் அவசியமானதாக இருக்கின்றது. எனவே சூழ்நிலைக்கேற்ப இந்நோக்கங்களை கருத்தில் கொண்டு பல திருமணங்களை செய்வது அவருக்கு கண்டிப்பானதாக ஆகிவிடுகிறது. இவற்றைத்தவிர இஸ்லாம் பலதார மணத்திற்கென்று சில குறிப்பிட்ட காரணங்களை கூறி இருக்கின்றது. முதலாவது காரணம், அநாதைகளை பாதுகாப்பதாகும். இரண்டாவது காரணம், விதவைகளை திருமணம் செய்து அவர்களது நல்வாழ்விற்கான ஏற்பாட்டைச் செய்வதாகும். மூன்றாவது காரணம், வருங்கால தலைமுறையினரின் எண்ணிக்கையில் அதிகப்படுத்துவதாகும்.

முஅக்கல் பின் யஸார் அவர்கள் அறிவிப்பு செய்கின்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது சஹாபாக்களை நோக்கி இவ்வாறு கூறினார்கள்: நீங்கள் மிகவும் அன்பு செலுத்தக்கூடிய, அதிக குழந்தைகளை ஈன்றெருக்கின்ற பெண்களுடன் திருமணம் செய்யுங்கள். அதன் மூலம் உங்கள் எண்ணிக்கையில் முன்னேற்றம் ஏற்பட வேண்டும். கியாமத் நாளன்று எனது சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அதிகமாக இருப்பதைப் பார்த்து நான் பெருமையடைய வேண்டும்.

இந்த நபிமொழியில் வருங்கால தலைமுறையினரின் எண்ணிக்கையை அதிகரிப்பது பலதார மணத்தின் ஒரு நோக்கமாக குறிப்பிடப்பட்டுள்ளது. பிறகு இஸ்லாத்தில் பெண்ணை தேர்வு செய்யும் போது மார்க்க அம்சத்திற்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்று குறிப்பிடப்பட்டிருக்கின்றது. அதாவது மனைவியாக வருபவள் நல்லொழுக்கத்திலும், இறையச்சத்திலும், தூய்மையிலும், மார்க்கப் பற்றிலும் சிறந்தவளாக இருக்கும் போது கணவன் மனைவிக்கு இடையே இருக்கின்ற தொடர்புகளும் சிறந்து விளங்குவதுடன் வருங்கால சந்ததிகள் மீதும் அதனால் நல்ல தாக்கம் ஏற்படகின்றது.

அவ்வாறே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெண் பற்றிய வேறு சில அம்சங்களையும் கவனத்தில் கொள்ளுமாறு கூறியுள்ளார்கள். உதாரணமாக, பர்தா பற்றிய கட்டளை இருந்தும் கூட ஒரு பெண்ணை திருமணம் செய்வதற்கு முன்னர் அவளை நேரில் பார்க்க வேண்டும் என்று கூறியுள்ளார்கள். (திர்மதி அப்வாபுன் நிக்காஹ்)

தோற்றத்தின் காரணமாக பின்னர் வெறுப்புணர்வு ஏற்பட்டு ஒருவரது இயல்பில் எவ்வகையிலும் எந்த களங்கமும் உருவாகி விடக்கூடாது என்பதற்காகவே இவ்வாறு கூறப்பட்டள்ளது. இவ்வாறே ஓரளவு வயது மற்றும் இயல்பின் பொருத்தத்தையும் கருத்தில் கொள்ள வேண்டும் என்றும் பெருமானார் (ஸல்) அவர்கள் வழிகாட்டியுள்ளார்கள். ஆனால் இவற்றிற்கு எவ்வகையிலும் மார்க்கத்தை விட முன்னுரிமை வழங்கக்கூடாது. ஏனென்றால் மார்க்கப் பற்று என்ற சிறப்பம்சம் இல்லாமல் இருந்தால் இந்த சிறப்புகள் மட்டும் உண்மையான நிரந்தரமான மகிழ்ச்சிக்கு காரணமாக இருக்க முடியாது. பெருமானார் (ஸல்) அவர்கள் எத்தகைய குறிப்பான சூழலில் பல திருமணங்களை செய்ய வேண்டியது வந்தது என்பதைப் பற்றி திருக்குர்ஆனில் தெளிவாக கூறப்பட்டிருக்கின்றது. முதலாவதாக, அவர்களது முன்மாதிரியின் மூலம் அறிவுக்கு மாற்றமான சில சடங்குகள் மற்றும் தவறான கொள்கைகளை மறுக்க வேண்டியதிருந்தது. இரண்டாவதாக, சில பெண்களே அவர்களின் தர்பிய்யத்தின் கீழ் வைத்து அவர்கள் மூலமாக இஸ்லாத்தில் பெண்களோடு தொடர்புடைய ஷரீஅத் பற்றிய கட்டளைகளை பெண்களுக்கு விளக்கிக் கூற வேண்டியதிருந்தது. அதன் மூலம் முஸ்லிம் பெண்களுக்கான கல்வி மற்றும் பயிற்சி வழங்கப்பட வேண்டியதிருந்தது.

திருக்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: தூதரே ! உமது வளர்ப்பு மகனான ஸைது பின் ஹாரிஸ் தனது மனைவியான ஸைனபிற்கு தலாக் கொடுத்த போது அவளை நீர் திருமணம் செய்யும்படி நாமே ஆலோசனை கூறினோம் (33:38).

இதன் மூலம் வளர்ப்பு மகன் உண்மையான மகனைப் போன்றவன் ஆவான் என்ற அறிவுக்கு புறம்பான சடங்களை நாம்0 அழித்து விட்டோம். அவ்வாறே அவர் தலாக் கொடுத்த மனைவி விதவையான பிறகு வளர்ப்பு மகனின் தந்தைக்கு அவள் அனுமதிக்கப்பட்டவள் அல்ல என்ற தவறான எண்ணத்தை நாம் அழித்து விட்டோம். வருங்காலத்தில் நம்பிக்கை கொண்டவர்களின் உள்ளத்தில் இதுதொடர்பான எந்தவொரு சலனமும், சந்தேகமும் எஞ்சியிருக்கக்கூடாது என்பதற்காக இவ்வாறு செய்யப்பட்டுள்ளது. இந்த வசனத்தில் அறிவுக்கு புறம்பான அறியாமை காலத்தின் சடங்குகளை வீழ்ச்சியடையச் செய்து அரபு மக்களின் இயல்பில் இருந்த இத்தகைய தீய சடங்குகளை அகற்றுவது பலதார மணத்தின் நோக்கமாக இருந்தது தெரிய வருகிறது.

வளர்ப்பு மகன்களை தத்தெடுத்து வளர்ப்பது அரபு மக்களின் வழக்கமாக இருந்து வந்தது. இந்த வசனம் இறங்குவதற்கு முன்னர் பெருமானார் (ஸல்) அவர்களும் கூட தன்னால் விடுதலை செய்யப்பட்ட அடிமையான ஸைது பின் ஹாரிஸ் அவர்களை வளர்ப்பு மகனாக தத்தெடுத்திருந்தார்கள். அப்போது இறைவன் ஒருவரை நாவால் மகன் என்று அழைப்பதனால் அவர் உண்மையான மகனாக ஆகிவிட மாட்டார் என்ற கட்டளையை இறக்கினான். அதற்குப்பிறகு ஸைது தனது மனைவியான ஸைனப் அவர்களை தலாக் கொடுத்த சம்பவம்

நடைபெற்றது. இறைகட்டளைக்கேற்ப பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களை திருமணம் செய்ததன் மூலம் இந்த தீய சடங்களை அவர்கள் மாற்றினார்கள். மேலும் தலாக் கொடுக்கப்பட்ட பெண்ணுடன் திருமணம் செய்வது ஒரு குற்றமல்ல என்பதையும் அன்னார் தனது உயர்வான முன்மாதிரியின் மூலம் நிலைநாட்டிக் காட்டினார்கள்.

நபியே! உமது மனைவியரிடம் கூறுவீராக. உலக வாழ்க்கையின் பொருள்கள் கிடைக்க வேண்டும் என்பது உங்களது குறிக்கோளாக இருந்தால், வாருங்கள்! நான் உங்களுக்கு உலக பொருட்களையும் செல்வங்களையும் வழங்கி விடுகின்றேன். ஆனால் இந்நிலையில் நீங்கள் எனது மனைவியராக இருக்க முடியாது. மாறாக, நான் உங்களுக்கு சில நன்மைகளை செய்து உங்களை என்னிடமிருந்து விடுவித்து விடுவேன். ஆனால் நீங்கள் இறைவனையும் அவனது தூதரையும் விரும்புவதாக இருந்தால், மறுமையின் நற்கூலியையும் விரும்புவதாக இருந்தால் உங்களில் நன்மை செய்பவருக்கு அவர் இறைவனின் திருப்தியை நிறைவேற்றும் போது இறைவன் புறமிருந்து அவருக்கு மகத்தான நற்கூலி ஆயத்தம் செய்யப்பட்டுள்ளது. (33:29,30)

இந்த வசனத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் பல பெண்களை திருமணம் செய்ததன் சிறப்பாக காரணங்கள் கூறப்பட்டுள்ளன. முதலாவதாக, அவர்கள் மூலம் முஸ்லிம் பெண்களின் கல்வி மற்றும் தர்பிய்யத்திற்கான ஆயத்தங்களை செய்வது. இந்த நோக்கங்களுக்காகவே அவர்கள் பல பெண்களை திருமணம் செய்துள்ளார்கள். இது அவர்களுக்கு மட்டுமே உரிய ஒரு முக்கிய காரணமாக இருக்கின்றது.

மேலும் அவர்கள் ஷரீஅத்துடைய நபியாக இருந்தார்கள். அவர்கள் மூலமாக உலகில் ஒரு புதிய ஷரீஅத் சட்டம் உருவாக வேண்டியதிருந்தது. புதிய நாகரீகம் மற்றும் கலாச்சாரத்தின் அடித்தளம் இடப்பட வேண்டியதிருந்தது. பெருமானார் (ஸல்) அவர்களின் திருமணங்கள் சுய நோக்கங்களுக்காக இருக்கவில்லை என்பதற்கான செயல் அளவிலான சாட்சியம் இருக்கின்றது. அன்னார் மார்க்க நோக்கங்களுக்காகவே திருமணம் செய்துள்ளார்கள். அவர்கள் சந்ததிகளை பெற்றெடுக்கும் தகுதியில் இல்லாமல் இருக்கும் வயதை அடைந்து விட்ட பெண்களை திருமணம் செய்து கெண்டது இதற்கு ஆதாரமாக இருக்கின்றது.

உதாரணமாக, ஹஸ்ரத் உம்மு சல்மா (ரலி) அவர்களை பெருமானார் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரி நான்காம் ஆண்டில் திருமணம் செய்தார்கள். அவர்களது வயது திருமணத்தின் போது குழந்தைகளை ஈன்றெடுக்கும் வயதை கடந்திருந்தது. இதன் காரணமாக உம்மு சல்மா (ரலி) அவர்கள் திருமணம் செய்யாமல் இருக்க விரும்பினார்கள். எனினும், பெருமானார் (ஸல்) அவர்களின் நோக்கம் மார்க்கமாக மட்டும் இருந்ததால் அவர்கள் அன்னாருக்கு புரிய வைத்து இந்த திருமணத்திற்காக அன்னாரை சம்மதிக்க வைத்தார்கள்.

எனவே பெருமானார் (ஸல்) அவர்கள் செய்த அத்தனை திருமணங்களுமே மிகவும் அருளுக்குரியதும் தூய்மையானதும் ஆகும். எல்லாவற்றிற்கும் மேலாக நபித்துவ கடமைகளை நிறைவேற்றுவதற்காக அவர்கள் பலரை திருமணம் செய்ய வேண்டியது வந்தது. பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்க்கையை நன்றாக படிக்கின்ற ஒருவர் அவர்கள் வெளிப்படையில் உலகப் பணியை செய்தாலும் அல்லது மார்க்கப் பணியை செய்தாலும் நேரடியாகவோ, மறைமுகமாகவோ அவர்களது அந்த பணியின் மூலமாக நபித்தவத்தின் கடமைகளையே அன்னார் நிறைவேற்றி வந்திருக்கிறார்கள். அது அல்லாமல் உலக இன்பங்களையும் அருள்களையும் பெறுவது அன்னாரின் குறிக்கோளாக இருக்கவில்லை.

கீழ்க்காணும் நபிமொழி அன்னாரின் வாழ்க்கையை படம்பிடித்துக் காட்டக் கூடியதாக இருக்கின்றது. இப்னு மஸ்வூத் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள். ஒருமுறை பெருமானார் (ஸல்) அவர்கள் தடித்த ஓலைகளால் பிண்ணப்பட்ட ஒரு பாயில் படுத்திருந்தார்கள். அந்த பாயின் அடையாளங்கள் அவர்களது உடலில் தென்பட்டன. அப்போது நான் அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே ! நாங்கள் உங்களுக்காக சுகமான, உங்களுக்கு வசதியை ஏற்படுத்தக்கூடிய பொருட்களை வழங்குவதை நீங்கள் விரும்புவீர்களா? என்று கேட்டேன்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், இப்னு மஸ்வூதே! உலக அருள்களுடன் எனக்கு என்ன தொடர்பு இருக்கின்றது. எனக்கும் உலகிற்கும் இடையிலுள்ள தொடர்பின் உதாரணம் இதுவாகும். ஒரு பயணி வழியில் நடந்து சென்று கொண்டிருக்கின்றார். வழியில் சிறிது நேரம் ஒரு மரத்தின் நிழலின் கீழ் சில நொடிகள் தங்குகின்றார். பிறகு கண்கள் திறந்ததும் மீண்டும் பயணத்தை அவன் தொடர்கின்றான். (முஸ்னது அஹ்மது, திர்மிதி, மிஷ்காத் பாபு ரிக்காத் பக்கம் 442)

இந்த நபிமொழியிலிருந்து உலகத்தின் அருட்கள் முற்றிலுமாக தடை செய்யப்பட்டிருக்கின்றது என்பது பொருளல்ல. ஏனென்றால் இஸ்லாம் எந்தவொரு ஆகுமான அருளிலிருந்தும் ஆகுமான முறையில் பயனடைவதிலிருந்தும் ஒருபோதும் மனிதனை தடுக்கவில்லை. மாறாக, திருக்குர்ஆன் மனிதனுக்கு இவ்வாறு துஆ செய்யுமாறு கற்றுத் தருகின்றது.

எங்கள் இறைவா! எங்களுக்கு உலகத்தின் அருட்களிலிருந்தும் பங்கை வழங்குவாயாக. மறுமையின் அருள்களிலிருந்தும் பங்கை வழங்குவாயாக. (2:202)

மேற்கண்ட நபிமொழி கூறும் கருத்து என்னவென்றால், மனிதன் தனது வாழ்க்கையின் அசல் குறிக்கோளாக உலகத்தின் அருள்களை பெறுவதையே ஆக்கிக் கொள்ளக்கூடாது. மேலும் இந்த நபிமொழியிலிருந்து பெருமானார் (ஸல்) அவர்களுக்கு சுயமே உலக அருள்களின் மீது எந்தவொரு ஆர்வமும் இருக்கவில்லை. உலக அருட்களுடன் உள்ள தொடர்பை பொறுத்தவரை அவர்களது வாழ்க்கை ஒரு பயணியைப் போன்றே கழிந்தது.

அடுத்து பலதார மணத்திற்கான அனுமதியை இஸ்லாம் மட்டும் வழங்கவில்லை. மாறாக, உலகின் பல மதங்களில் இதற்கான அனுமதி வழங்கப்பட்டிருக்கின்றது. ஹஸ்ரத் மூஸா (அலை) அவர்களுக்கு வழங்கப்பட்ட ஷரீஅத்தில் இதற்கான அனுமதி வழங்கப்பட்டிருப்பதை உபாகமம் அதிகாரம் 21 வசனம் 15 ல் பார்க்க முடிகின்றது. இஸ்ரவேல் சந்ததிகளில் தோன்றிய பல நபிமார்கள் பலதார மணம் செய்துள்ளனர். இதற்கு உதாரணமாக ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை), ஹஸ்ரத் யாகூப் (அலை), ஹஸ்ரத் தாவூத் (அலை), ஹஸ்ரத் சுலைமான் (அலை) போன்றோரைக் குறிப்பிடலாம்.

இந்துக்களில் பல கண்ணியமிக்க பெரியார்கள் ஒன்றுக்கும் அதிகமான திருமணங்களை செய்துள்ளனர். உதாரணமாக, ஸ்ரீ கிருஷ்ணர் அவர்களும் பல பெண்களை திருமணம் செய்துள்ளார்கள். (ஸ்ரீ கிருஷணன் என்ற நூல் எழுதியவர் லாலா லச்பத் ராய் பக்கம் 97,98)

மிஸ்டர் மார்போலேஸ் என்பவர் இஸ்லாத்தின் கடுமையான எதிரியாக இருந்தவர்... பலதார மணத்தை பொருத்தவரையில் அவர் உண்மையை ஏற்றுக் கொள்கின்ற நிர்பந்தத்திற்கு ஆளாகியுள்ளார்.

மார்போலேஸ் அவர்கள் தமது நூலான முஹம்மது –ல் இவ்வாறு எழுதுகின்றார்: முஹம்மது (ஸல்) அவர்கள் பல திருமணங்களை செய்துள்ளார்கள். அந்த திருமணங்களை அன்னார் ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களை திருமணம் முடித்த பிறகு செய்துள்ளார்கள். பெரும்பாலான ஐரோப்பிய கட்டுரை ஆசிரியர்களின் பார்வையில் தனது சுய ஆசைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே அவர்கள் அவ்வாறு செய்தார்கள் என்று கூறப்பட்டிருக்கின்றது. ஆனால் சிந்தித்துப் பார்த்தால் பெரும்பாலும் இந்த உணர்வுகள் அதில் மிகைத்திருக்கவில்லை என்பது தெரிய வருகிறது.

முஹம்மது (ஸல்) அவர்கள் செய்த பல திருமணங்களும் சமுதாயம் மற்றும் அரசியல் நோக்கங்களை கொண்டதாகவே இருந்திருக்கின்றது. ஏனென்றால் அவர்கள் தனது சிறப்பிற்குரிய தோழர்களின் குடும்பங்களில் திருமணம் செய்ததன் மூலம் தன்னுடன் அவர்களுக்கு இருந்த அன்பின் தொடர்புகளை மேலும் விரிவானதாக ஆக்கிக் கொண்டார்கள். அதை மேலும் உறுதிப்படுத்தினார்கள். ஹஸ்ரத் அபூபக்ர் மற்றும் உமர் ஆகியோரின் மகள்களை திருமணம் செய்ததும் கூட இந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே இருந்தது. இவ்வாறே எதிரிகளாக இருந்த தலைவர்கள் மற்றும் தோல்வியுற்ற சமுதாயங்களின் தலைவர்கள் ஆகியோரின் மகள்களுடனும் முஹம்மது (ஸல்) அவர்கள் திருமணம் செய்துள்ளார்கள்.

இந்தத் திருமணங்கள் அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் செய்யப்பட்டவையாகும். எஞ்சியிருக்கும் திருமணங்களைப் பொருத்தவரையில் தனக்கு ஆண் குழந்தைகள் கிடைக்க வேண்டும் என்ற எண்ணத்திலேயே அவர்கள் திருமணம் செய்தார்கள். அவ்விஷயத்தில் அவர்களுக்கு மிகுந்த ஆசை இருந்து வந்தது. (மார்போலேஸ் பக்கம் 176,177)

பெருமானார் (ஸல்) அவர்களது வாழ்க்கை தொடர்பாக மிகுந்த காழ்ப்புணர்வும் பகைமையும் கொண்டவர்களில் முதல் அணியில் நிற்பவராக இந்த மனிதர் இருந்தார். அவர் கூறி இருக்கும் இந்த கருத்துக்கள் கூட தவறுகளிலிருந்து முற்றிலும் தூய்மையானது என்று நம்மால் கூற முடியாது என்றாலும் உண்மையானது எப்படியும் ஒரு பகைவனின் உள்ளத்தைக் கூட வெற்றி கொண்டு விடுகின்றது என்பதற்கு இது ஆதாரமாக திகழ்கின்றது. (சீரத் காத்தமுன் நபிய்யீன் பக்கம் 432)

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை – மக்கா வெற்றியின் வியக்கத்தக்க சம்பவங்களின் ஒளியில்

ஹஸ்ரத் இரண்டாவது கலீஃபத்துல் மஸீஹ் அவர்களின் நூலான ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாறு என்ற நூலிலிருந்து ஒரு சுவாரஷ்யமான மற்றும் ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய சம்பவங்கள்

கி.பி. 629 ஆம் ஆண்டு டிசம்பர் மாதத்தில், ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு, ரமலான் மாதத்தில் அரபு நாட்டில் இஸ்லாத்தை நிலைநாட்டிய இறுதிப் போருக்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மதீனாவிலிருந்து மக்காவுக்கு புறப்பட்டார்கள்.

இந்தப் போருக்கு அவர்கள் புறப்பட்டதற்கு காரணமாவது, ஹுதைபியா சமாதான உடன்படிக்கையின்படி, அரபுக் கோத்திரங்களுள் விரும்புபவர்கள், மக்காவாசிகளுடன் இணைந்து கொள்ளலாம். அவ்வாறே அவர்களுள் விருப்பமுள்ளவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து கொள்ளலாம். அடுத்து வரும் ஆண்டுகள் வரை ஒரு சாரார், இன்னொரு சாராரின் மீது தாக்குதல் நடத்துவதன் மூலம், அந்த உடன்படிக்கையை முறித்து விட்டால் போர் செய்யலாம்.

அந்த உடன்படிக்கையின்படி, பனூ பக்கர் என்னும் அரபு கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் மக்காவாசிகளுடன் இணைந்து கொண்டனர். கஸாஆ என்னும் அரபு கோத்திரத்தைச் சார்ந்தவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து கொண்டனர்.

அரபு நாட்டிலுள்ள நிராகரிப்பாளர்கள், அந்த உடன்படிக்கைக்குக் கட்டுப்பட்டு நடப்பதில் போதிய கவனம் செலுத்தவில்லை. குறிப்பாக முஸ்லிம்களை எதிர்ப்பதற்காக அவர்கள் அந்த உடன்படிக்கையை அலட்சியம் செய்து வந்தார்கள். பனூபக்கர் இனத்திற்கும் கஸாஆ இனத்திற்கும் இடையில் நீண்ட காலமாகப் பகைமை இருந்து வந்தது. ஹுதைபிய்யா சமாதான உடன்படிக்கை நிகழ்ந்து சிறிது காலத்திற்குப் பிறகு பனூபக்கர் கோத்திரத்தினர் மக்கா வாசிகளுடன் கலந்தாலோசித்து, கஸாஆ கோத்திரத்தினர் அந்த உடன்படிக்கையின் காரணமாக இப்பொழுது முற்றிலும் நிம்மதியாக இருக்கின்றனர். நாமெல்லாரும் சேர்ந்து அவர்களைப் பழிவாங்குவதற்கு இதுவே பொருத்தமான நேரம் என்று முடிவு செய்தனர்.

இதன்படி குறைஷியர்களாகிய மக்காவாசிகளும் பனூபக்கரும் ஒன்று சேர்ந்து ஒரு நாள் இரவில் திடீரென கஸாஆ இனத்தினரைத் தாக்கி அவர்களுள் பலரைக் கொன்று விட்டார்கள். குரைஷியரும் பனூபக்கரும் சேர்ந்து தங்கள் மீது இவ்வாறு தாக்குதல் நடத்தியது பற்றியும் இதன் மூலம் அவர்கள் சமாதான உடன்படிக்கையை முறித்து விட்டது பற்றியும் உடனடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு அறிவிப்பதற்காக கஸாஆ இனத்தினர் மிக வேகமாக செல்லும் ஒட்டகங்களில் நாற்பது பேரைக் கொண்ட ஒரு குழுவினரை மதீனாவுக்கு அனுப்பி வைத்தார்கள். இவர்கள் அங்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று, நமக்கிடையிலுள்ள உடன்படிக்கையின் அடிப்படையில், எங்களுக்காக அவர்களைப் பழிவாங்குவதும் மக்காவின் மீது போர் தொடுப்பதும் தங்களுடைய கடமையாகும் என்று வேண்டிக் கொண்டார்கள்.

இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உங்களுக்கு ஏற்பட்ட துன்பம், எனக்கு ஏற்பட்ட துன்பமாகும். நமக்கிடையிலுள்ள உடன்படிக்கையில் நான் உறுதியாக இருக்கிறேன். (அப்போது மழை பெய்து கொண்டிருந்தது.) இந்த மேகத்திலிருந்து எந்த வேகத்தில் மழை செய்து கொண்டிருக்கிறதோ அந்த வேகத்தில் உங்களுக்கு உதவி செய்வதற்காக இஸ்லாமியப் படைகள் வந்து சேரும் என்றார்கள்.

கஸாஆ கோத்திரத்தின் அந்தக் குழுவினர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றது பற்றிய செய்தி மக்காவாசிகளுக்கு தெரிந்ததும் அவர்கள் பெருங்கவலையும் பதற்றமும் அடைந்தார்கள். உடனே அவர்கள் முஸ்லிம்களின் தாக்குதலை தடுப்பதற்காக அபூஸுஃப்யானை மதீனாவுக்கு அனுப்பி வைத்தார்கள். அபூஸுஃப்யான் மதீனாவுக்கு வந்தடைந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஹுதைபிய்யா சமாதான உடன்படிக்கையின் போது நான் கலந்து கொள்ளவில்லை. எனவே நாம் இப்பொழுது புதிதாக ஓர் உடன்படிக்கை செய்து கொள்வோம் என்று வலியுறுத்திக் கேட்டுக் கொண்டார். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மௌனமாக இருந்தார்கள். அவரது வேண்டுகோளுக்கு பதில் அளிப்பது விவேகமற்றது என்று கருதினார்கள்.

அப்போது அபூஸுஃப்யான் நம்பிக்கையிழந்து, மிகுந்த பதற்றத்திற்குள்ளாகி பள்ளிவாசலில் நின்று கொண்டு, மக்களே! நான் மக்காவாசிகளின் சார்பாக உங்களுக்கு சமாதான உடன்படிக்கையைப் புதுப்பித்துக் கொள்கிறேன் என்று அறிவித்தார். இந்த அறிவிப்பைக் கேட்ட முஸ்லிம்கள் அவருடைய அறியாமையைக் கண்டு நகைத்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவரிடம் அபூஸுஃப்யான் அவர்களே! உங்களுடைய அறிக்கை ஒருதலைப் பட்சமானது. நாங்கள் உங்களுடன் இவ்வாறான எந்த உடன்படிக்கையும் செய்யவில்லையே என்றார்கள்.

இதற்கு பிறகு உடனடியாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நான்கு திசையிகளிலுமுள்ள முஸ்லிம்களுக்குத் தூதர்கள் மூலம் செய்தி அனுப்பினார்கள். (மதீனாவுக்கு வெயியிலுள்ள) முஸ்லிம்கள் ஆயத்தமாகி விட்டதாகவும் அவர்கள் எல்லாரும் மக்காவுக்குச் செல்லும் வழியில் இணைந்து கொள்வதாகவும் அவர்களிடமிருந்து தகவல்கள் வந்ததும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மதீனாவிலுள்ளவர்களை ஆயுதங்களைத் தரித்துக் கொள்ளுமாறு கட்டளையிட்டார்கள்.

கி.பி. 630 ஆம் ஆண்டு, ஜனவரி மாதம் முதல் நாள் இந்தப் படை மதீனாவிலிருந்து புறப்பட்டது. வழியில் எல்லாத் திசைகளிலிருந்தும் முஸ்லிம் கோத்திரத்தினர்கள் அலையலையாகத் திரண்டு வந்து இந்த படையுடன் சேர்ந்து கொண்டிருந்தனர். சில மைல்களைக் கடந்து சென்ற பின்னர் இந்தப்படை ஃபாரான் என்னும் காட்டில் நுழைந்த போது ஹஸ்ரத் ஸுலைமான் நபி (அலை) அவர்களின் முன்னறிவிப்பிற்கேற்ப, இந்த படையின் எண்ணிக்கை பத்தாயிரமாகி விட்டது. இங்கு இந்தப்படை மக்காவை நோக்கி வீரநடை போட்டுச் சென்று கொண்டிருந்தது. அங்கு

மக்காவாசிகள் காற்று மண்டலத்தில் நிலவிய அமைதியின் காரணத்தால் மிகவும் அதிகமாக அஞ்சி நடுங்கிக் கொண்டிருந்தனர். இறுதியில் அவர்கள் தங்களுக்கிடையே ஆலோசனை செய்து முஸ்லிம்கள் என்ன செய்ய நினைக்கிறார்கள் என்பதை தெரிந்து வருமாறு அபூஸுஃப்யானை மீண்டும் மக்காவிற்கு வெளியே அனுப்பி வைத்தார்கள். அபூஸுஃப்யான் மக்காவிலிருந்து ஒருநாள் பயண தூரத்தை அடைந்தபோது அந்தக் காட்டுப் பகுதி நெருப்பினால் ஒளிமயமாகியிருப்பதைக் கண்டார்.

ஒவ்வொரு பாசறைக்கும் முன்னால் தீப்பந்தம் இருக்க வேண்டுமென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கட்டளையிட்டிருந்தார்கள். காட்டில் பத்தாயிரம் பேருக்காக அமைக்கப்பட்டிருந்த பாசறைகளுக்கு முன் வைக்கப்பட்டிருந்த தீப்பந்தங்களின் ஒளி மிகப் பயங்கரமாக காட்சியளித்தது. அபூஸுஃப்யான், தம்முடன் வந்த தோழர்களுடன், இது மிகவும் வியக்கத்தக்கதாக இருக்கிறதே! ஏனென்றால், அரபு நாட்டின் எந்தச் சமுதாயத்திற்கும் இந்த அளவு பெரிய படை கிடையாதே என்று கேட்டார். இதற்கு அவருடைய தோழர்கள் பல்வேறு கோத்திரங்களின் பெயர்களைக் கூறியதற்கு அவர் அரபு கோத்திரத்திங்களுள் எந்தக் கோத்திரத்திற்கும் இந்த அளவு பெரிய படை இருக்கவே முடியாது என்றார்.

அபூஸுஃப்யான் தமது தோழர்களுடன் இவ்வாறு பேசிக் கொண்டிருந்த அந்த இருளில் அபூஹன்ழலா? என்றழைக்கும் சப்தம் வந்தது. (ஹன்ழலா அபூஸுஃப்யானின் ஒரு மகனாவார்) இந்தக் குரலைக் கேட்ட அவர், அப்பாஸ் அவர்களே! நீங்கள் இங்கு தான் இருக்கின்றீர்களா? என்று கேட்டார். இதற்கு அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் படை, இந்த பாசறைகளில் தங்கியிருக்கிறது. இப்பொழுது நீங்கள் எல்லாரும் மிக விரைவாக ஏற்புடைய ஒரு திட்டம் வகுக்கவில்லையானால் நிச்சயமாக நீங்கள் படுதோல்வியடைந்து பெரும் இழிவிற்குள்ளாகி விடுவீர்கள் என்று பதிலளித்தார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், அபூஸுஃப்யானின் பழைய நண்பர். இதனால் அவர்கள் அவரிடம் தம்முடன் ஒட்டகத்தில் அமர்ந்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வருமாறு கூறினார்கள். பின்னர் அவர்கள் அவரது கையைப் படித்து இழுத்துத் தம்முடன் ஒட்டகத்தில் இருக்கச் செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அவரைக் கொண்டு சென்றார்கள்.

தம்முடன் பாதுகாப்பிற்காக நியமிக்கப்பட்டிருந்த ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அபூஸுஃப்யானைக் கொன்று விடுவார்களோ என்ற அச்சம் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களுக்கு இருந்தது. ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எல்லா முஸ்லிம்களிடமும், உங்களுள் எவராவது அபூஸுஃப்யானைச் சந்தித்தால் அவரைக் கொன்று விடக்கூடாது என்று ஏற்கனவே கூறியிருந்தார்கள்.

இவற்றையெல்லாம் கண்ட அபூஸுஃப்யானின் உள்ளத்தில் மகத்தானதொரு மாற்றம் ஏற்பட்டது. மேலும் அவர், சில ஆண்டுகளுக்கு முன்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஒரே தோழருடன் மக்காவை விட்டு வெளியேறுகின்ற நிலைமையை நாம் ஏற்படுத்தினோம். ஆனால் இப்போது ஏழே ஆண்டுகள் தான் கழிந்துள்ளன. இவ்வளவு குறுகிய காலத்தில் அவர்கள் மாபெரும் வெற்றி பெற்று பத்தாயிரம் பரிசுத்தவான்களுடன் எந்த அநீதியும் வரம்பு மீறுதலும் இன்றி நியாயமான முறையில் மக்காவின் மீது படையெடுத்துள்ளார்கள். இந்தப் படையை தடுத்து நிறுத்தக்கூடிய வலிமை மக்காவாசிகளுக்கு இல்லையே என்பதை எண்ணிப் பார்த்தார்.

அபூஸுஃப்யான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்ற போது, இவ்வாறான எண்ணங்களின் காரணமாகவும் இவற்றால் ஏற்பட்ட அச்சம், நடுக்கம் ஆகியவற்றின் காரணமாகவும் திகைப்படைந்து வாயடைத்து நின்று கொண்டிருந்தார். அவருடைய இந்த நிலையைக் கண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம், அபூஸுஃப்யானை உங்களுடன் அழைத்துச் சென்று இரவில் உங்களுடன் வைத்துக் கொள்ளுங்கள். காலையில் அவரை என்னிடம் அழைத்து வாருங்கள் என்றார்கள். இதன்படி இரவில் அபூஸுஃப்யான், ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களுடன் தங்கினார். காலையில் அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் அழைத்து வந்த போது, அந்த நேரம் காலைத் தொழுகை நேரமாக இருந்தது.

அதிகாலையில் எழுந்து தொழுவது பற்றி மக்காவாசிகளுக்கு என்ன தெரியும் ? எனவே அவர் தண்ணீர் நிரப்பிய பாத்திரங்களை எடுத்துக் கொண்டு முஸ்லிம்கள் அங்குமிங்குமாகச் சென்று கொண்டிருப்பதையும், அவர்கள் வுளு என்னும் சுத்தம் செய்து கொண்டிருப்பதையும், பின்னர் அவர்கள் அணிவகுத்து நிற்பதையும் கண்டு, ஏதோ ஒரு புதுவிதமான தண்டனையை அவர்கள் தனக்குத் தர தீர்மானித்துள்ளார்களோ என்று கருதினார்.

இதனால் அவர் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம், இவர்கள் எல்லாரும் அதிகாலையில் எழுந்து என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? என்று வினவினார். அதற்கு, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், நீங்கள் அச்சம் கொள்வதற்கு ஏதுவுமில்லை; இவர்கள் இப்பொழுது தொழுகையை நிறைவேற்றப் போகிறார்கள் என்றார்கள். இதன் பிறகு ஆயிரக்கணக்கான அந்த முஸ்லிம்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பின்னால் நேராக அணிவகுத்து நிற்பதையும் அவர்கள் ருகூவு செய்யும் போது, எல்லா முஸ்லிம்களும் ருகூவு செய்வதையும் அவர்கள் சஜ்தா செய்யும் போது முஸ்லிம்கள் எல்லாரும் சஜ்தா செய்வதையும் அபூஸுஃப்யான் கண்டு வியந்தார்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் பாதுகாப்புப் பணியில் நியமிக்கப்பட்டிருந்ததால், அந்தக் கூட்டுத் தொழுகையில் கலந்து கொள்ளவில்லை. ஆகவே அபூஸுஃப்யான் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம், இப்போது இவர்கள் எல்லாரும் என்ன செய்து கொண்டிருக்கிறார்கள்? முஹம்மது (ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்கள் எதைச் செய்கிறார்களோ அதையே இவர்கள் எல்லாரும் செய்கிறார்களே! இது எனக்கு மிகவும் வியப்பாக இருக்கிறதே என்று கேட்டதற்கு, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், நீங்கள் என்ன நினைத்துக் கொண்டிருக்கிறீர்கள்? இவர்கள் எல்லாரும் தொழுகையை நிறைவேற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த முஸ்லிம்களைப் பார்த்து, நீங்கள் உண்பதையும் பருகுவதையும் விட்டு விடுங்கள் என்று கட்டளையிட்டால், இவர்கள் எல்லாரும் எந்தத் தயக்கமுமின்றி உண்பதையும் பருகுவதையும் விட்டு விடுவார்கள் என்று கூறினார்கள். இதனைக் கேட்ட

அபூஸுஃப்யான், நான் மன்னர் கிஸ்ராவின் அவையையும் கண்டிருக்கிறேன். மன்னர் கெய்சரின் அவையையும் கண்டிருக்கிறேன். ஆனால் முஹம்மது (ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களின் ஜமாஅத்தைச் சார்ந்தவர்கள் அவர்களுக்காக எந்த அளவு அர்ப்பணம் செய்பவர்களாக இருக்கிறார்களோ அந்த அளவு அந்த மன்னர்களின் சமுதாயங்கள் அவர்களுக்கு அர்ப்பணம் செய்பவர்களாக இல்லை என்றார். அடுத்து அவர் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களிடம், நீங்களே முஹம்மது (ஸல்) அவர்களிடம் சென்று, அவர்களின் சமுதயாத்தினராகிய மக்காவாசிகளை மன்னித்தருளுமாறு வேண்டிக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொண்டார்.

தொழுகை முடிந்தவுடன் ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் அபூஸுஃப்யானை அழைத்துக் கொண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்றார்கள். அப்பொழுது அவர்கள் அபூஸுஃப்யானே! இறைவவனைத் தவிர வேறெவரும் வணக்கத்திற்குரியவர் இல்லை என்ற உண்மையைப் புரிந்து கொள்ளும் காலம் உமக்கு இதுவரை வரவில்லையா? என்று கேட்டதற்கு அபூஸுஃப்யான், என் தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணம் ஆகட்டுமாக! தாங்கள் மிக்க பொறுமையாளரும் மிகுந்த சகிப்புத்தன்மையைப் பெற்றவரும் மிகவும் உயர்வான பண்புகளைக் கொண்டவரும் உறவினர்களிடம் இணக்கமாகவும் மென்மையாகவும் நடந்து கொள்பவருமாக விளங்குகின்றீர்கள். இறைவனைத் தவிர வேறெவரும் வணக்கத்திற்குரியவராக இருந்தால், அவர் எங்களுக்கும் சிறிது உதவி செய்திருப்பார். எனவே அப்படியொருவர் இல்லை என்பதை இப்பொழுது நான் நன்றாக புரிந்து கொண்டேன் என்றார்.

இதன் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூஸுஃப்யானே! நான் இறைவனின் தூதர் என்பதை நீர் புரிந்து கொள்ளும் காலம் உமக்கு இதுவரை வரவில்லையா? என்று கேட்டதற்கு அபூஸுஃப்யான், என் தாயும் தந்தையும் தங்களுக்கு அர்ப்பணமாகட்டுமாக. இது குறித்து இப்பொழுது கூட எனக்குச் சில சந்தேகங்கள் இருக்கின்றன என்றார்.

ஆனால் இது குறித்து அவர் சந்தேகம் கொண்டிருந்த அதே வேளையில், இஸ்லாமியப் படையின் நோக்கத்தை தெரிந்து கொள்வதற்காக அவருடனேயே மக்காவிலிருந்து வந்த அவருடைய இரண்டு தோழர்களுள் ஹகீம் பின் ஹிஸாம் என்பவர் உண்மையைப் புரிந்து கொண்டு முஸ்லிமாகி விட்டார். இதன் பிறகு அபூஸுஃப்யானும் இஸ்லாத்தை ஏற்று முஸ்லிமாகி விட்டார். எனினும் அவர் மக்கா வெற்றிக்குப் பிறகே இஸ்லாத்தின் உண்மையை நன்றாக புரிந்தார் எனத் தெரிகிறது.

இஸ்லாத்தை ஏற்று நம்பிக்கை கொண்ட ஹகீம் பின் ஹிஸாம் என்பவர், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்கள் சமுதாயத்தினர்களை அழித்து விடுவதற்காகவா தாங்கள் இந்தப் படையை திரட்டிக் செகாண்டு வந்திருக்கிறீர்கள் ? என்று கேட்ட போது,, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தச் சமுதாயத்தினர்கள் அநீதியிழைத்துள்ளனர். அவர்கள் பாவம் செய்துள்ளனர். ஹுதைபிய்யா சமாதான உடன்படிக்கையை நீங்கள் எல்லாரும் முறித்தீர்கள். கஸாஆ இனத்தினருக்கு எதிராக அநியாயமாகப் போர் செய்தீர்கள். இறைவன் அமைதிக்குரிய இடமாக ஆக்கியுள்ள புனிதமான இடத்தில் நீங்கள் போர் செய்தீர்கள் என்று பதிலளித்தார்கள்.

பிறகு ஹகீம் பின் ஹிஸாம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் கூறுவது உண்மையே. தங்களுடைய சமுதாயத்தினர்கள் ஐயத்திற்கிடமின்றி அவற்றைச் செய்தனர். ஆனால் தாங்கள் மக்காவின் மீது படை எடுப்பதற்கு பதிலாக ஹவாஸின் சமுதாயத்தின் மீது படை எடுத்திருக்க வேண்டும் என்றார். இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்தச் சமுதாயம் அநீதியிழைத்துள்ளது. இறைவன் தனது அருளால் மக்கா வெற்றி, இஸ்லாத்தின் வெற்றி, ஹவாஸின் சமுதாயத்திற்குத் தோல்வி இவற்றையெல்லாம் என் மூலமாக நிறைவேற்றி வைப்பான் என்று நான் அவனிடம் உறுதியாக நம்பிக்கை வைத்துள்ளேன் என்றார்கள்.

இதற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களுக்குச் சகோதரராக ஆக்கியிருந்த ஹஸ்ரத் அபூருவைஹா (ரலி) அவர்களைக் குறித்து கூறிவிட்டு, நாம் இப்பொழுது அபூருவைஹாவிடம் நமது கொடியைக் கொடுக்கின்றோம். இவர் பிடித்திருக்கும் கொடியின் கீழ் வந்து நிற்பவர்களுக்கும் நாம் பாதுகாப்பு வழங்குவோம் என்றார்கள். அடுத்து ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களிடம், அபூருவைஹாவின் கொடியின் கீழ் வந்து நிற்பவர்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று நீங்கள் அறிவித்துக் கொண்டே இருங்கள் என்று கூறினார்கள்.

இதன் பிறகு, அபூஸுஃப்யான், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மக்காவாசிகள் ஆயுதங்கள் எடுக்காமலிருந்தால் அவர்களுக்குப் பாதுகாப்பு கிடைக்குமா? என்று கேட்டார். இதற்கு அவர்கள், ஆம்! தமது வீட்டின் கதவுகளை மூடிக் கொண்டு வீட்டிற்குள் இருப்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்றார்கள்.

ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! அபூஸுஃப்யான், பெருமைப்படுத்தப்பட வேண்டுமென்றே விருப்பம் கொண்டவராவார். அவரைக் கௌரவப்படுத்தும் விதமாக ஏதேனும் செய்யப்படுமா என்று கேட்டார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், மிக நன்று! அபூஸுஃப்யானின் வீட்டிற்குள் நுழைந்து விடுபவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படும். தமது ஆயுதங்களை எறிந்து விடுபவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படும். தமது வீட்டின் கதவுகளை மூடிவிட்டு அதனுள் இருப்பவர்களுக்கும் பாதுகாப்பு வழங்கப்படும் என்றார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இந்த கட்டளை, மிகவும் வியக்கத்தக்க நுட்பமான கருத்தைக் கொண்டிருகிறது. ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள், இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதனால் மக்கா வாசிகள் அவர்களின் கால்களில் கயிற்றைக் கட்டி அவர்களைத் தெருக்களில் இழுத்துச் சென்றனர். மக்காவின் தெருக்களும் அதன் திடல்களும் அமைதிக்குரிய இடங்களாக அவர்களுக்கு இருந்ததில்லை. மாறாக, அவை அவர்களுக்குத் துன்பங்கள் தந்து அவர்களை இழிவுபடுத்தி எள்ளி நகையாடும் இடங்களாக இருந்தன.

இவற்றையெல்லாம் கருத்திற்கொண்டே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இன்று ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களின் உள்ளம், அந்த மக்காவாசிகளைப் பழிவாங்க வேண்டுமென்று விரும்பிக் கொண்டிருக்கும். பற்றுமிக்க இந்தத் தோழருக்காக அவர்களைப் பழிவாங்குவதும், மிக்க அவசியமானதேயாகும். ஆனால் அதே சமயத்தில் நாம் அவர்களைப் பழிவாங்குவது இஸ்லாத்தின் மகிமைக்கு ஏற்றதாக இருக்காது எனக் கருதினார்கள்.

எனவே அவர்கள் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களைக் கொடுமைப்படுத்திய அந்தப் பகைவர்களின் கழுத்தைத்

துண்டித்துப் பழிவாங்கவில்லை. மாறாக, அவர்களுடைய சகோதரரின் கையில் ஒரு பெரிய கொடியை வழங்கி விட்டு, அவருடன் ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்களை நிற்கச் செய்து, என் சகோதரரின் கொடியின் கீழ் வந்து நிற்பவர்களுக்கு பாதுகாப்பு வழங்கப்படும் என்று அறிவித்து கொண்டிருக்குமாறு அவர்களைப் பணித்தார்கள். இந்த அளவிற்கு இனிமையாகவும் அழகாகவும் மக்காவாசிகள் பழிவாங்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் உரத்த குரலில், மக்காவாசிகளே! இதோ என் சகோதரரின் கொடியின் கீழ் வந்து நின்றால், உங்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று அறிவித்துக் கொண்டிருந்த போது, பழிவாங்க வேண்டும் என்ற உணர்வுகள் அவர்களின் உள்ளத்திலிருந்து மறைந்து போயிருக்கும். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் எனக்காக எவ்வாறு பழிவாங்க வேண்டும் எனத் தீர்மானித்துள்ளார்களோ அதை விட சிறந்த முறையிலும் அதைவிட அழகாகவும் வேறு எவ்விதத்திலும் பழிவாங்க முடியாது என்று ஹஸ்ரத் பிலால் (ரலி) அவர்கள் உணர்ந்து மகிழ்ந்திருப்பார்கள்.

இந்தப் படை மக்காவை நோக்கிச் சென்ற போது, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களுக்கு, இஸ்லாமியப் படையையும் அதன் தியாகத்தையும் அபூஸுஃப்யானும் அவருடைய தோழர்களும் பார்க்குமாறு அவர்களை ஏதாவதொரு வீதியின் வளைவிற்கு அழைத்துச் சென்று நிறுத்துங்கள் என்று கட்டளையிட்டார்கள். அவ்வாறே ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் செய்தார்கள். அரபு மக்களுள் எந்தெந்தக் கோத்திரங்களின் உதவிகளை மக்கா எதிர்பார்த்துக் கொண்டிருந்ததோ அந்தக் கோத்திரங்களெல்லாம், ஒன்றன் பின் ஒன்றாக அபூஸுஃப்யானையும் அவருடைய தோழர்களையும் கடந்து சென்று கொண்டிருந்தன.

எனினும் இன்று அந்தக் கோத்திரங்கள் குஃப்ர் என்னும் நிராகரிப்பின் கொடியை ஏந்திச் செல்லவில்லை. இன்று அவர்களெல்லாம் இஸ்லாத்தின் கொடியை ஏந்திச் சென்று கொண்டிருந்தார்கள். அவர்களின் நாவுகள் எல்லாம் வல்ல இறைவனின் ஏகத்துவத்தைப் பறைசாற்றிக் கொண்டிருந்தன. மக்காவாசிகள் எதிர்பார்த்தது போன்று அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கொல்வதற்காகச் செல்லவில்லை. மாறாக, அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்காக தங்கள் இரத்தத்தின் இறுதித்துளியையும் சிந்துவதற்கு ஆயத்தமாகிக் கொண்டிருந்தார்கள். இறைவன் ஒருவனே என்ற ஏகத்துவத்தை உலகில் பரப்பி, அதனை நிலைநாட்ட வேண்டும் என்பதே அவர்களின் உன்னத இலட்சியமாக இருந்தது.

முஸ்லிம்கள் ஒன்றன் பின் ஒன்றாக முன்னேறிச் சென்று கொண்டிருந்த போது அஷ்ஜஅ கோத்திரத்தைச் சார்ந்த படை வீரர்களும் முன்னேறிச் சென்றனர். இஸ்லாத்தின் மீது அவர்கள் கொண்டிருந்த பற்று, அதற்காகத் தங்களை அர்ப்பணித்துக் கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் ஆகியவை அவர்களின் முழக்கங்களிலிருந்தும் மிகத் தெளிவாகத் தெரிந்தன. இதனைக் கண்ட அபூஸுஃப்யான் இவர்கள் யார் எனக் கேட்டதற்கு, இவர்கள் அஷ்ஜஅ கோத்திரத்தினர்கள் என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள். இது கேட்டு அபூஸுஃப்யான் மிகுந்த வியப்போடு ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களைப் பார்த்து, அரபு மக்களுள் மற்றெல்லாரையும் விட இவர்களே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் மாபெரும் பகைவர்களாக இருந்தார்கள் என்றார்.

இதற்கு ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், இது இறைவனுடைய பேரருள். அவன் விரும்பினான்; அவர்கள் இஸ்லாத்தின் மீது பற்றுக் கொண்டு முஸ்லிம்களாகி விட்டனர் என்றார்கள். இறுதியில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், முஹாஜிர்கள் (மக்காவிலிருந்து குடிபெயர்ந்து சென்றார்கள்), அன்ஸாரிகள் (அவர்களுக்கு உதவி செய்தவர்களாகிய மதீனாவாசிகள்) ஆகியவர்களின் படையை வழிநடத்திச் சென்றார்கள். இவர்கள் மட்டும் இரண்டாயிரம் பேர். இவர்கள் போர்க்கவசம் அணிந்திருந்தனர். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள், இவர்களின் அணிவகுப்பைச் சரிசெய்து கொண்டும் வரிசைகளின் இடைவெளி சரிசமமாக இருக்கும் வண்ணம் நடந்து செல்லுங்கள் என்று கூறிக் கொண்டும் சென்றார்கள்.

இஸ்லாத்தின் இந்தத் தியாகிகளின் மகிழ்ச்சியும் உற்சாகமும் இவர்களின் உறுதிப்பாடும் இவர்களின் பற்றும் இவர்களது முகங்களிலிருந்து தெளிவாகத் தெரிந்து கொண்டிருந்ததைக் கண்ட அபூஸுஃப்யானுக்கு இனந்தெரியாத அச்சம் ஏற்பட்டது. இப்பொழுது அவர், இவர்கள் யார் என்று கேட்டதற்கு இவர்கள் தாம் முஹாஜிர்கள்; அன்ஸாரிகள்; இவர்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சென்று கொண்டிருக்கிறார்கள் என்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்.

இவற்றையெல்லாம் கண்ட அபூஸுஃப்யான், இந்தப் படையை எதிர்க்க உலகின் எந்தச் சக்தியாலும் இயலாது என்றார். பிறகு அவர் அப்பாஸ் அவர்களே ! உமது சகோதரரின் மகன் (நபிகள் நாயகம்) இன்று உலகிலுள்ள பலமிக்க அரசராகி விட்டார் என்று கூறினார். இதற்கு ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள் இப்பொழுது கூட உமது மனக்கண் திறக்கப்படவில்லை. இது வெறும் பௌதீக அரசல்ல; மாறாக இது நபித்துவமாகும்; முஹம்மது (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதராவார்கள் என்றார்கள். இதற்கு அபூஸுஃப்யான் சரி! சரி! அவர் அல்லாஹ்வின் தூதரேயாவார் என்று கூறினார்.

இஸ்லாமியப் படை அபூஸுஃப்யானைக் கடந்து சென்று கொண்டிருந்த போது, அன்ஸாரிகளின் தளபதியாகிய ஸஃதுபின் உபாதா (ரலி) அவர்கள், அபூஸுஃப்யானை பார்த்து இன்று நாங்கள் வாளின் வலிமையுடன் மக்காவிற்குள் நுழைவதை இறைவன் எங்களுக்கு ஆகுமானதாக்கி விட்டான். இன்று குரைஷியர் இழிவுபடுத்தப்படுவார்கள் என்றார்.

அபூஸுஃப்யானை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடந்து சென்று கொண்டிருந்த போது, அவர் உரத்த குரலில், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் தங்கள் சமுதாயத்தினரைக் கொன்றுவிட அனுமதி வழங்கி விட்டீர்களா? இப்போது அன்ஸாரிகளின் தளபதி ஸஃது அவர்களும் அவர்களின் நண்பர்களும், இன்று போர் தொடுக்கப்படும்; மக்காவின் மதிப்பு இன்று எங்களை, போர் செய்வதிலிருந்து தடுத்து நிறுத்தி விட முடியாது; குரைஷியர்களை நாங்கள் இழிவுபடுத்தியே தீருவோம் என்று முழங்கினார்களே!

அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் உலகிலேயே எல்லாரையும் விட மிக நல்லவராகவும், மிகுந்த கருணை காட்டுபவராகவும், உறவுகளைப் பேணுகின்றவராகவும் விளங்குகின்றீர்கள். இத்தகு மிகச் சிறந்த பண்புகளைக் கொண்ட தாங்கள் இன்று தங்கள் சமுதாயத்தினரின் அநீதிகளை மறந்து விட மாட்டீர்களா? என்று கேட்டார்.

இதற்கு முன் எந்த முஹாஜிர்கள் மக்காவின் வீதிகளில் அடித்துத் துன்புறுத்தப்பட்டார்களோ, எவர்களின் சொத்துகள் பறிக்கப்பட்டு தங்கள் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டார்களோ அந்த முஹாஜிர்கள் கூட அபூஸுஃப்யானின் முறையீட்டையும் அவரது பணிவான வேண்டுகோளையும் கேட்டு மிகவும் பரிவு கொண்டார்கள். அவர்களின் உள்ளத்தில் மக்காவாசிகள் தொடர்பாக இரக்கமும் கருணையும் ஏற்பட்டன. இதனால் அவர்கள் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மக்காவாசிகள் செய்த அநீதிகளைப் பற்றி அன்ஸார் கேட்டுத் தெரிந்துள்ளார்கள். அதன் காரணமாக அன்ஸாரிகள் மக்காவாசிகளாகிய குரைஷியர்களுடன் இன்று எவ்வாறு நடந்து கொள்வார்கள் என்பதை நம்மால் கணிக்கயியலாது என்று கூறினார்கள்.

அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூஸுஃப்யான் அவர்களே! ஸஃது சொன்னது தவறு. இன்று கருணை காட்டப்படும் நாள். இன்று இறைவன் குரைஷியர்களுக்கும், கஅபாவுக்கும் கண்ணியமளிக்க விரும்புகிறான் என்று கூறிவிட்டு ஒருவரை அனுப்பி ஸஃபை அழைத்து வரச் செய்து அவரிடம், உங்களிடமுள்ள கொடியை உங்கள் மகன் கைஸிடம் கொடுத்து விடுங்கள். உங்களுக்குப் பதிலாக அவர் அன்ஸார் படைக்குத் தளபதியாக இருப்பார்கள் என்றார்கள். (ஸீரத்துல் ஹல்மிய்யா; தொகுதி 3 பக்கம் 96)

இவ்வாறு செய்து ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவாசிகளின் உள்ளத்தில் அமைதி ஏற்படுமாறு செய்தார்கள். அன்ஸார் உள்ளத்திற்கும் வருத்தம் ஏற்படாதவாறு பார்த்துக் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கைஸிடம் முழுமையான நம்பிக்கையும் இருந்தது. அவர் இயல்பிலேயே மிக மென்மையான இளைஞராக விளங்கினார்.

அவரைப் பற்றி வரலாற்றில் பின்வருமாறு எழுதப்பட்டுள்ளது. அவருக்கு மரண வேளை நெருங்கிய போது பலர் நலம் விசாரிப்பதற்காக வந்தனர். சிலர் வரவில்லை. இதனால் அவர் தமது நண்பர்களிடம், எனக்குத் தெரிந்த சிலர் என்னை நலம் விசாரிக்க வரவில்லையே? இதற்கு என்ன காரணம்? என்று கேட்ட போது, அவருடைய நண்பர்கள், தாங்கள் பெரும் செல்வந்தர். மக்களுக்குப் பணக் கஷ்டம் ஏற்பட்ட போது தாங்கள் அவர்களுக்குக் கடன் கொடுத்து உதவி செய்தீர்கள். இந்த நகரத்தில் பலர் தங்களிடம் கடன்பட்டிருக்கிறார்கள். இப்பொழுது தங்களுக்கு பணம் தேவைப்படலாம். அவர்கள் இப்பொழுது தங்களை நலம் விசாரிக்க வந்தால் தாங்கள் அவர்களிடம் கடனை நிறைவேற்றுமாறு கேட்டு விடுவீர்களோ என்று அவர்கள் நினைத்ததால் தான் நலம் விசாரிக்க வரவில்லை என்றார்கள்.

இது கேட்டு அவர் என் நண்பர்களுக்கு அநாவசிமாகத் துன்பம் ஏற்பட்டிருக்கின்றது. இந்த நகரம் முழுவதிலும், எவர்களெல்லாம் கைஸுக்கு கடன் கொடுக்க வேண்டியதிருக்கிறதோ அவர்கள் எல்லாருடைய கடனையும் கைஸ் மன்னித்து விட்டார் என்று என் சார்பாக பொது அறிவிப்பு கொடுத்து விடுங்கள் என்று கூறினார். இந்த அறிவிப்பைக் கேட்டு மிக அதிகமானவர்கள் அவரை நலம் விசாரிக்க வந்தனர். மிக அதிகமானவர்களின் வருகையால் அவரது வீட்டின் வாசற்படிகள் தகர்ந்து போயின.

முஸ்லிம் படைகள் சென்று கொண்டிருந்த போது, ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்கள், அபூஸுஃப்யானிடம் இப்பொழுது நீங்கள் உங்கள் குதிரையில் மிக விரைவாக மக்காவுக்குச் சென்று மக்காவாசிகளிடம், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வந்து விட்டார்கள். அவர்கள் இன்ன இன்ன வகையில் மக்கா வாசிகளுக்குப் பாதுகாப்பு வழங்கியுள்ளார்கள் என்று அறிவித்து விடுங்கள் என்று கூறினார்கள்.

அபூஸுஃப்யான் தனது உள்ளத்தில், மக்காவாசிகளின் பாதுகாப்பிற்கான ஒரு வழியை தாம் ஏற்படுத்துவதில் பெரும் மகிழ்ச்சியடைந்த அதே வேளையில், ஆரம்பத்திலிருந்தே இஸ்லாத்தின் மீது வெறுப்பும் பகைமையும் கொள்ளுமாறு மக்களுக்குச் சொல்லி வந்தவரும், நிகாகரிப்பவராக இருந்துங்கூட உண்மையிலேயே துணிவு மிக்கவருமாகிய அவருடைய மனைவி ஹிந்தா என்பவள் அவரை நெருங்கி அவரது தாடியை பிடித்துக் கொண்டு மக்காவாசிகளைக் கூவியழைத்து இந்த அறிவற்ற இளைஞரைக் கொன்று விடுங்கள். நீங்கள் எல்லாரும் உங்கள் உயிர்களுக்கும் உங்கள் நகரத்திற்கும் கண்ணியமளிப்பதற்காகப் புறப்படுங்கள். பகைவர்களுடன் போரிட்டு வீர மரணமடையுங்கள் என்று உங்களுக்கு அறிவுரை கூறுவதற்கு பகரமாக இந்தக் கிழவர் உங்களுக்குப் பாதுகாப்பு வழங்கப்படும் என்று அறிவித்துக் கொண்டிருக்கிறார் என்றாள்.

அவள் இவ்வாறு கூறியதைக் கேட்ட அபூஸுஃப்யான், அறிவற்றவளே! உன் அறிவுரைகளின் படி நடப்பதற்குரிய நேரம் இதுவல்ல; ஓடிப்போய், உன் வீட்டிற்குள் ஒளிந்து கொள். நான் அந்தப் படைகளைக் கண்ணால் கண்டு வந்துள்ளேன். அரபு நாடு முழுவதிலுமுள்ள எந்தப் படைக்கும் முஸ்லிம் படைகளை எதிர்க்கும் சக்தி கிடையாது என்று கூறிவிட்டு, உரத்த குரலில், பாதுகாப்பிற்கான நிபந்தனைகளை விளக்கிக் கூறினார். இது கேட்டு மக்கள் எல்லாரும் பாதுகாப்பு வழங்கப்பட்ட இடங்களுக்கும் வீடுகளுக்கும் விரைந்து சென்றார்கள்.

அநியாயமாகக் கொலைகள் செய்து குழப்பம் விளைவித்தவர்கள் என்று நிரூபிக்கப்பட்ட பதினொன்று ஆண்களும், நான்கு பெண்களும் போர்க் குற்றவாளிகளாக இருந்தனர். அவர்கள் தொடர்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தப் பதினைந்து பேரும் நிராகரிப்பாளராக இருந்தனர் என்பதற்காகவோ, போரில் பங்கேற்று தம்மை எதிர்த்தனர் என்பதற்காகவோ அல்லாமல் அவர்கள் மனிதத்தன்மையற்ற கொடுஞ் செயல்களைச் செய்த குற்றவாளிகளாக இருப்பதால் அவர்கள் கொல்லப்பட வேண்டும் என்று கட்டளையிட்டார்கள். ஆனால் இறுதியில் நான்கு பேர் மட்டுமே கொல்லப்பட்டனர்.

இந்த சந்தர்ப்பத்தில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்களுக்கு, எவரும் தாமாக முன் வந்து போர் தொடுக்காத வரை நீங்கள் போர் செய்யக் கூடாது என்று மிகவும் வலியுறுத்திக் கட்டளையிட்டார்கள். ஆனால் எந்தப் பக்கத்திலிருந்து அவர்கள் நகருக்குள் நுழைந்தார்களோ அந்தப் பகுதி மக்களுக்கு மேற்கூறப்பட்ட பாதுகாப்பு பற்றிய அறிக்கை அந்த நேரம் வரைப் போய்ச் சேரவில்லை. இதனால் அந்தப் பகுதி நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மக்காவாசிகள் காலித் பின் வலீத் (ரலி) அவர்களைத் தாக்க தொடங்கினர். காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் திருப்பித் தாக்கிய போது அவர்கள் பன்னிரெண்டு அல்லது பதிமூன்று பேர் கொல்லப்பட்டனர்.

ஹஸ்ரத் காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் கோபமிக்கவராக இருந்ததால், ஒருவர் விரைந்து சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் நடந்த நிகழ்ச்சியைக் கூறி காலிதைத் தடுத்து நிறுத்தவில்லை என்றால் மக்காவாசிகள் எல்லாரையும் அவர் கொன்று குவித்து விடுவார் என்று கூறினார். உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் காலித் பின் வலீது அவர்களை வரவழைத்து நீங்கள் எவருடனும் போர் செய்யக் கூடாதென்று நான் உங்களுக்குத் தடை விதிக்கவில்லையா? என்று கேட்டதற்கு, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஆம். தாங்கள் தடை செய்திருந்தீர்கள். ஆனால் அவர்களே முதலில் எங்களைத் தாக்கினார்கள். மேலும் அவர்கள் எங்களை நோக்கி அம்பு எய்யத் தொடங்கி விட்டார்கள். நான் சற்று நேரம் வரை பொறுத்திருந்து விட்டு, நாங்கள் உங்களைத் தாக்க விரும்பவில்லை. நீங்கள் எங்களை தாக்காதீர்கள் என்று கூறினேன்.

ஆனால் அவர்கள் தங்கள் தாக்குதலிலிருந்து விலகிக் கொள்ளப் போவதில்லை என்று எனக்குத் தெரிந்த போது தான் நான் அவர்களைத் திருப்பித் தாக்கினேன். இறைவன் அவர்களை நான்கு திசைகளிலும் சிதறடித்து விட்டான் என்று காலித் பின் வலீத் (ரலி) அவர்கள் பதிலளித்தார்கள்.

எப்படியிருந்த போதிலும் இந்தச் சிறு நிகழ்ச்சியைத் தவிர வேறெந்த அசம்பாவிதமும் நிகழாமலேயே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவைக் கைப்பற்றினார்கள். அவர்கள் மக்காவிற்குள் நுழைந்த போது, மக்கள் அவர்களிடம், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தாங்கள் தங்கள் வீட்டில் தங்கப் போகிறீர்களா? என்று கேட்டதற்கு அவர்கள், எனது ஒன்று விட்ட சகோதரர் அகீல் எனக்கென்று எந்த வீட்டையாவது விட்டு வைத்திருக்கிறாரா? நான் இங்கிருந்து மதீனாவுக்கு குடிபெயர்ந்து சென்ற பிறகு என் உறவினர்கள் என் சொத்துக்களையெல்லாம் விற்றுத்தின்று விட்டார்களே. இப்பொழுது மக்காவில் எனக்கென்று எந்த உறைவிடமும் இல்லையே என்று கூறிவிட்டு நான் இப்பொழுது கைஃப் பனீ கினானாவில் தங்கியிருக்க முடிவு செய்துள்ளேன் என்றார்கள்.

கைஃப் பனீ கினானா என்பது மக்காவிலுள்ள ஒரு திடல். இங்கு தான் குரைஷியர்களும் கினானா கோத்திரத்தைச் சேர்ந்தவர்களும் இணைந்து ஹாஷிம் குடும்பத்தினரும் அப்துல் முத்தலிப் குடும்பத்தினரும் முஹம்மது (ரஸூலுல்லாஹி ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம்) அவர்களைப் பிடித்துத் தம்மிடம் ஒப்படைத்து விட வேண்டும்; அவ்விரு குடும்பத்தினரும் அவர்களுக்கு எந்த ஒத்துழைப்பும் கொடுக்கக் கூடாது. அவ்விரு குடும்பத்தினரும் இவ்வாறு செய்யாதவரை நாம் அந்தக் குடும்பங்களுடன் திருமணத் தொடர்போ எவ்வகையான கொடுக்கல், வாங்கலோ வைத்துக் கொள்ளக் கூடாது என்று சத்தியம் செய்து சபதம் எடுத்துக் கொண்டார்கள்.

இவ்வாறு அவர்கள் சபதம் செய்து கொண்ட பிறகே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் அவர்களின் பெரிய தந்தையார் அபூதாலிப் அவர்களும் அவர்களை ஏற்று இஸ்லாத்தைத் தழுவிய அனைவரும் அபூதாலிப் (க்குச் சொந்தமான) பள்ளத்தாக்கில் தஞ்சம் புகுந்தனர். இங்கு அவர்கள் மூன்று ஆண்டுகள் கடினமான துன்பங்களை அனுபவித்த பிறகு இறைவன் அவர்களுக்கு விடுதலையளித்தான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாங்கள் தங்குவதற்காக இந்த இடத்தைத் தேர்ந்தெடுத்தது மிகவும் பொருத்தமானது.

மக்காவாசிகள் இதே இடத்தில் தான் முஹம்மதை நம்மிடம் ஒப்படைக்காதவரை நாம் அவர்களின் குடும்பத்தினருடன் சமாதானம் செய்து கொள்ளப் போவதில்லை என்று சத்தியம் செய்து சபதமெடுத்துக் கொண்டார்கள். இன்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதே திடலில் வந்திறங்கினார்கள். இதன் மூலம் மக்கா வாசிகளுக்கு நான் எந்த இடத்திற்கு வர வேண்டுமென்று நீங்கள் விரும்பினீர்களோ அந்த இடத்திற்கு இன்று நான் வந்து விட்டேன். ஆனால் என்னை அநீதிகளுக்கு இலக்காக்கும் வலிமை உங்களுக்கு இன்று இருக்கிறதா? என்பதை மக்காவாசிகளே சற்று எண்ணிப் பாருங்கள்.

எந்த இடத்திற்கு நான் இழிவுபடுத்தப்பட்டவனாகவும் பழிக்கப் பட்டவனாகவும் வருவதை நீங்கள் காண விரும்பினீர்களோ, என் சமுதாயத்தினர் என்னைப் பிடித்துக் கொண்டு வந்து எந்த இடத்தில் என்னை ஒப்படைக்க வேண்டும் என்று நீங்கள் ஆசை சொண்டிருந்தீர்களோ அதே இடத்திற்கு நான் இன்று பெரும் வெற்றி வாகை சூடியவனாக வந்துள்ளேன்.

என் சமுதாயத்தினர் மட்டுமல்லாமல் அரபு மக்கள் எல்லாரும் இன்று என்னுடன் இருக்கின்றனர். என் சமுதாயத்தினர் என்னை உங்களிடம் ஒப்படைக்கவில்லை. மாறாக என் சமுதாயத்தினர் உங்களைத் தான் என்னிடம் ஒப்படைத்து விட்டனர் என்று கூறினார்கள்.

இறைவனுடைய ஒரு வல்லமையைப் பாருங்கள். இந்த நாள் திங்கட்கிழமையாக இருந்தது. இதற்கு முன் இதே நாளில் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஸவ்ர் குகையிலிருந்து வெளியேறி ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்களுடன் மதீனாவிற்குக் குடியெர்ந்து சென்றார்கள். மேலும் இதே நாளில் தான் ஸவ்ர் குகையின் குன்றின் மேல் நின்றுகொண்டு மிகுந்த வருத்தத்துடன் மக்காவை நோக்கி, மக்கா நகரமே! உலகிலுள்ள எல்லா நகரங்களையும் விட நீயே எனக்கு மிகவும் பிரியமான நகரமாக விளங்குகின்றாய். ஆனால் என் மக்கள் என்னை இங்கு வாழவிடவில்லையே என்று கூறினார்கள்.

மக்காவிற்குள் நுழைந்து கொண்டிருந்த போது ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் ஒட்டகத்தின் கயிற்றைப் பிடித்தவாறு அவர்களுடன் பேசிக்கொண்டும் மக்கா வெற்றி குறித்து அறிவிக்கப்பட்டிருந்த திருக்குர்ஆனின் ஃபத்ஹ் (வெற்றி) என்னும் அதிகாரத்தை ஓதிக் கொண்டும் சென்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நேராக கஅபத்துல்லாஹ்வுக்குச் சென்று ஒட்டகத்தின் மீது இருந்து கொண்டே அதனை ஏழு முறை தவாஃப் செய்தார்கள் (சுற்றி வந்தார்கள்). அப்போது அவர்களின் கையில் ஒரு கைத்தடி இருந்தது.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களும் அவர்களின் மகன் ஹஸ்ரத் இஸ்மாயீல் (அலை) அவர்களும் ஒரே இறைவனை வணங்குவதற்காக கட்டிய கஅபத்துல்லாவை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சுற்றிப் பார்த்தார்கள். அங்கு வைக்கப்பட்டிருந்த முந்நூற்றி அறுபது (360) சிலைகளுள் ஒவ்வொன்றின் மீதும் அவர்கள் அந்தக் கைத்தடியால் அடித்து, ஜா அல் ஹக்கு வஜஹகல் பாதிலு – இன்னல் பாதில கான ஸஹூகா என்று கூறினார்கள். இதன் பொருள், உண்மை வந்து விட்டது. பொய் ஓடி விட்டது. பொய்யானது ஓடி விடக்கூடிய ஒன்றேயாகும். (திருக்குர்ஆன் 17:82)

திருக்குர்ஆனின் பனீ இஸ்ராயீல் என்னும் அதிகாரத்திலுள்ள இந்த வசனம் (17:82) ஹஸ்ரத் நபிகள்

நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவிலிருந்து மதீனாவுக்கு ஹிஜ்ரத் செய்வதற்கு (குடி பெயர்ந்து செல்வதற்கு) முன் அவர்களுக்கு அருளப்பட்டதாகும். இந்த அதிகாரத்தில், அவர்கள் ஹிஜ்ரத் செய்ய வேண்டியது வரும் என்பது பற்றியும் பின்னர் அவர்கள் மக்காவை வெற்றி கொள்வார்கள் என்பது பற்றியும் முன்னறிவிக்கப்பட்டுள்ளது. இந்த அதிகாரம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செல்வதற்கு முன்னர் அருளப்பட்டதே என்று ஐரோப்பிய நூலாசிரியர்களும் ஒன்றுபட்டு உறுதி செய்துள்ளனர்.

இதில் விளக்கப்பட்ட கருத்தாவது : நீர் கூறுவீராக. என் இறைவா! என்னை (வெற்றியாளனாக மீண்டும் மக்காவிற்குள்) நல்ல முறையில் நுழையச் செய்வாயாக. நற்பெயரை விட்டுச் செல்லும் முறையில் (ஹிஜ்ரத்தின் போது மக்காவிலிருந்து) என்னை வெளியேறச் செய்வாயாக. மேலும் உன்னிடமிருந்து எனக்கு உதவியாளராகவும் சாட்சியாகவும் விளங்கும் ஒருவரை நியமிப்பாயாக. நீர் (எல்லா மக்களிடமும்) கூறுவீராக. (இப்பொழுது) உண்மை வந்து விட்டது. பொய் ஓடி விட்டது. பொய்யானது ஓடிவிடக்கூடிய ஒன்றயோகும் **(17:81,82)**

இந்த வசனத்திலுள்ள முன்னறிவிப்புகள் சொல்லுக்குச் சொல் முழுமையாக நிறைவேறின. ஹஸ்ரத் அபூபக்ர் (ரலி) அவர்கள் இந்த வசனங்களை ஓதிய நேரத்தில் முஸ்லிம்களின் உள்ளங்களிலும் நிராகரித்தவர்களின் உள்ளங்களிலும் என்னென்ன உணர்வுகள் பொங்கி எழுந்திருக்கும் என்பதை சொற்களால் கூறயியலாது.

ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்கள் எழுப்பிய ஆலயம் அந்த நாளில் மீண்டும் ஒரே இறைவனை வணங்குவதற்காக ஆக்கப்பட்டு விட்டது. அங்கிருந்த சிலைகள் உடைக்கப்பட்டு நிரந்தரமாக அகற்றப்பட்டு விட்டன.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹுபல் என்னும் சிலையின் மீது தங்கள் கைத்தடியால் அடித்து, அது தனக்குரிய இடத்திலிருந்து கீழே விழுந்து நொறுங்கிய போது ஹஸ்ரத் ஸுபைர் (ரலி) அவர்கள் அபூஸுஃப்யானைப் பார்த்து புன்னகை செய்தவர்களாக, அபூஸுஃப்யான் அவர்களே! உஹுதுப் போரில் முஸ்லிம்களுக்குக் கடினமான காயங்கள் ஏற்பட்டு ஒரு பக்கமாக ஒதுங்கி நின்ற போது நீங்கள் மிகுந்த பெருமையுடன், ஹுபலின் மகிமை வாழ்க, ஹுபலின் மகிமை வாழ்க என்று முழங்கி அந்தப் போரில் முஸ்லிம்களின் மீது ஹுபல் என்ற அந்தச் சிலையே உங்களுக்கு வெற்றியை வழங்கியது என்று அறிவித்தது உங்களுக்கு நினைவு இருக்கிறதா? ஆனால் இன்று அது உங்களுக்கு முன்னால் உடைந்து கிடப்பதைப் பார்க்கின்றீர்கள் என்று கூறினார்கள்.

இதற்கு அபூஸுஃப்யான், ஸுபைர் அவர்களே! இப்பொழுது அவற்றைப் பற்றிப் பேச வேண்டாம். ஏனென்றால் இன்று எங்களுக்கு உண்மை என்னவென்று நன்கு புரிந்து விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் இறைவனுடன் வேறொர் இறைவனும் இருந்திருப்பின், இன்று எங்களுக்கு ஏற்பட்டிருக்கும் இந்த இழிநிலை ஒருபோதும் ஏற்பட்டிருக்காது என்று கூறினார்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், கஅபாவின் சுவர்களில் காணப்பட்ட ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் உருவப்படத்தையும் பிற உருவப் படத்தையும் அழித்து விடுமாறு கட்டளையிட்டு கஅபாவிற்குள் சென்று இறைவனுடைய வாக்குறுதிகள் நிறைவேறியதற்கு நன்றி செலுத்துவதற்காக இரண்டு ரகஅத் தொழுகையை நிறைவேற்றினார்கள். பிறகு வெளியில் வந்து இரண்டு ரகஅத் தொழுகையை நிறைவேற்றினார்கள்.

கஅபாவின் சுவர்களில் வரையப்பட்டிருந்த உருவப் படங்களை அழிப்பதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்களை நியமித்தார்கள். ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களை நாமும் நபி என்று ஏற்றுக் கொண்டிருக்கின்றோம் என்று நினைத்து அவர்களின் உருவப்படத்தை ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் அழிக்கவில்லை.

அந்த உருவப்படம் அழிக்கப்படாமலிருப்பதைக் கண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமர் அவர்களே! நீங்கள் ஏன் இந்த உருவப்படத்தை அழிக்கவில்லை? இறைவன் திருக்குர்ஆனில், இப்ராஹீம் யூதராகவோ கிறித்தவராகவோ இருக்கவில்லை. மாறாக, ஏக இறைவனை வணங்குபவராகவும் (அவனுக்கு முற்றிலும்) கட்டுப்பட்டவராகவும் இருந்தார். அவர் இணை வைப்பவர்களைச் சார்ந்தவராக இருக்கவில்லை **(3:36)** என்று கூறவில்லையா ? எனவே இதனையும் அழித்து விடுங்கள் என்றார்கள். பிறகு அதுவும் அழிக்கப்பட்டது.

இறைவனுடைய முன்னறிவிப்புகள் நிறைவேறியதைக் கண்ட முஸ்லிம்களின் உள்ளம் அந்த நாளில் ஈமான் என்னும் நம்பிக்கையால் நிரம்பிற்று. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் உயரிய அந்தஸ்த்தில் அந்த முஸ்லிம்களுக்கு ஏற்பட்ட உறுதிப்பாட்டிற்கு ஓர் எல்லையே இல்லாமற் போயிற்று. இதற்கு ஓர் எடுத்துக்காட்டு ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களின் மகன் அற்புதமாக வெளிப்படச் செய்த ஸம் ஸம் என்னும் நீரூற்றிலிருந்து தண்ணீர் அருந்துவதற்காக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனைக் கொண்டு வரச் செய்து அதிலிருந்து சிறிது தண்ணீர் அருந்து விட்டு எஞ்சிய தண்ணீரில் அவர்கள் வுளு செய்த போது அவர்களின் உடலிலிருந்து ஒரு சொட்டுத் தண்ணீர் கூட நிலத்தில் விழாத வண்ணம் முஸ்லிம்கள் அதனைத் தங்கள் கைகளில் ஏந்தி அதனை அருளுக்குரியதாகக் கருதி தங்கள் உடல்களில் தேய்த்துக் கொண்டனர்.

இறைவனுக்கு இணை வைப்பவர்கள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் முஸ்லிம்கள் வைத்திருந்த இத்தகைய பற்றைக் கண்டு உலகில் எந்த மன்னருடைய மக்களும் அந்த மன்னரிடம் இந்த அளவு பற்று வைத்திருப்பதை நாங்கள் கண்டதில்லை என்று வியந்தனர். மேற்கூறப்பட்டவற்றை முடித்து விட்டு அமர்ந்திருந்த ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன், மக்காவாசிகள் கொண்டு வரப்பட்டு நிறுத்தப்பட்ட போது அவர்கள், மக்காவாசிகளே! இறைவனுடைய முன்னறிவிப்புகள் சொல்லுக்குச் சொல் அப்படியே நிறைவேறியதை கண்டீர்கள். ஒரே இறைவனை வணங்கி வந்த ஏழை அடியார்களுக்கு நீங்கள் செய்து வந்த அநீதிகளுக்கும் தீமைகளுக்கும் பதிலாக இப்பொழுது உங்களுக்கு என்ன தண்டனை வழங்கப்பட வேண்டும் என்பதை நீங்களே சொல்லுங்கள் என்று கூறினார்கள்.

இதற்கு மக்காவாசிகள், ஹஸ்ரத் யூஸுஃப் (அலை) அவர்கள் தங்கள் சகோதரர்களுடன் நடந்து கொண்டது போன்று தாங்கள் எங்களுடன் நடந்து கொள்வீர்கள் என்று நாங்கள் நம்புகிறோம் என்றனர். இங்கு இறைவனின் வல்லமையைப் பாருங்கள். திருக்குர்ஆனில் யூஸுஃப் என்னும் அதிகாரத்தில் இறைவன் ஏற்கெனவே முன்னறிவித்திருந்த

அதே சொற்கள் மக்காவாசிகள் வாயிலிருந்து வெளியாயின. யூஸுஃப் தமது சகோதரர்களுடன் நடந்து கொண்டது போன்றே நீர் மக்காவாசிகளுடன் நடந்து கொள்வீர்கள் என்று இறைவன் மக்கா வெற்றிக்குப் பத்து ஆண்டுகளுக்கு முன்னரே அறிவித்து விட்டான்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களை மன்னிப்பதில் ஹஸ்ரத் யூசுஃப் (அலை) அவர்களைப் போன்றவர்களாவார்கள். இறைவன் அவர்களுக்குத் தங்கள் சகோதரர்களின் மீது வெற்றியை வழங்கியது போன்று அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும் தங்கள் நாட்டு மக்களாகிய சகோதரர்களின் மீது வெற்றியை வழங்கியுள்ளான் என்ற உண்மையை மக்காவாசிகள் மனப்பூர்வமாக ஏற்றுக் கொண்ட போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், வல்லாஹி லா தஸ்ரீப் அலைக்குமுல் யவ்ம – இறைவன் மேல் ஆணையாக! இன்று உங்களுக்கு எவ்வித தண்டனையும் வழங்கப்பட மாட்டாது. மேலும் எவ்வித நிபந்தனையும் செய்யப்பட மாட்டாது என்று பகிரங்கமாக அறிவிப்புச் செய்தார்கள்.

பின்னர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கஅபாவிற்குச் சென்று அங்கு செய்யப்பட வேண்டிய வணக்கங்களைச் செய்து விட்டு தங்கள் சமுதாயத்தினருக்கு மன்னிப்பு வழங்கிக் கொண்டிருந்த போது மதீனா வாசிகளாகிய அன்ஸார் உள்ளத்தில் கவலை உருவானது. அவர்களுள் ஒருவருக்கொருவர் சைகை மூலம், இன்று அல்லாஹ்வின் தூதர் நம்மை விட்டு பிரிந்து விடுவார்கள் போல் தோன்றுகிறது. ஏனென்றால், அவர்கள் தங்கள் நகரத்தைத் தங்கள் கைகளாலேயே வெற்றி கொள்ளுமாறு இறைவன் அருள் செய்து விட்டான். அவர்களின் சமுதாயத்தினர் அவர்கள் மீது நம்பிக்கை கொண்டு விட்டனர் என்று விரக்தியோடு பேசிக் கொண்டனர்.

அப்பொழுது இறைவன் வஹி மூலம் அன்ஸாரிகளின் இந்த ஐயப்பாடுகள் பற்றி ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத் தெரிவித்தான். இதனால் அவர்கள் தங்கள் தலையை உயர்த்தி அன்ஸார் சகோதரர்களைப் பார்த்து, அன்ஸார் சகோதரர்களே! அல்லாஹ்வின் தூதர் முஹம்மதை தமது நகரத்தின் மீதுள்ள அன்பு வாட்டிவதைக்கிறதென்றும் அவர் தமது சமுதாயத்தினரிடம் கொண்டிருக்கும் பாசம் அவரது உள்ளத்திற்கு மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்திக் கொண்டிருக்கிறதென்றும் நீங்கள் நினைக்கின்றீர்கள்.

இது கேட்டு, அன்ஸார், அல்லாஹ்வின் தூதர் அவர்களே ! ஆம். அவ்வாறான எண்ணம் எங்கள் உள்ளத்தில் ஏற்பட்டது உண்மையே என்று கூறினார்கள். இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் என் பெயர் என்னவென்று உங்களுக்குத் தெரியும். நான் இறைவனின் அடியார் என்றும் அவனுடைய தூதர் என்றும் அழைக்கப்படுகிறேன்.

இவ்வாறிருக்கும் போது, இஸ்லாத்தை தழுவியவர்கள் பலவீனமானவர்களாக இருந்த நேரத்தில் தங்கள் உயிர்களை வியக்கத்தக்க வகையில் அர்ப்பணம் செய்தவர்களாகிய உங்களை விட்டு விட்டு நான் வேறொரிடத்திற்குச் செல்வதென்பது என்னால் எப்படி முடியும்?

அன்ஸார் சகோதரர்களே ! நான் அல்லாஹ்வின் அடியாரும் அவனது தூதருமாக இருக்கிறேன். நான் இறைவனுக்காக எனது ஊரை விட்டுச் சென்றேன். அதன் பிறகு நான் இப்பொழுது எனது ஊருக்குத் திரும்பி வர இயலாது. நான் உங்களுடனேயே வாழ்ந்து உங்களுடனேயே மரணிப்பேன் என்று கூறினார்கள். (அதாவது நான் இங்கேயே தங்கிவிட முடியாது).

மதீனாவாசிகள் அவர்கள் கூறியவற்றைக் கேட்டு, அவர்கள் தங்கள் மீது கொண்டிருக்கும் பாசத்தையும் நேசத்தையும் கண்டு கண்ணீர் வடித்தவர்களாக முன் வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இறைவன் மேல் ஆணையாக! நாங்கள் இறைவனிடமும் அவனது தூதரிடமும் தவறான எண்ணம் கொண்டிருந்தோம். இதற்குக் காரணம், இறைத் தூதர் எங்களையும் எங்கள் நகரத்தையும் விட்டு விட்டு வேறு எங்காவது சென்று விடுவார்களோ என்ற எண்ணம் எங்கள் உள்ளத்தில் தோன்றியதை எங்களால் சகித்துக் கொள்ள இயலாதிருந்ததேயாகும் என்றனர்.

இது கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வும் அவனது தூதரும் உங்களை நிரபராதியாகக் கருதுகின்றனர். உங்களுடைய மாசற்ற பற்றை உண்மைப்படுத்திப் பாராட்டுகின்றனர் என்றார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கும், மதீனா வாழ் மக்களுக்கும் இடையேயுள்ள அன்பையும் பாசத்தையும் எடுத்துக்காட்டும் இத்தகு உரையாடல்கள் நிகழ்ந்து கொண்டிருந்த போது மக்காவாசிகளின் கண்கள் கண்ணீர் வடிக்காமல் இருந்திருக்கலாம். ஆனால் நிச்சயமாக அவர்களின் உள்ளம் இரத்தக் கண்ணீர் சிந்தியிருக்கும்.

அவர்கள் தங்கள் உள்ளத்தில் உலகில் இனிமேல் ஒருபோதும் தோன்ற முடியாததும் விலைமதிக்க முடியாததும் மிகவும் அற்புதமானதுமான வைரம் ஒன்றினை (நபிகள் நாயகத்தை) இறைவன் தங்களுக்கு வழங்கினான்.

ஆனால் தாமோ அதனைத் தங்கள் வீடுகளிலிருநது தூக்கி எறிந்து விட்டனர். இப்பொழுது அந்த வைரம், இறைவனின் அருளாலும் அவனது உதவியாலும் மீண்டும் மக்காவிற்கு வந்தது. ஆனால் அது தனது உறுதிமொழியை நிறைவு செய்யும் வண்ணம் தனது விருப்பத்துடனும் மிகுந்த மகிழ்ச்சியுடனும் மக்காவை விட்டு விட்டு மதீனாவுக்குத் திரும்பிச் சென்று கொண்டிருக்கிறதே என்று ஏங்கி உள்ளத்தால் அழுது இருப்பார்கள்.

பல அநீதிகள் இழைத்ததற்காகவும் நியாயமற்ற முறையில் பயங்கரமான பல கொலைகள் செய்ததற்காகவும் எவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரண தண்டனை விதித்துத் தீர்ப்பு வழங்கியிருந்தார்களோ அவர்களுள் பெரும்பாலானவர்களைக் குறித்து சில முஸ்லிம்கள் செய்த பரிந்துரையின் காரணமாக அவர்களுக்கு மரண தண்டனை வழங்கப்படவில்லை. அவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

அவர்களுள் அபூஜஹ்லின் மகன் இக்ரிமாவும் ஒருவராவார். அவரது மனைவி மனத்தளவில் முஸ்லிமாகியிருந்தாள். அவள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் சென்று, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! இக்ரிமாவையும் தாங்கள் மன்னித்தருளுமாறு வேண்டுகிறேன் என்றாள். இதற்கு அவர்கள் சரி; நாம் அவரையும் மன்னித்து விட்டோம் என்றார்கள். இக்ரிமா மக்காவிலிருந்து வெருண்டோடி அபிசீனியா நாட்டிற்கு சென்று கொண்டிருந்தார்.

அவர் மனைவி, அவர் மீது கொண்டிருந்த அன்பின் காரணமாக அவரைத் தேடிச் சென்றாள். அவர் கடற்கரையில் நின்று கொண்டிருந்த ஒரு படகில் ஏறி அமர்ந்து, அரபு நாட்டை நிரந்தரமாக விட்டுச் செல்ல ஆயத்தமாகிக் கொண்டிருந்த போது தலைவிரிக் கோலத்துடன பதற்றமும் கவலையும் அடைந்த

நிலையில் அங்கு வந்து சேர்ந்த அவரது மனைவி, என் சிறிய தந்தையார் மகனே! (தங்கள் கணவர்களைப் பார்த்து இவ்வாறு அழைப்பது அரபுப் பெண்களின் வழக்கமாக இருந்தது) மிகச் சிறந்த பண்புகளையும் மிகுந்த கருணை உள்ளமும் கொண்ட ஒரு மனிதரை (நபிகள் நாயகத்தை) விட்டு விட்டு நீங்கள் எங்குச் சென்று கொண்டிருக்கின்றீர்கள்? என்று கேட்டாள்.

இக்ரிமா மிகவும் வியப்படைந்து தமது மனைவியிடம், கடும் பகைமையைக் காட்டிய என்னை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மன்னித்து விட்டார்களா என்று கேட்டதற்கு ஆம். நான் அவர்களிடம் உறுதிமொழி வாங்கி விட்டேன். அவர்கள் உங்களை மன்னித்து விட்டார்கள் என்று அவள் கூறினாள். பின்னர் இக்ரிமா, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து மிக்க பணிவுடன் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! மாபெரும் பகைவனாகிய என்னைக் கூடத் தாங்கள் மன்னித்து விட்டதாக என் மனைவி கூறுகின்றாள் என்றார்.

இதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் உமது மனைவி கூறுவது உண்மையே. நாம் உம்மை மன்னித்து விட்டோம் என்றார்கள். இது கேட்டு இக்ரிமா, இந்த அளவிற்கு கொடிய பகைவர்களைக் கூட மன்னிக்கக் கூடியவர், ஒருக்காலும் பொய்யராக இருக்க முடியாது. எனவே அல்லாஹ் ஒருவன்; அவனுக்கு இணையானது எதுவும் இல்லை என்றும் முஹம்மது (ஸல்) அவர்களே, தாங்கள் அவனுடைய அடியாரும் அவனுடைய தூதருமாவீர்கள் என்றும் நான் சாட்சி கூறுகின்றேன் என்று கூறி வெட்கித் தலைகுனிந்து நின்றார்.

அவருடைய நிலையைக் கண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு ஆறுதல் அளிப்பதற்காக, இக்ரிமாவே! நாம் உம்மை மன்னித்து விடுவது மட்டுமல்லாமல், இன்னொன்றையும் உமக்கு வழங்கவிருக்கின்றோம். அதாவது இன்று என்னால் உமக்குத் தர முடிகின்ற எந்தப் பொருளைக் கேட்டாலும் அந்தப் பொருளை நான் உமக்குத் தருவேன் என்றார்கள். இது கேட்டு இக்ரிமா, அல்லாஹ்வின் தூதர் அவர்களே! தங்களைப் பல்வேறு வகையிலும் எதிர்த்துக் கொண்டிருந்த என்னை மன்னித்து விடுமாறு தாங்கள் இறைவனிடம் பிரார்த்தனை செய்வீர்களாயின் எனக்கு அதைவிட மேலான விருப்பம் எதுவும் இல்லை என்று கூறினார்.

உடனே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இறைவனிடம், என் இறைவா! இக்ரிமா என்னிடம் காட்டிய எல்லா எதிர்ப்புகளையும் அவரது வாயிலிருந்து வெளிவந்த எல்லா வசைமாரிகளையும் மன்னித்தருள்வாயாக என்று அவருக்காகப் பிரார்த்தனை செய்து விட்டு பின்னர் எழுந்து வந்து தங்களுடைய மேலாடையைக் கழற்றி அவருக்குப் போர்த்தி அல்லாஹ்வின் மீது நம்பிக்கை கொண்டு நம்மிடம் வருகின்றவருக்கு நம் வீடு அவருடைய வீடாகவும், நம் இடம் அவருடைய இடமாகவும் இருக்கும் என்றார்கள்.

இக்ரிமா இறைவன் மீது நம்பிக்கை கொண்டு இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டதால், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பல ஆண்டுகளுக்கு முன்பே தங்கள் தோழர்களாகிய சஹாபிகளிடம் கூறிய ஒரு முன்னறிவிப்பு நிறைவேறியது.

அவர்கள் கூறிய அந்த முன்னறிவிப்பானது, நான் ஒரு கனவு கண்டேன். அந்தக் கனவில் நான் சுவர்க்கத்தில் இருக்கிறேன். அங்குத் திராட்சைக்குலை ஒன்றைக் கண்டேன். இது யாருக்கு என்று மக்களிடம் கேட்டேன். இது அபூஜஹ்லுக்கு என்று ஒருவர் பதிலளித்தார். இது எனக்கு வியப்பை ஏற்டுத்தியது. எனவே நான் நம்பிக்கை கொண்டவர்களைத் தவிர வேறெவரும் சுவர்க்கத்தில் நுழைவதில்லையே. அப்படியிருக்க நம்பிக்கை கொள்ளாத அபூஜஹ்லுக்கு எவ்வாறு சுவர்க்கத்தில் திராட்சை வழங்கப்படவிருக்கிறது என்று எண்ணினேன். இன்று இக்ரிமா நம்பிக்கை கொண்டதும், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்தத் திராட்டைச் குலை இக்ரிமாவுக்குரியதாகும். மகனுடைய பெயருக்குப் பதிலாக தந்தையின் பெயரை இறைவன் கூறியுள்ளான். கனவுகளில் பெரும்பாலும் இவ்வாறு காட்டப்படுவதுண்டு என்று கூறினார்கள். (ஆதாரம் : ஸீரத்துல் ஹல்பிய்யா தொகுதீ 3 பக்கம் 104)

மரண தண்டனை வழங்கப்பட வேண்டுமென்று விதிக்கப்பட்டவர்களுள், ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் ஒரு மகள் ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்களின் மரணத்திற்குக் காரணமாக இருந்தவரும் ஒருவராவார். அவர் பெயர் ஹப்பார். ஹஸ்ரத் ஸைனப் (ரலி) அவர்கள் அமர்ந்து சென்ற ஒட்டகையின் தொட்டில் கயிற்றை அவர் துண்டித்ததால் அவர்கள் அதிலிருந்து கீழே விழுந்தார்கள். இதனால் அவர்களின் கர்ப்பம் கலைந்து போயிற்று. அடுத்து சில நாட்களுக்குப் பிறகு அவர்கள் மரணமடைந்து விட்டார்கள்.

அவர் இந்த குற்றத்தை மட்டுமல்லாமல் இன்னும் பல கொடூரமான குற்றங்களைச் செய்திருந்ததால், மரண தண்டனைக்கு உரியவராக இருந்தார். பல குற்றங்களைச் செய்த அவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் தங்களை விட்டு வெருண்டோடி ஈரானுக்குச் சென்று கொண்டிருந்தேன். அப்போது இறைவன் தனது நபியின் மூலம் இணை வைக்கும் நம் எண்ணங்களை அகற்றி, ஆன்மீக அழிவிலிருந்து நம்மைக் காப்பாற்றி விட்டான். எனவே நான் மற்றவர்களிடம் செல்வதற்குப் பதிலாக அவரிடம் (நபிகள் நாயகத்திடம்) சென்று, நான் செய்த பாவங்களை ஒப்புக் கொண்டு அவரிடம் மன்னிப்புக் கோர வேண்டும் என்று என் மனம் கூறியது என்றார்.

இது கேட்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், ஹப்பார் அவர்களே! இறைவன் உங்கள் உள்ளத்தில் இஸ்லாத்தின் மீது பற்றை ஏற்படுத்தியிருக்கும் போது நான் ஏன் உங்கள் பாவங்களை மன்னிக்கக் கூடாது ? நிச்சயமாக நான் உங்களை மன்னித்து விட்டேன். நீங்கள் இதற்கு முன் செய்த குற்றங்களையெல்லாம் இஸ்லாம் அழித்து விட்டது என்றார்கள்.

மிகவும் பயங்கரமான குற்றச் செயல்களைச் செய்தவர்களுள் பலர், தங்களுக்குக் கருணை காட்டுமாறு சாதாரணமாக வேண்டிக் கொண்டதன் பேரில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த குற்றவாளிகளை மன்னித்து விட்டார்கள். இவையெல்லாம் குறித்து இங்கு எழுதுவதாயின், இத்தொடர் மிகவும் நீண்டு விடுமாதலால் மேற்கூறப்பட்ட இவற்றுடன் முடித்துக் கொள்கிறேன்.

பெரும்பாலானவர்கள் முஸ்லிம்களுக்கு இழைத்த குற்றச் செயல்கள் மிகவும் கொடூரமானவையாக இருந்தன. எனினும் அவற்றை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிக்க பெருந்தன்மையுடன் மிகுந்த கருணையுடனும் மன்னித்தருளினார்கள். அவற்றை காணும் போது கல்நெஞ்சமுள்ள மனிதராலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் புகழ்ந்து பாராட்டாமல் இருக்கவியலாது.

### 2017 ஆம் ஆண்டு நடைபெற்ற காதியான் ஆண்டு மாநாட்டில் நிகழ்த்தப்பட்ட உரை

# ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கை இறைவன் பக்கம் அழைத்தல் என்பதன் ஒளியில்

மவ்லவி முஹம்மது இனாம் கோரி – நாஸிர் ஆலா காதியான்

يٰۤاَيُّهَا النَّبِيُّ اِنَّاۤ اَرْسَلْنٰكَ شَاهِدًا وَّمُبَشِّرًا وَّنَذِيْرًا ۙ وَّدَاعِيًا اِلَى اللّٰهِ بِاِذْنِهٖ وَسِرَاجًا مُّنِيْرًا ۙ

இந்த வசனங்களின் பொருள் இதுவாகும். அதாவது நபியே (ஸல்) ! நாம் உம்மை ஒரு சாட்சியாகவும் நற்செய்தி கூறுபவராகவும் எச்சரிக்கை செய்பவராகவும் அனுப்பியுள்ளோம். அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப அவன் பக்கம் மக்களை அழைப்பவராகவும், ஒளி தரக்கூடிய சூரியனாகவும் உம்மை அனுப்பியுள்ளோம். (33:46–47)

يٰۤاَيُّهَا الرَّسُوْلُ بَلِّغْ مَاۤ اُنْزِلَ اِلَيْكَ مِنْ رَّبِّكَ ؕ وَاِنْ لَّمْ تَفْعَلْ فَمَا بَلَّغْتَ رِسَالَتَهٗ ؕ وَاللّٰهُ يَعْصِمُكَ مِنَ النَّاسِ ؕ اِنَّ اللّٰهَ لَا يَهْدِى الْقَوْمَ الْكٰفِرِيْنَ ۙ

தூதரே (ஸல்)! உமது இறைவனிடமிருந்து எது உம்மீது இறக்கப்பட்டிருக்கின்றதோ அதை மக்களுக்கு எட்ட வைப்பீராக. நீர் அவ்வாறு செய்யாமல் இருந்தால் நீர் அவனது தூதுச் செய்தியை முற்றிலும் எட்ட வைக்காதது போன்றே அது இருக்கும். மக்களின் தீங்கிலிருந்து அல்லாஹ் உம்மை பாதுகாப்பான். நிராகரிக்கின்ற மக்களுக்கு அல்லாஹ் ஒருபோதும் (வெற்றியின்) வழியை காட்ட மாட்டான். (5:68)

இன்றிலிருந்து 1400 வருடங்களுக்கு முன்னர் உலகின் நாலாபுறமும் வழிகேட்டில் மூழ்கியிருந்தது. திருக்குர்ஆன் இந்த காட்சியை ظَهَرَ الْفَسَادُ فِي الْبَرِّ وَالْبَحْرِ அதாவது கரையும் கடலும் குழப்பத்தில் இருந்தது என்று சொற்களால் படம் பிடித்துக் காட்டுகின்றது. அதாவது வேதம் கிடைக்கப் பெற்றவர்களும், வேதம் கிடைக்கப் பெறாதவர்களும் ஆகிய இருவரிடமுமே குழப்பம் நிலவியது. குறிப்பாக அரபு தீபகற்பமானது தனிப்பட்ட அளவிலும், ஒட்டுமொத்த அளவிலும் நல்லொழுக்கத்தின் அடிப்படையிலும், ஆன்மீக அடிப்படையிலும் மிகவும் இருள் நிறைந்த காலகட்டத்தை கடந்து சென்று கொண்டிருந்தது. அவர்களில் நல்லவர் யார்? தீயவர் யார்? கருப்பு எது? வெள்ளை எது? என்ற எந்தவொரு வித்தியாசத்தையும் பார்க்க முடியாத நிலை இருந்தது.

தொண்மையிலேயே இறை இல்லமான கஃபாவின் நிலை எவ்வாறிருந்தது என்றால் இறைவனை வணங்குவதற்காக கட்டப்பட்ட அந்த வீட்டில் நாள்தோறும் ஒரு சிலை என வருடம் முழுவதற்குமாக 360 சிலைகள் வைத்து வணங்கப்பட்டு வந்தன. சண்டை சச்சரவுகள், கொலை, கொள்ளை, வெட்கங்கெட்ட நிலை, தீய செயல்கள், மது அருந்துதல், விபச்சாரம் ஆகியவை அன்றாடம் இருந்து வருகின்ற சாதாரண நிலையாக இருந்தன. அரபு சமுதாயம் என்பது சில கோத்திரங்கள் ஒன்றிணைந்ததன் பெயராக இருந்தது. அக்கோத்திரங்கள் எந்தவொரு அரசாங்கத்திற்கும் சட்டத்திற்கும் கட்டுப்பட்டு நடக்கவில்லை. சட்டத்தை பேணியவாறு எவருக்கும் கீழ் இருப்பதையும் எவருக்கும் கட்டுப்பட்டு நடப்பதையும் அவர்கள் விரும்பியதே இல்லை. அவ்வாறு அவர்கள் இருந்ததுமில்லை.

இந்த இருள் நிறைந்த காலகட்டத்தில் வேதனையுள்ள ஒரு உள்ளம் தனது சமுதாயத்தில் நிலவி வரும் தீமைகளையும், வழிகேடுகளையும் கண்டு நிம்மதியிழந்த நிலையில் இருந்தது. வானத்திலிருந்து வரும் ஒளியை பெறுவதற்காக ஒரு ஆன்மா துடித்துக் கொண்டிருந்நது. ஒரு 25 வயதுள்ள இளைஞர் இந்த வேதனைகளை உள்ளத்தில் தாங்கியவாறு நிம்மதியை தேடியவாறு மக்காவிலிருந்து மூன்று மைல் தூரத்திலுள்ள ஹிரா மலையை ஒட்டியிருந்த ஒரு குகையில் தன்னந்தனியாக சென்று தனது இறைவனிடம் தனிமையில் முறையீடு செய்வதற்காக ஒரு தங்குமிடத்தை அங்கு ஏற்படுத்திக் கொண்டார். தொடர்சியாக 15 வருடங்கள் வரை பல நாட்கள் அங்கு தங்கியிருந்து தனிமையில் இரவு பகலாக அவர் துஆக்கள் செய்து வந்தார். இவரே நமது எஜமானரும், மனித குலத்திற்கு பேரருளாகவும், அகிலங்களுக்கெல்லாம் அருட்கொடையாகவும் தோன்றிய ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்) அவர்கள் ஆவார்கள்.

இறுதியில் அல்லாஹ் அவர்களது துஆக்களை ஏற்றுக் கொண்டான். பரிசுத்த ஆவியான ஹஸ்ரத் ஜிப்ரீல் (அலை) அவர்களை உள்ளத்திற்கும் ஆன்மாவிற்கும் எழுச்சியூட்டக்கூடிய தனது தூய வசனங்களுடன் பெருமானார் (ஸல்) அவர்களிடம் அனுப்பி வைத்தான். பெருமானார் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது ஒரு கவிதையில் இவ்வாறு கூறுகின்றார்கள்.

அவர் வானத்திலிருந்து ஒளியை கொண்டு வந்தார். சுயமே அவரே ஒரு ஒளியாக திகழ்ந்தார். காட்டுமிராண்டிகளின் சமுதாயத்தில் அவர் பிறந்திருந்தாலும் அவரிடம் எந்த குறையும் இருக்கவில்லை. இந்த வானத்து ஒளியின் மூலமாக இருளில் இருப்பவர்களுக்கு ஒளியூட்டுவதற்காகவும், வழிகேட்டின் படுகுழியில் வீழ்ந்து கிடக்கின்ற மனித குலத்தை ஒளிமிக்க மினாராக்களில் அமரச் செய்வதற்காகவும் بَلِّغْ مَاۤ اُنْزِلَ اِلَيْكَ அதாவது முஹம்மது (ஸல்) அவர்களே! இப்போது உமக்கு இறங்குகின்ற திருக்குர்ஆனின் ஒவ்வொரு வசனத்தையும் மக்கள் கேட்கும்படி செய்வீராக. அதை எழுதுவீராக. அதை மனனம் செய்வீராக. பிறகு ஒவ்வொரு திருக்குர்ஆனின் கட்டளையையும் செயல்படுத்திக் காட்டுவீராக என்று அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு கட்டளையிட்டான்.

وَاِنْ لَّمْ تَفْعَلْ فَمَا بَلَّغْتَ رِسَالَتَهٗ அதாவது தாங்கள் இந்த புனிதமான கடமையை நிறைவேற்றாமல் இருந்தால் ஒருவகையில் தூதுத்துவத்திற்கான உரிமையையே நீங்கள் நிறைவேற்றாமல் இருக்கின்றீர்கள் என்று இறைவன் அவர்களிடம் கூறினான்.

எனவே இதுவொரு சாதாரண சுமையாக இருக்கவில்லை. அல்லாஹ் திருக்குர்ஆனில் பிறிதொரு இடத்தில் இந்த முழுமை பெற்ற ஷரீஅத்தின் சுமையை சுமக்க வேண்டும் என நாம் வானங்களிடமும், பூமிகளிடமும், மலைகளிடமும் கூறினோம். அதற்காக அவர்களை தூண்டினோம்.

فَاَبَيْنَ اَنْ يَّحْمِلْنَهَا وَاَشْفَقْنَ مِنْهَا அதாவது அவை அனைத்தும் இந்த அமானிதத்தை சுமப்பதற்கு மறுத்து விட்டன. இந்த அமானிதத்தின் சுமையை சுமப்பதற்கு அவை அஞ்சின. எனினும், وَحَمَلَهَا الْاِنْسَانُ அதாவது ஒரு முழுமை பெற்ற மனிதர் இந்த அமானிதத்தை தனது தலையில் சுமந்து கொண்டார். ஏனென்றால் அவரிடம் சுலூமுன் (தனக்குத் தானே அநீதி இழைத்துக் கொள்பவர்) மற்றும் ஜுஹூலுன் (எதிர்காலத்தில் தனக்கு என்ன நேரும் என்பதை பொருட்படுத்தாமல் இருப்பவர்) என்ற இரு பண்புகள் இருந்தன. அவர் எந்த எதிர்ப்பையும் பொருட்படுத்தாமல் இவ்வழியில் அவருக்கு ஏற்படுகின்ற ஒவ்வொரு துன்பத்தையும் தானே சகித்துக் கொள்பவராகவும் அந்த துன்பங்களையும் துயரங்களையும் அல்லாஹ்விற்காக மறந்து விடுகின்ற தகுதியை உடையவராகவும் பெருமானார் (ஸல்) அவர்கள் இருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் முழு வாழ்க்கையும் இறைவன் பக்கம் மக்களை அழைக்கும் பணியிலேயே கழிந்தது. ஸஃபா மலையில் நின்றவாறு குறைஷிய கோத்திரங்களுக்கு இறைவனின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதிலிருந்து இந்த பயணம் ஆரம்பமானது. அது தனது இறுதி ஹஜ்ஜின் போது அரஃபாத் மைதானத்தில் நிகழ்த்திய இறுதி குத்பா பேருரையுடன் நிறைவடைந்தது. மக்காவில் 13 வருடங்களும் மதீனாவில் 10 வருடங்களும் ஆக மொத்தம் 23 வருடத்தின் ஒவ்வொரு நாட்களும் இந்த விஷயத்திற்கு சாட்சியாக இருக்கின்றது. அதாவது அல்லாஹ்வின் நேசத்திற்குயவரே! நீங்கள் மக்களை அல்லாஹ்வின் பக்கம் அழைப்பதற்கான உரிமையை நிறைவேற்றி விட்டீர்கள் என்று அந்த நாட்கள் பறைசாற்றிக் கொண்டிருக்கின்றன.

இப்போது பெருமானார் (ஸல்) அவர்களின் தூய வாழ்க்கையிலிருந்து இறைவன் பக்கம் மக்களை அழைக்கும் பணி தொடர்பாக நிகழ்ந்த சில சம்பவங்களை கூறுகின்றேன். பெருமானார் (ஸல்) அவர்களின் பிரச்சாரமும் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கின்ற வழிமுறையும் திருக்குர்ஆனின் கட்டளையான,

ادْعُ إِلَىٰ سَبِيلِ رَبِّكَ بِالْحِكْمَةِ وَالْمَوْعِظَةِ الْحَسَنَةِ

அதாவது உமது இறைவனின் வழியில் மக்களை நுட்பமான ஞானத்துடனும், அழகிய போதனைகளுடனும் அழைப்பீராக என்பதன் சிறந்த செயல் அளவிலான முன்மாதிரியாக இருந்தது.

ஹஸ்ரத் அமரு பின் அன்பஸா (ரலி) அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள் :

நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தாம் நபி என்று வாதம் செய்த ஆரம்ப காலகட்டத்தில் மக்கா வந்திருந்தேன். அந்த சமயத்தில் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது தூதுத்துவம் தொடர்பாக பகிரங்கமாக அறிவிப்பு செய்யாமல் இருந்தார்கள். ஆனால் நானோ பெருமானார் (ஸல்) அவர்களிடம், நீங்கள் யார்? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், நான் நபியாவேன் என்று கூறினார்கள். நபி என்றால் என்ன? என்று நான் கேட்டேன். அதற்று நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வால் அனுப்படுகின்ற தூதரே நபியாக இருக்கின்றார்கள் என்று கூறினார்கள். அல்லாஹ் தான் உங்களை அனுப்பினானா? என்று நான் அவர்களிடம் கேட்டேன்.

அதற்கு அவர்கள் ஆம் என்று பதில் கூறினார்கள். அல்லாஹ் உங்களுக்கு என்ன போதனையை தந்து அனுப்பியுள்ளான்? என்று நான் கேட்டேன். அதற்கு அவர்கள், அல்லாஹ்வை வணங்க வேண்டும். சிலைகளை கைவிட்டு விட வேண்டும். இரத்த உறவுகளை பேணியவாறு அவர்களுக்குள்ள உரிமையை செலுத்த வேண்டும் என்று கூறினார்கள். அதற்கு நான், இது மிகவும் நல்ல போதனை தான். மக்களில் எத்தனை பேர் இதனை ஏற்றுக் கொண்டார்கள்? என்று கேட்டேன். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், சுதந்திரமான நபர் ஒருவரும், ஒரு அடிமையும் இதை ஏற்றுக் கொண்டுள்ளார்கள். (அதாவது ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களும், ஸைது (ரலி) அவர்களும் ஏற்றுக் கொண்டுள்ளார்கள்). இதைக் கேட்ட அம்ரு அவர்கள் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

பிறகு அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நான் இங்கிருந்தவாறே உங்களை பின்பற்றி நடக்கவா? என்று கேட்டார்கள். அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், இல்லை. நீங்கள் உங்களுடைய சமுதாயத்திற்குச் சென்று இந்த போதனைக்கேற்ப செயல்படுங்கள். எனினும் நான் வெளியேறுவது பற்றி (அதாவது ஹிஜ்ரத் செய்வது பற்றி) உமக்கு தெரிய வந்தால் பிறகு இங்கு வந்து என்னை பின்பற்றி நடக்கவும் என்று கூறினார்கள்.

(பைஹக்கி தொகுதி 2 பக்கம் 39)

இங்கு ஒரு விஷயம் குறிப்பிடத்தக்கதாகும். அதாவது ஆரம்ப கால தப்லீக்கில் படிப்படியாக பிறருக்கு தூதுச் செய்தியை எட்ட வைக்கின்ற அம்சம் பெரிதாக நமக்கு தெரிய வருகின்றது. ஆரம்பத்தில் ஓர் இறைமையையும், தூதுத் துவத்தையும் ஏற்றுக் கொள்ள வேண்டும் என்பதன் பக்கம் கவனமூட்டப்பட்டது. அவ்வாறே மனித இனத்திற்குரிய உரிமையை செலுத்துவதில் முதலில் உறவினர்களுடன் நல்ல முறையில் நடந்து கொள்வதன் பக்கம் கவனமூட்டப்பட்டது. பிறகு படிப்படியாக பல்வேறு இறைக் கட்டளைகள் இறங்க இறங்க அவற்றின் பக்கம் மக்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டது. இவ்வாறே ஆரம்பத்தில் தனிப்பட்ட முறையில் தனித்தனியாக நபர்களை சந்தித்து தப்லீக் செய்யும் பணி நடைபெற்று வந்தது. அதுவும் கூட பகிரங்கமாக நடைபெறவில்லை. மாறாக, மறைவாகவே தப்லீக் பணி நடைபெற்று வந்தது.

ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்கள் ஆரம்பத்திலேயே இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களும் கூட சமுதாயத்திலுள்ள நம்பத்தகுந்த நபர்கள் வரை உண்மையின் தூதுச் செய்தியை எட்ட வைக்கின்ற பணியை ஆரம்பித்து வைத்தார்கள். இவ்வாறு ஒரு தீபத்திலிருந்து இன்னொரு தீபம் ஒளிமயமானதாக ஆகிக் கொண்டே சென்றது. பெருமானார் (ஸல்) அவர்கள் தாம் நபி என்று வாதம் செய்து மூன்று வருடங்கள் கழிந்த பிறகு அல்லாஹ் அவர்களுக்கு, فَاصْدَعْ بِمَا تُؤْمَرُ وَأَعْرِضْ عَنِ الْمُشْرِكِينَ அதாவது உமக்கு என்ன கட்டளையிடப்பட்டுள்ளதோ அதை தெளிவாக பிறருக்கு எட்ட வைப்பீராக. இணை வைப்பவர்களை விட்டும் நீர் விலகி விடுவீராக. (15:95)

அத்துடன் وَأَنذِرْ عَشِيرَتَكَ الْأَقْرَبِينَ அதாவது உமது நெருங்கிய உறவினர்களுக்கு எச்சரிக்கை செய்வீராக (26:215). அதாவது இறைவன் பக்கம் மக்களை அழைக்கின்ற பணியை, இந்த திறந்த அழைப்பை உமது உறவினர்களிலிருந்து முதலில் ஆரம்பம் செய்வீராக.

இந்த கட்டளைக்கேற்ப பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த திட்டத்தை வகுத்தார்கள். அதாவது அதிகாலையில் ஸஃபா மலையில் ஏறி நின்றவாறு குறைஷிய கோத்திரங்களது பெயரைக் குறிப்பிட்டவாறு குரல் கொடுத்து இவ்வாறு அழைத்தார்கள். அப்துல் முத்தலிபின் சந்ததிகளே! அப்துல் மனாஃபின் சந்ததிகளே! கஸ்ஸியின் சந்ததிகளே! என்று பெயர் கூறி அழைத்தார்கள். (அரபு நாட்டில் இந்த வழக்கம் இருந்து வந்தது. ஏதாவது ஒரு துன்பம் வரும் வேளையில் உதவி செய்வதற்காக மக்களை ஒன்று திரட்ட வேண்டுமென்றால் ஏதாவது உயர்வான ஒரு இடத்தில் ஏறி நின்று இவ்வாறு அழைப்பு விடுக்க வேண்டும்).

எவ்வாறிருப்பினும், பல்வேறு கோத்திரங்களைச் சார்ந்த மக்கள் ஹஸ்ரத் முஹம்மது (ஸல்) அவர்களின் அழைப்பை கேட்டு ஸஃபா மலைக்கு அருகில் ஒன்று சேர்ந்தனர். அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களை நோக்கி இவ்வாறு கூறினார்கள்.

நான் உங்களுக்கு எச்சரிக்கை விடுப்பவனாக இருக்கின்றேன். எனக்கும் உங்களுக்கும் இடையிலுள்ள உதாரணம் அந்த நபரைப் போன்றதாகும். அந்த நபரோ தன்னை தாக்குகின்ற எதிரி ஒருவரைப் பார்க்கின்றார். தனது குடும்பத்தினரை எச்சரிக்கை செய்கின்றார். அதே சமயத்தில் அவரது குடும்பத்தினர் அவர் கூறுவதை ஏற்றுக் கொள்ள மாட்டார்கள் என்ற அபாயமும் அவருக்கு இருக்கின்றது. அதனால் அவர் கூவி கூவி எல்லோரையும் தனக்கு உதவி செய்வதற்காக அழைக்க ஆரம்பித்து விடுகின்றார்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கூறினார்கள் :

இந்த மலைக்குப் பின்னால் உங்களை தாக்குவதற்கா ஒரு படை தயாராக நிற்கின்றது என்று நான் கூறினால் நான் கூறுவதை நீங்கள் உண்மைப்படுத்துவீர்களா? என்று கேட்டார்கள். அனைவரும் ஒருமித்த குரலில், ஏன் கேட்ட மாட்டோம்? இன்று வரை நீங்கள் பொய் கூறியிருப்பதை ஒருபோதும் நாங்கள் கேட்டதில்லை. நாங்கள் எப்போதும் உங்களை உண்மை கூறுபவராகவே கண்டுள்ளோம் என்று கூறினர். அப்போது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நான் உங்களை அல்லாஹ்வின் பக்கம் அழைக்கின்றேன். அவனது தண்டனை தொடர்பாக உங்களை எச்சரிக்கை செய்கின்றேன் என்று கூறினார்கள்.

இந்த தூதுச் செய்தியை கேட்டதும் அபூலஹுப், தப்பன் லக அலி ஹாதா ஜமஃதனா அதாவது முஹம்மதே ! உமக்கு அழிவு ஏற்படட்டும் (நவூதுபில்லாஹ்). இதற்காகவா நீர் எங்களை ஒன்று கூட்டினீர் என்று கூறியவாறு எழுந்து நின்றார். இதைப் பார்த்த ஏனைய மக்களும் சிதறுண்டு போயினர். அங்கிருந்து சென்றும் விட்டனர்.

(புகாரி கிதாபுத் தஃப்ஸீர் சூரத்துஷ் ஷுஅரா அதிகாரம் 258)

பிறகு தமது உறவினர்களுக்கு தப்லீக் செய்வதற்காக பெருமானார் (ஸல்) அவர்கள் ஞானம் நிறைந்த ஒரு திட்டத்தை வகுத்தார்கள். விருந்து உண்பதற்கான ஏற்பாட்டைச் செய்து விருந்தில் கலந்து கொள்ளுமாறு உறவினர்களுக்கு அழைப்பு விடுத்தார்கள். அந்த சந்தர்ப்பத்தில் இறைவனின் தூதுச் செய்தியை எட்ட வைத்து விட வேண்டும் என்று அவர்கள் கருதினார்கள்.

ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களது கட்டளைக்கேற்ப ஆட்டுக்கால் குழம்பையும், ரொட்டிகளையும் தயார் செய்து பனி முத்தலிப் குடும்பத்தைச் சார்ந்த ஏறக்குறைய 40 நபர்களை விருந்திற்காக அழைத்தார்கள். இவர்களில் பெருமானார் (ஸல்) அவர்களின் தந்தையின் சகோதரர்களான அபூதாலிப், ஹம்ஸா, அப்பாஸ் மற்றும் அபூலஹுப் ஆகியோர் அடங்குவர். உணவு உண்ட பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் பேச ஆரம்பித்த போது அவர்களின் தந்தையின் சகோதரரான அபூலஹுப் உம்மீது யாரோ மந்திரம் செய்து விட்டான் என்று கூச்சலிட ஆரம்பித்தான். இதைப் பார்த்த மக்கள் அங்கிருந்து கலைந்து சென்று விட்டனர்.

பெருமானார் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் மீண்டும் விருந்திற்கான ஏற்பாட்டைச் செய்யும்படி கூறினார்கள். அவ்வாறே மீண்டும் விருந்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டு பொருமானார் (ஸல்) அவர்களது உறவினர்களுக்கு மீண்டும் அழைப்பு விடுக்கப்பட்டது. அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு உரை நிகழ்த்தினார்கள்.

அப்துல் முத்தலிபின் சந்ததிகளே ! இறைவன் மீது ஆணையாக. அரபு நாட்டைச் சார்ந்த எந்தவொரு இளைஞரும் நான் உங்களிடம் கொண்டு வந்திருப்பதைப் போன்ற உயர்ந்த, மகத்துவமிக்க தூதுச் செய்தியை இதுவரை கொண்டு வந்ததில்லை. நான் இந்த தூதுச் செய்தியை உலகம் மற்றும் மறுமையின் நன்மைக்காக உங்களிடம் கொண்டு வந்திருக்கின்றேன். அதன் பக்கம் உங்களுக்கு அழைப்பு விடுக்க வேண்டும் என்று இறைவன் எனக்கு கட்டளையிட்டுள்ளான். எனவே இவ்விவகாரத்தில் உங்களில் யார் எனக்கு உதவி செய்பவராக இருப்பார் ? என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கேட்டார்கள்.

எல்லோரும் அமைதியாக இருந்தனர். சிறு வயது இளைஞரான ஹஸ்ரத் அலி (ரலி) அவர்கள் மட்டும் எழுந்து நின்றார்கள். அல்லாஹ்வின் நபியே! நான் உங்களுக்கு உதவி செய்வதற்கு தயாராக இருக்கின்றேன் என்று கூறினார்கள். ஆனால் மற்ற மக்கள் அனைவரும் சிரித்தவாறு எழுந்து நின்றனர். பிறகு அங்கிருந்து சென்று விட்டனர்.

(தஃப்ஸீர் திப்ரி சூரத்துஷ் ஷுஅரா வசனம் வ அன்ஸிர் அசீரத்தக்கல் அக்ரபீன் தொகுதி 9 பக்கம் 481 பைரூத்தில் வெளியிடப்பட்டது)

எந்நிலையிலும் இதுவரை தனிப்பட்ட முறையில் அதிகம் அதிகமாக குடும்பத்தைச் சார்ந்த மக்களை ஒன்று திரட்டி தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கான முயற்சி செய்யப்பட்டு வந்தது. ஆனால் அதற்குப் பிறகு புதிய முஸ்லிம்கள் ஒன்று கூடக்கூடிய ஒரு தலைமையகம் இருக்க வேண்டும். அங்கு ஒருவர் மற்றவரது நிலைமையை பற்றி தெரிந்து கொள்ள வேண்டும் என்ற தேவை உணரப்பட்டது.

ஹஸ்ரத் அர்கம் பின் அர்கம் (ரலி) அவர்கள் 11 வது நபராக இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்கள். அவர்களது வீடு ஸஃபா மலையை ஒட்டி இருந்தது. அவர்கள் தமது வீட்டை இதற்காக தந்து விட்டார்கள். முஸ்லிம்களின் முதலாவது பிரச்சார நிலையமாக ஆகுகின்ற நற்பேற்றை அவர்களின் வீடு பெற்றது. இந்த வீட்டில் தான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கொலை செய்யும் எண்ணத்தில் வீட்டிலிருந்து வெளியேறிய ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் வழியில் இஸ்லாத்தை ஏற்கனவே ஏற்றுக் கொண்டிருந்த தனது சகோதரியையும் அவரது கணவரையும் பார்த்து அவர்களோடு முதலில் சண்டையிட்டார்கள். பிறகு திருக்குர்ஆனின் சூரா தாஹாவின் சில வசனங்களை செவிமடுத்ததன் காரணமாக அவர்களது உள்ளம் எந்த அளவுக்கு உருகிப் போனது என்றால் அவர்கள் அங்கிருந்து வெளியேறி நேரடியாக இந்த விட்டிற்கே அதாவது தாரே அர்கமிற்கே வந்து சேர்ந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அருளுக்குரிய கைகளில் பைஅத் செய்து முஸ்லிமாக ஆனார்கள். ஹஸ்ரத் உமர் (ரலி) அவர்கள் மிகவும் வீரமிக்கவர்களாகவும், பிறர் மீது தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய நபராகவும் இருந்தார்கள். அவர்கள் முஸ்லிமாக ஆனதும் முஸ்லிம்கள் எழுச்சியுடன் தக்பீர் முழக்கங்களை செய்தனர். அதற்குப் பிறகு பகிரங்கமாக அவர்கள் தப்லீக் செய்ய ஆரம்பித்தனர்.

(அசீரத்துன் நபவிய்யா லி இப்னே ஹிஷாம் தொகுதி 1 பக்கம் 343 பைரூத்தில் அச்சிடப்பட்டது)

இப்போது பகிரங்கமாக தப்லீக் செய்ததன் விளைவாக ஒன்றன் பின் மற்றொருவராக சில சுதந்திரமான நபர்களும், அடிமைகளும் முஸ்லிம்களாக மாறினர். ஒரு ஜமாஅத் ஒன்று திரள ஆரம்பித்தது. இதைப் பார்த்த மக்கத்து குறைஷியர்களுக்கு தமது தலைமை அபாயத்தில் இருப்பது தென்பட ஆரம்பித்தது. ஒருமுறை அபூஜஹில் குறைஷி தலைவர்கள் இருந்த சபையில் இவ்வாறு கூறினார்.

முஹம்மதின் விவகாரம் வளர்ந்து கொண்டே செல்கின்றது. இதற்குப் பிறகு அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களையும் நபித்தோழர்களையும் அமைப்பு ரீதியாக செயல்பட்டவாறு எதிர்க்க ஆரம்பித்தனர். அந்த எதிர்ப்பு வாயளவில் மட்டும் இருக்கவில்லை. மாறாக, எதிரிகள் முஸ்லிம்களுக்கு துன்பங்கள் தர ஆரம்பித்தனர். எவர்கள் அடிமைகளாக இருந்தனரோ அவர்கள் மீது அநீதி இழைப்பதில் அவர்களின் எஜமானர்கள் எல்லை மீறி செயல்பட்டனர். எவர்கள் சுதந்திரமாக இருந்தனரோ மேலும் சமுதாயத்தில் கண்ணியத்திற்குரியவர்களாக கருதப்பட்டு வந்தனரோ அவர்களுக்கும் கூட பல்வேறு வகையான கொடுமைகள் இழைக்கப்பட்டன. அவர்களின் எதிர்ப்புக்கு முதல் இலக்காக பெருமானார் (ஸல்) அவர்களே இருந்தார்கள்.

ஒரு முறை அவர்கள் இறை இல்லமான கஃபாவில் தொழுது கொண்டிருந்த போது அசுத்தங்கள் நிறைந்த ஒட்டகத்தின் குடல் ஒன்றை எதிரிகள் அவர்களின் முதுகில் வைத்து அதைப் பார்த்து எள்ளி நகையாடி சிரித்தனர். ஒரு முறை ஒரு போர்வையினால் பெருமானார் (ஸல்) அவர்களது கழுத்தை நெறித்து அன்னாரை கொல்வதற்கு முயற்சி செய்தனர். பலமுறை பெருமானார் (ஸல்) அவர்களுக்கு விஷம் கொடுத்து கொலை செய்வதற்கான முயற்சியும் செய்யப்பட்டது. அன்னார் வழியில் சென்று கொண்டிருக்கும் போது அவர்களது தலையில் குப்பைகள் கொட்டப்பட்டன. கடும் சொற்களை பயன்படுத்தி இழிவாக பேசி அன்னாரது உள்ளத்தை புண்படுத்தும் செயல் தினந்தோறும் நடைபெற்று வந்தது.

எந்நிலையிலும் 13 வருட காலம் வரை மக்காவில் மக்கத்து காஃபிர்களின் எதிர்ப்புகளையும் அவர்கள் இழைத்த துன்பங்களையும் கொடுமைகளையும் பற்றி கூறுவதாக இருந்தால் அதுவொரு நீண்ட வரலாறாகும். ஆனால் இங்கு இதை கூறிவது அவசியமானதாகும். அதாவது பெருமானார் (ஸல்) அவர்களது தந்தையின் சகோதரரான ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை ஏற்றுக் கொள்ளவில்லை. ஆனால் தனது மருமகனின் நன்மை, தூய்மை, இறைவன் பக்கம் மக்களை அழைப்பதில் அவர்களுக்கு இருந்த எழுச்சிமிக்க உணர்வு ஆகியவற்றால் அன்னார் சிறந்த தாக்கத்திற்கு ஆளாகி இருந்தார்கள். எனவே

எல்லா நிலையிலும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு ஆதரவாக அன்னார் இருந்து வந்தார்கள். இதன் விளைவாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதிலிருந்து மக்கத்து குறைஷியர்கள் விலகியே இருந்து வந்தனர். இறுதியில் அவர்களும் ஹஸ்ரத் அபூ தாலிப் அவர்களிடம் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு அவர்கள் வழங்கி வரும் ஆதரவை கைவிடுமாறு மிகவும் தெளிவான சொற்களில் எச்சரிக்கை செய்தனர். குறைஷிய தலைவர்களின் ஒரு குழு அபூ தாலிபிடம் சென்று இவ்வாறு கூறினர்.

இப்போது விவகாரம் அதன் உச்சத்தை அடைந்து விட்டது. எங்களைப் பற்றி அசுத்தமானவர்கள், தூய்மையற்றவர்கள், படைப்பினங்களிலேயே மோசமானவர்கள், முட்டாள்கள், ஷய்த்தானின் சந்ததிகள் என்றெல்லாம் கூறப்படுகிறது. நாங்கள் வணங்குபவை தொடர்பாக அவை நரகத்திற்கான எரிபொருளாகும் என்று கூறப்படுகிறது. எங்களது மூதாதையர்களைப் பற்றி அறிவற்றவர்கள் என்று கூறப்படுகிறது. எனவே இப்போது நாங்கள் பொறுமையுடன் இருக்க மாட்டோம். நீங்கள் அவருக்கு உதவி செய்வதிலிருந்து விலகாமல் இருந்தால் பிறகு எங்களுக்கும் வேறு வழியில்லாமல் போய் விடும் என்று கூறினர்.

அபூ தாலிப் அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களை அழைத்து இவ்வாறு கூறினார்கள். எனது மருமகனே! இப்போது உங்களது கடுஞ் சொற்களைக் கேட்டு சமுதாயம் கடுமையான ஆத்திரத்திற்கு உள்ளாகியுள்ளது. விரைவில் உம்மை அவர்கள் அழித்து விடலாம். அத்துடன் என்னையும் அழித்து விடலாம். நீர் அவர்களில் அறிவுள்ளவர்களை முட்டாள் என்று கூறுகின்றாய். அவர்களின் மூதாதையர்களை நீர் படைப்பினங்களிலேயே தீயவர் என்று கூறுகிறீர். அவர்களது கண்ணியத்திற்குரிய சிலைகளை அவர்கள் அதை வணங்கி வரும் நிலையில் அவற்றை நீர் நரகத்தின் எரி பொருள் என்றும் நரகத்தின் நெருப்பு என்றும் கூறுகின்றீர். பொதுவாக இவர்கள் அனைவரையுமே அசுத்தமானவர்கள் என்றும் ஷய்த்தானின் சந்ததிகள் என்றும் மோசமானவர்கள் என்றும் நீர் கூறுகின்றீர். நான் உமக்காக நன்மையை விரும்பியவாறு இதை கூறுகின்றேன். நீங்கள் உங்கள் நாவை பேணிக் கொள்ளுங்கள். கடுஞ் சொற்களை பயன்படுத்துவதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். அவ்வாறு நீங்கள் செய்யாமல் இருந்தால் சமுதாயத்தை எதிர்க்கின்ற சக்தி எனக்கு இல்லை என்று அபூதாலிப் அவர்கள் கூறினார்கள்.

அதற்கு பெருமானார் (ஸல்) அவர்கள், எனது பெரிய தந்தையே! இது கடுஞ் சொற்களை பயன்படுத்துவதாக ஆகாது. மாறாக இப்போது நடை பெறுவதையே நான் கூறுகின்றேன். மேலும் தேவையான விஷயத்தை சரியான சந்தர்ப்பத்தில் நான் கூறியுள்ளேன். இந்த பணியை செய்வதற்காகவே நான் அனுப்பப்பட்டிருக்கின்றேன். இதனால் எனக்கு மரணிக்க வேண்டியது வந்தால் நான் மகிழ்ச்சியுடன் எனக்காக அந்த மரணத்தை ஏற்றுக் கொள்கின்றேன். எனது வாழ்வு இந்த வழியிலேயே அர்ப்பணமாகி இருக்கின்றது. நான் மரணத்திற்கு அஞ்சியவாறு உண்மையை வெளிப்படுத்துவதிலிருந்தும் என்னை தடுத்துக் கொள்ள முடியாது. பெரிய தந்தையே உங்களுக்கு உங்கள் பலகீனம் மற்றும் துன்பத்தை பற்றிய எண்ணம் இருந்தால் பிறகு எனக்கு அடைக்கலம் வழங்குவதிலிருந்தும் நீங்கள் விலகிக் கொள்ளுங்கள்.

இறைவன் மீது ஆணையாக! எனக்கு உங்களது எந்த தேவையும் இல்லை. எனக்கு எனது எஜமானனின் கட்டளைகள் எனது உயிரை விட மிகப் பிரியமானதாக இருக்கின்றது. நான் இறைவனின் கட்டளைகளை எட்ட வைப்பதிலிருந்தும் ஒருபோதும் விலகிச் செல்ல மாட்டேன். இவ்வழியில் நான் கொல்லப்பட்டால் மீண்டும் மீண்டும் உயிர் பெற்று எப்போதும் இதே வழியில் மரணிப்பதையே நான் விரும்புகின்றேன். இது அச்சத்திற்குரிய இடமல்ல. மாறாக, எனக்கு இதில் அளவு கடந்த இன்பம் இருக்கின்றது. அதாவது இந்த வழியில் துக்கத்தை சகித்துக் கொள்வதில் இன்பம் இருக்கின்றது என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த சொற்பொழிவை நிகழ்த்திக் கொண்டிருந்தார்கள். அப்போது அவர்களது முகம் உண்மையுடனும், ஒளிமயமான தோற்றத்துடனும் நிரம்பி காணப்பட்டது. அவர்களது குரலில் அதிகமாக உருக்கம் தென்பட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இந்த சொற்பொழிவை நிறைவு செய்ததும் அதிலிருந்த உண்மையின் ஒளியைக் கண்டு அபூதாலிபின் கண்களில் அவர்களே அறியாத நிலையில் கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது. அப்போது அபூதாலிப் அவர்கள், நான் உங்களது உயர்வான நிலையைப் பற்றி தெரியாதவனாக இருந்தேன். நீங்கள் மகிமைமிக்கவர்களாக இருக்கின்றீர்கள். முற்றிலும் வேறொரு வடிவில் தென்படுகின்றீர்கள். செல்லுங்கள். உங்களது பணியை தொடர்ந்து செய்யுங்கள். நான் உயிருடன் இருக்கும் வரை எனக்கு சக்தி உள்ள வரை நான் உங்களுக்கு உறுதுணையாக இருப்பேன் என்றும் கூறினார்கள்.

பெருமானார் (ஸல்) அவர்களது உண்மைப் பேரன்பரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் தனது நூலான இஸாலே அவ்ஹாமின் முதலாவது பாகத்தின் 10 மற்றும் 11 வது பக்கத்தில் இந்த சம்பவத்தையும் இதே சொற்களையும் எழுதி விட்டு அடிக்குறிப்பில் இவ்வாறு எழுதுகின்றார்கள்.

அபூதாலிப் பற்றி கூறப்படுகின்ற இந்த எல்லா கருத்துக்களும் வரலாறாக நூல்களில் எழுதப்பட்டுள்ளன. ஆனால் இந்த முழு சொற்றொடரையும் இல்ஹாமாக இறைவன் இந்த எளியவனின் உள்ளத்தில் இறக்கியுள்ளான். ஏதாவது ஒன்று இரண்டு சொற்றொடர்கள் மற்றும் விளக்கிக் கூற வேண்டும் என்பதற்காக இந்த எளியவன் தரப்பிலிருந்து எழுதப்பட்டிருக்கின்றது.

எந்நிலையிலும் குறைஷி குலத்தின் தலைவர்களின் இந்த முயற்சி தோல்வியடைந்ததும் பெருமானார் (ஸல்) அவர்களும் அன்னாரது சஹாபாக்களும் அவர்கள் சுதந்திரமானவர்களாக இருந்தாலும் சரி; அல்லது அடிமைகளாக இருந்தாலும் சரி மக்கத்து காஃபிர்களின் கொடுமைகளுக்கு மேலும் இலக்காகி விட்டனர். எதுவரை என்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் சில சஹாபாக்களின் தாங்க முடியாத கஷ்டமான நிலைமைகளை கருத்தில் கொண்டவாறு அவர்களை அபிஸீனியாவின் பக்கம் ஹிஜ்ரத் செய்வதற்கான அனுமதியை வழங்கினார்கள். ஆனால் அவர்களோ இந்த கொடுமைகளுக்கு இலக்காகியே வந்தார்கள். எதுவரை என்றால் அநீதி இழைக்கின்ற இவர்கள் ஹஸ்ரத் ஹம்ஸா மற்றும் ஹஸ்ரத் உமர் போன்ற பெரும் பெரும் மக்கள் முஸ்லிம்களாக ஆகிக் கொண்டிருப்பதையும் பெருமானார் (ஸல்) அவர்களது ஜமாஅத் வளர்ச்சியடைவதையும் பார்த்த பிறகு குறைஷி குலத்தின் தலைவர்கள் தங்களுக்குள் ஆலோசனை செய்தவாறு பெருமானார் (ஸல்) மற்றும் பனு ஹாஷிம், பனு முத்தலிப் ஆகிய கோத்திரங்களைச் சார்ந்த அனைவரிடமிருந்தும் எல்லா வகையான தொடர்புகளையும் துண்டித்து விட வேண்டும் என்று தீர்மானித்தனர்.

இவ்வாறு முழுமையாக அவர்களை புறக்கணிப்பது தொடர்பான உடன்படிக்கையை தயார் செய்து எல்லா பெரும் பெரும் தலைவர்களிடமும் அந்த உடன்படிக்கையில் கையெழுத்து பெற்று கஃபாவின் சுவரில் அந்த உடன்படிக்கையை பொருத்தினர். இதன் விளைவாக குறைஷியர்களின் இரு பெரும் கோத்திரங்களான பனு ஹாஷிமும், பனு முத்தலிபும் ஒரு மலைக்குன்றை ஒட்டி இருந்த பள்ளத்தாக்கில் முற்றிகையிடப்பட்டனர். இதற்கு அபி தாலிப் பள்ளத்தாக்கு என்று பெயர். மூன்று வருடங்கள் வரை இந்த பள்ளத்தாக்கில் இருந்தவாறு சமுதாயத்திலிருந்து முற்றிலும் துண்டிக்கப்பட்ட நிலையில் அதனால் ஏற்பட்ட கடினமான துன்பங்களை இவர்கள் அனைவரும் சகித்து வந்தனர். இறுதியில்

நபித்துவத்தின் பத்தாவது ஆண்டில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கண்ட ஒரு ஆன்மீக கனவிற்கேற்ப இந்த உடன்படிக்கையின் எழுத்துக்களில் அல்லாஹ் என்ற பெயரைத்தவிர மற்றவற்றை கரையான் அரித்து விட்டதை அவர்களே நேரடியாக கண்டனர். அதற்குப் பிறகு சில நல்ல மக்களின் தூண்டுதலுக்கேற்ப இந்த சமுதாய புறக்கணிப்பின் தொடர் முடிவுக்கு வந்தது.

(அசீரத்துன் நபவிய்யா லி இப்னு ஹிஷிாம் தொகுதி 1 பக்கம் 350)

இந்த மூன்று வருடங்களும் சமுதாயத்தின் புறக்கணிப்பையும் துன்பங்களையும் கடந்து அதிலிருந்து வெளியே வந்த பிறகு நபித்துவத்தின் 11 வது ஆண்டில் அவர்களது பெரிய தந்தையான அபூதாலிப் அவர்கள் மரணமடைந்து விட்டார்கள். அதற்கு சில நாட்கள் கழிந்த பிறகு அன்னாரது தூய துணைவியரான ஹஸ்ரத் கதீஜா (ரலி) அவர்களும் வஃபாத்தாகி விட்டார்கள். அபூதாலிபின் மரணத்திற்குபி பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் மீது இழைக்கப்பட்ட துன்பங்கள் மேலும் அதிகரித்தன. ஆனால் அவர்கள் அவற்றை பொருட்படுத்தவில்லை. இறைவன் பக்கம் மக்களை அழைக்க வேண்டும் என்ற கவலை மட்டுமே அவர்களிடம் இருந்தது. எந்த நாளில் எவரும் அவர்கள் கூறுவதை கேட்பதற்கு இல்லாமல் இருந்தார்களோ அந்த நாளே அவர்களுக்கு மிகவும் அதிகமாக சுமையுள்ள நாளாக இருந்தது.

இறைவனின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கு அவர்கள் ஒரு வழிமுறையை கடைபிடித்தார்கள். அதாவது மக்காவிற்கு அருகில் உக்காஸ், சுல்மஜாஸ், மஜன்னா ஆகிய இடங்களில் திருவிழாக்கள் நடைபெற்று வந்தன. பெருமனார் (ஸல்) அவர்கள் அந்த திருவிழாக்களுக்கு செல்வார்கள். அங்கு எவரை சந்தித்தாலும் அல்லாஹ்வின் தூதுச் செய்தியை அவர்களுக்கு எட்ட வைப்பார்கள்.

ரபிய்யா பின் இபாத் அவர்கள் இவ்வாறு அறிவிக்கின்றார்கள்:

நான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை சுல்மஜாஸில் நடைபெற்ற திருவிழாவில் பார்த்தேன். அவர்கள் மக்களை அல்லாஹ்வின் வழியில் அழைத்தார்கள். அல்லாஹ்வைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாரும் இல்லை என்று நீர் கூறினால் நீர் இரட்சிப்பை பெறுவீர். அல்லாஹ் தன்னை வணங்க வேண்டும் என்றும் அவனுக்கு இணையாக வேறு எதனையும் வைக்கக்கூடாது என்றும் உங்களுக்கு கட்டளையிட்டுள்ளான். நான் உங்களுக்காக அல்லாஹ்வின் தூதராக அனுப்பப்பட்டுள்ளேன் என்று பெருமானார் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

எங்கு பெருமானார் (ஸல்) அவர்கள் அல்லாஹ்வின் தூதுச் செய்தியை எட்ட வைப்பதற்கு முயற்சி செய்தார்களோ அங்கெல்லாம் அவர்களுக்கு பின்னால் அபு லஹபும், அபு ஜஹிலும் கூச்சலிட்டவாறும் மண்ணை வாரி இறைத்தவாறும் பெருமானார் (ஸல்) அவர்களை பின்தொடர்ந்து வந்து கொண்டே இருந்தனர். மக்களை வழிகெடுக்கும் வகையில் இவர் பொய்யர் ஆவார். இவர் கூறும் விஷயத்தை ஒருபோதும் ஏற்றுக் கொள்ளக் கூடாது. உங்களது மார்க்கத்திலிருந்து இந்த நபர் உங்களை வழிதவறச் செய்து விடக்கூடாது என்று அவர்கள் கூறி வந்தனர்.

சகோதரர்களே ! பெருமானார் (ஸல்) அவர்கள் இறைவன் பக்கம் மக்களை அழைப்பதற்காக தாயிஃப் நகரத்திற்கு மேற்கொண்ட பயணமும் அங்கு நடைபெற்ற சம்பவமும் நம்மால் மறக்க முடியாதவையாகும். மக்காவிலிருந்து 40 மைல்கள் தொலைவிலுள்ள தாயிஃப் நகரத்தில் தன்னால் விடிவிக்கப்பட்ட அடிமையான ஸைது (ரலி) அவர்களுடன் பெருமானார் (ஸல்) அவர்கள் சென்றார்கள். அங்கு மற்ற தலைவர்களைத் தவிர ஸகீஃப் கோத்திரத்தைச் சார்ந்த மூன்று தலைவர்களும் இருந்தனர். அவர்கள் மூவருமே பெருமானார் (ஸல்) அவர்களின் பாட்டி வழியில் வந்த உறவினர்களாக இருந்தனர். பெருமானார் (ஸல்) அவர்கள் அவர்களுக்கு இஸ்லாம் பற்றி எடுத்துக் கூறி பிரச்சாரம் செய்தார்கள். மக்கத்து குறைஷியர்கள் தன்னை எதிர்த்தது பற்றி எடுத்துக் கூறி அவர்களிடம் உதவிக்காக வேண்டினார்கள். அதைக் கேட்டு விட்டு அந்த தலைவர்களில் ஒருவர் உம்மை இறைவன் தூதராக ஆக்கி அனுப்பியுள்ளான் என்றால் அவன் கஃபாவின் திரையை கிழித்துக் கொண்டிருக்கின்றான் என்று கூறினார். இரண்டாவது தலைவர், அல்லாஹ்விற்கு உம்மைத்தவிர எங்களிடம் அனுப்பி வைப்பதற்கு வேறு எந்த தூதரும் கிடைக்கவில்லையா? என்று கேட்டார். மூன்றாவது தலைவர், இறைவன் மீது ஆணையாக! நான் உம்முடன் பேசுவதையே விரும்பவில்லை என்று கூறினார். (இப்னு ஹிஷாம் தொகுதி 1 பக்கம் 419)

அவர் மேலும், இந்த ஊரிலிருந்து உடனடியாக நீங்கள் வெளியேறி விடுங்கள் என்றும் கூறினார். அதோடு மட்டும் அவர் நிறுத்திக் கொள்ளவில்லை. மாறாக, சில அடிமைகளையும் சில குண்டர்களையும் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு பின்னால் அனுப்பி வைத்தார். அவர்கள் கூச்சலிட்டவாறு அவர்களை ஏச ஆரம்பித்தனர். அப்போது ஒரு பெரிய கூட்டம் அங்கு ஒன்று திரண்டது. அந்த கூட்டத்திலுள்ளவர்கள் வழியின் இரு புறமும் நின்றவாறு பெருமானார் (ஸல்) அவர்கள் மீது கற்களை பொழிய ஆரம்பித்தனர். ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களுக்கு முன்னால் நின்றவாறு கேடயமாக தன்னை ஆக்கிக் கொண்டு கற்களிலிருந்து அன்னாரை காப்பாற்றுவதற்காக முயற்சி செய்தார்கள். ஆனால் தனியாக அவர்களால் மட்டும் எவ்வாறு பெருமானார் (ஸல்) அவர்களை பாதுகாக்க முடியும்?

பெருமானார் (ஸல்) அவர்களின் கால் விரல்களிலிருந்து இரத்தம் பெருக்கெடுத்து ஓடியது. எதுவரை என்றால் அவர்கள் அணிந்திருந்த காலணிகள் இரத்தத்தால் நிரம்பி விட்டது. ஹஸ்ரத் ஸைது (ரலி) அவர்களுக்கும் கடுமையான காயம் ஏற்பட்டது. இறுதியில் பெருமானார் (ஸல்) அவர்கள் மக்கத்து தலைவர்களான உத்பா மற்றும் ஷஃபாவின் திராட்சைகள் உள்ள தோட்டத்தில் அடைக்கலம் புகுந்த பிறகே இந்த கூட்டம் அங்கிருந்து திரும்பிச் சென்றது. சுருக்கமாக கூறுவதென்றால் தாயிஃப் நகரத்தில் பெருமானார் (ஸல்) அவர்கள் இருந்த நாட்கள் மிகவும் கடினமான நாட்களாக இருந்தன.

ஒருமுறை ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் பெருமானார் (ஸல்) அவர்களிடம் உஹது போர் நடைபெற்ற நாளை விட அதிகமாக கடினமான நாட்கள் உங்களது வாழ்நாளில் வந்திருக்கின்றதா? என்று கேட்டார்கள். (உஹது போர்க்களத்தில் பெருமானார் (ஸல்) அவர்களின் பற்கள் ஷஹீதாக்கப்பட்டன. அன்னாரது முகத்திலும் காயம் ஏற்பட்டது). அப்போது பெருமானார் (ஸல்) அவர்கள், ஆயிஷாவே! நான் உமது சமுதாயத்தினரிடமிருந்து பெரும் துன்பங்களை சகித்துள்ளேன். ஆனால் எல்லாவற்றையும் விட அதிகமாக கடினமான துன்பத்தை தாயிஃப் நகரத்திற்கு பயணம் மேற்கொண்ட போது நான் தாங்கிக் கொள்ள வேண்டியது வந்தது. அப்போது எனக்கு ஏற்பட்ட கடுமையான துக்கத்தின் காரணமாக நான் தலை குனிந்தவாறு நடந்து கொண்டிருந்தேன். அப்போது ஒரு மேகம் என்னை தனது நிழலின் கீழ் எடுத்துக் கொண்டது. அந்த சமயத்தில் மலைகளின் மலக்கு என்னை குரல் கொடுத்து அழைத்தார். எனக்கு ஸலாம் கூறிய பிறகு நான் மலைகளின் மலக்கு ஆவேன். என்னை உங்களது இறைவன் உங்களிடம் அனுப்பி வைத்துள்ளான். தாங்கள் என்ன கட்டளையிடுவீர்களோ அதை நிறைவேற்றுவதற்காகவே நான் அனுப்பப்பட்டுள்ளேன்.

முஹம்மதே (ஸல்)! இந்த பள்ளத்தாக்கிலுள்ள இரண்டு மலைகளையும் இவர்கள் மீது விழச்செய்து இவர்கள் நசுக்கப்படுவதை தாங்கள் விரும்புகின்றீர்களா? என்று கேட்டார். அப்போது கருணையின் வடிவமாக திகழ்ந்த பெருமானார் (ஸல்) அவர்கள், வேண்டாம். ஒருபோதும் அவ்வாறு செய்து விடாதீர்கள். அல்லாஹ் இவர்களின் சந்ததியிலிருந்து ஏக இறைவனை வணங்கக் கூடியவர்களையும் அவனுக்கு இணையாக எதையும் வைக்காமல் இருப்பவர்களையும் உருவாக்குவான் என்ற நம்பிக்கை எனக்கு இருக்கின்றது என்று கூறினார்கள். (புஹாரி பதவுல் குல்க் அதிகாரம் 7)

சகோதரர்களே ! பெருமானார் (ஸல்) அவர்களது உள்ளத்தில் இறைவன் பக்கம் மக்களை அழைப்பதில் எந்த அளவு உணர்வு

இருந்தது என்பதையும் மக்கத்து காஃபிர்கள் அவர்கள் மீது நம்பிக்கை கொள்ளாததன் காரணமாக அவர்களுக்கு எந்த வருத்தமும் துக்கமும் இருந்தது என்பதையும் மறைவான செய்திகளை அறிந்த இறைவனைத்தவிர வேறு எவரும் அறிந்திருக்க முடியாது. அல்லாஹ் பெருமானார் (ஸல்) அவர்களின் உள்ளத்தின் நிலையை இந்த சொற்களின் படம் படித்துக் காட்டுகின்றான்.

அல்லாஹ் கூறுகின்றான். முஹம்மதே! இவர்கள் நம்பிக்கை கொண்டவர்களாக ஆகவில்லை என்பதற்காக நீர் உமது உயிரையே மாய்த்துக் கொள்வீரா ? (42:4).

பெருமானார் (ஸல்) அவர்கள் தாயிஃப் நகரத்திற்கு பயணம் செய்த போது அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் பணியில் அவர்கள் சகித்துக் கொண்ட துன்பங்கள் மற்றும் கொடுமைகள் மற்றும் அநீதி இழைத்தவர்களின் சந்நதியிலிருந்து நம்பிக்கை கொள்பவர்கள் உருவாகுவார்கள் என்ற எண்ணத்தில் அவர்களுடன் கனிவுடன் அவர்கள் நடந்து கொண்டது ஆகியவற்றிற்கான விளைவுகள் 12 வருடங்களுக்குப் பிறகு நல்ல கனியை அவர்களுக்குத் தந்தது. ஹிஜ்ரி 9 ஆம் ஆண்டில் பெருமானார் (ஸல்) அவர்கள் தபூக் போரிலிருந்து திரும்பி வந்து கொண்டிருந்த சமயத்தில் தாயிஃப் நகரத்தைச் சார்ந்த ஒரு தலைவர் பிரதிநிதியாக பெருமானார் (ஸல்) அவர்களிடம் வந்தார். அந்த சமுதாயத்திலுள்ள அனைவரது சார்பாகவும் அவர் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டார்.

எந்நிலையிலும் உமக்கு கட்டளையிடப்பட்டதை தெளிவாக எடுத்துக் கூறுவீராக என்ற கட்டளை இறங்கிய பிறகு மக்காவில் பெருமானார் (ஸல்) அவர்கள் வாழ்ந்த அந்த பத்து வருடங்களின் ஒவ்வொரு நாளும் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் பணியிலேயே கழிந்தது. ஆனால் மக்காவின் பாராங் கற்கள் நிரம்பிய மண்ணில் தங்களது இன்னுயிரை அர்ப்பணிக்கின்ற சுதந்திரமான மற்றும் அடிமைகளான நண்பர்கள் அவர்கள் ஏற்றுக் கொண்டனர். அதே சமயத்தில் குறைஷி குலத்தின் தலைவர்கள் இறைவனின் இந்த தூதுச் செய்தியை புறக்கணித்ததோடு மட்டுமல்லாமல் பெருமானார் (ஸல்) அவர்களும் அன்னாரது அந்த சில சஹாபாக்களும் உயிருடன் வாழ முடியாத நிலையை ஏற்படுத்தினர். அவ்வாறிருந்தும் கூட பெருமானார் (ஸல்) அவர்கள் எவ்வகையிலும் இறைவன் பக்கம் மக்களை அழைக்கின்ற கடமையிலிருந்தும் விலகி விடாமல் இருப்பதை கண்ட அம்மக்கள் எல்லா கோத்திரத்தையும் சார்ந்தவர்களை ஒன்று கூட்டி ஒருமித்த ஒரு தீர்மானத்திற்கு வந்தனர். அதாவது ஒவ்வொரு கோத்திரத்தைச் சார்ந்த ஒரு பிரதிநிதி வர வேண்டும். அவர்கள்அனைவரும் ஒன்று சேர்ந்து பெருமானார் (ஸல்) அவர்களுடைய வீட்டை முற்றுகையிட வேண்டும். பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் வீட்டை விட்டு வெளியில் வந்ததும் அவர்கள் கொலை செய்து விட வேண்டும் என்று அவர்கள் முடிவெடுத்தனர்.

மறுபுறம் அல்லாஹ் பிற்காலத்தில் மதீனா என்ற பெயரால் புகழ்பெற்று விளங்கிய யஸ்ரப் என்ற மண்ணில் பெருமானார் (ஸல்) அவர்களுக்காக தங்களது உயிரைக் கூட அர்ப்பணிக்கத் தயாராக இருந்த சில பேரன்பர்களை அவர்களுக்காக உருவாக்கினான். அவர்கள் பையத்தே உக்பா ஊலாவிலும் சானியாவிலும் அதாவது உக்பா என்ற இடத்தில் நடைபெற்ற முதலாவது மற்றும் இடண்டாவது பைஅத்தில் கலந்து கொண்டு பெருமானார் (ஸல்) அவர்களிடம் பைஅத் செய்தனர்.

பிறகு பெருமானார் (ஸல்) அவர்களுக்கு மக்காவை விட்டு உடனடியாக ஹிஜ்ரத் செய்யுமாறு கட்டளையிட்டான். அல்லாஹ்வின் குறிப்பான பாதுகாப்புடனும் அல்லாஹ் வழங்கிய அடைக்கலத்துடனும் தனது சிறந்த தோழரான ஹஸ்ரத் அபூபக்கர் (ரலி) அவர்களுடன் தனது வீட்டை முற்றுகையிட்டவர்களின் கண்களுக்கு முன்னால் நடந்து வந்து மக்காவின் மண்ணிலிருந்து வெளியேறி பெருமானார் (ஸல்) அவர்கள் தமது தோழருடன் மூன்று நாட்கள் வரை சவ்ர் குகையில் அடைக்கலம் புகுந்தார்கள். அதற்குப் பிறகு மதீனாவிற்கு இடம் பெயர்ந்து சென்றார்கள். பிறகு மெதுமெதுவாக மக்காவிலிருந்த நபித்தோழர்களும் கூட ஹிஜ்ரத் செய்து மதீனா வர ஆரம்பித்தார்கள். இவ்வாறு முஹாஜிரீன்கள் மற்றும் அன்ஸார்களின் ஒரு ஜமாஅத் நிலைபெற்றது. இதற்குப் பிறகு அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் பணியில் ஒரு புதிய காலகட்டம் ஆரம்பமானது.

யூதர்களுக்கும் தப்லீக் செய்யப்பட்டது. கிறித்தவர்களுக்கும் தப்லீக் செய்யப்பட்டது. பொது மக்களுக்கும், முக்கிய பிரமுகர்களுக்கும் தப்லீக் செய்யப்பட்டது. எதுவரை என்றால் பெருமானார் (ஸல்) அவர்கள் மதீனாவிற்கு அருகிலிருந்த பெரும் பெரும் பேரரசுகளின் மன்னர்களுக்கும் தலைவர்களுக்கும் தப்லீக் கடிதங்கள் எழுதி தனது சிறப்பான தூதுவர்கள் மூலமாக அவற்றை அவர்களுக்கு எட்ட வைப்பதற்கான ஏற்பாட்டைச் செய்தார்கள். இவ்வாறு ஈரான் மன்னரான கிஸ்ரா, ரோமானிய பேரரசின் மன்னரான கைஸர், அபிசீனியாவின் மன்னரான நஜ்ஜாஸி, எகிப்து நாட்டின் அரசர், கஸ்ஸான் நாட்டின் அரசர் ஆகியோருக்கு பெருமானார் (ஸல்) அவர்கள் தப்லீக் கடிதங்களை எழுதினார்கள். இவ்வாறே யமாமா, அமான் மற்றும் பஹ்ரைன் நாட்டுத் தலைவர்களுக்கும் தப்லீக் கடிதங்கள் அனுப்பப்பட்டன.

சில நற்பாக்கியம் பெற்ற அரசர்கள் பெருமானார் (ஸல்) அவர்களின் கடிதத்தை தமது கண்களில் ஒற்றிக் கொண்டனர். அதற்கு கண்ணியம் அளிக்கும் வகையில் தமது உணர்வுகளை வெளிப்படுத்தினர். அல்லாஹ்வும் அவர்கள் மீது அருள் புரிந்தான். ஆனால் சிலர் அவற்றுடன் அவமரியாதையுடனும் பரிகாசம் செய்யும் வகையிலும் நடந்து கொண்டனர். கடிதத்தை கிழித்து எறிந்தனர். அப்படிப்பட்ட அரசர்களின் ஆட்சியை அல்லாஹ்வும் துண்டு துண்டாக ஆக்கி விட்டான்.

பிறகு அல்லாஹ்வின் கட்டளைக்கேற்ப பத்ர் போரிலிருந்து தற்காப்பு போர்களின் தொடர் ஆரம்பமானது. அந்த போர்களிலும் கூட அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கின்ற அம்சமானது எல்லா வகையிலும் மேலோங்கி இருந்ததை நம்மால் பார்க்க முடிகின்றது. கைபர் போரின் போது பெருமானார் (ஸல்) அவர்கள் இஸ்லாத்தின் கொடியை ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களது கையில் கொடுத்தார்கள். பிறகு அவர்களை நோக்கி இப்போது புறப்படுங்கள். எதிரிகளின் களத்தில் சென்று இறங்குங்கள். பிறகு எல்லாவற்றிற்கும் முதலாவதாக இஸ்லாத்தை ஏற்றுக் கொள்ளுமாறு அவர்களுக்கு அழைப்பு விடுங்கள். அவர்கள் அல்லாஹ்விற்கு செலுத்த வேண்டிய உரிமைகள் தொடர்பாகவும் அதை ஒட்டியுள்ள பொறுப்புகள் தொடர்பாகவும் எடுத்துக் கூறுங்கள் என்று கூறினார்கள்.

தொடர்ந்து பெருமானார் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! அல்லாஹ் உமது தப்லீக்கின் விளைவாக ஒரு மனிதருக்கு நேர்வழியை வழங்கி விட்டால் இந்த நற்பாக்கியமானது சிவப்பு நிறமுள்ள ஒட்டகங்கள் உமக்கு கிடைப்பதை விட மிகவும் சிறந்ததாகும் என்று கூறினார்கள்.

சகோதரர்களே! தனது வாழ்நாள் முழுவதும் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கின்ற கடமையை சிறந்த முறையில் நிறைவேற்றி பிறகு தனது வாழ்நாளின் இறுதி ஹஜ்ஜின் போது அதாவது இஸ்லாமிய வரலாற்றில் புகழ்பெற்று விளங்கும் ஹஜ்ஜத்துல் விதாவின் போது ஆயிரக்கணக்கான முஸ்லிம்களுக்கு மத்தியில் பெருமானார் (ஸல்) அவர்கள் இவ்வாறு கேட்டார்கள்.

நான் அல்லாஹ்வின் தூதுச் செய்தியை உங்களுக்கு எட்ட வைத்து விட்டேனா? என்பதற்கு அல்லாஹ்விற்காக நீங்கள் சாட்சி கூறுங்கள் என்று கூறினார்கள். அப்போது அனைவரும் ஒருமித்த குரலில் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைப்பதற்கான உரிமையை நிறைவேற்றி விட்டீர்கள் என்று நாங்கள் சாட்சி பகர்கின்றோம் என்று கூறினர். இதைக் கேட்ட பெருமானார் (ஸல்) அவர்கள், அல்லாஹ்வே ! நீயும் இதற்கு சாட்சியாக இருப்பாயாக என்று கூறினார்கள்.

(புகாரி கிதாபுல் ஹஜ் அதிகாரம் 131)

இந்த அனைத்து மேற்கோள்களும் ஹாபிஸ் முஸஃப்பர் அஹ்மது சாஹிப் எழுதிய உஸ்வயே இன்ஸானே காமில் என்ற நூலிலிருந்து எடுக்கப்பட்டிருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள் :

நமது நபி (ஸல்) அவர்கள் உண்மையை வெளிப்படுத்துவதில் ஒரு மாபெரும் சீர்திருத்தவாதியாக இருந்துள்ளார்கள். தொலைந்து போன உண்மைகளை அவர்களே மீண்டும் உலகிற்கு கொண்டு வந்துள்ளார்கள். பெருமானார் (ஸல்) அவர்களின் நபித்துவத்திற்கு இதுவும் ஒரு ஆதாரமாகும். அதாவது அவர்கள் எத்தகைய காலகட்டத்தில் தோன்றினார்கள் என்றால் அந்த காலம் மிக அதிகமாக இருளில் மூழ்கி இருந்தது. இயல்பாகவே ஒரு மகத்தான சீர்திருத்தவாதி தோன்ற வேண்டும் என்ற விருப்பம் இருந்து வந்தது. பிறகு பெருமானார் (ஸல்) அவர்கள் இந்த உலகை விட்டு எப்போது சென்றார்கள் என்றால் லட்சக்கணக்கான மனிதர்கள் இறைவனுக்கு இணை வைத்தலையும் சிலை வணக்கத்தையும் கைவிட்டு விட்டு ஓர் இறைமையையும், நேரிய வழியையும் பின்பற்ற ஆரம்பித்தனர். உண்மையில் இத்தகைய முழுமையான சீர்திருத்தத்தை பெருமானார் (ஸல்) அவர்களால் மட்டுமே செய்ய முடியும்.

அவர்கள் ஒரு காட்டுமிராண்டித்தனமான வாழ்க்கை நடத்தி வந்தவர்களை, விலங்குகளின் இயல்பை உடைய மனிதர்களை சீர்திருத்தி அவர்களுக்கு மனிதர்களுக்குரிய பழக்க வழக்கங்களை கற்றுக் கொடுத்தார்கள். அல்லது வேறு சொற்களில் இவ்வாறும் கூறலாம். அதாவது அவர்கள் விலங்குகளை மனிதர்களாக மாற்றினார்கள். பிறகு மனிதர்களை கல்வி கற்ற மனிதர்களாக மாற்றினார்கள். பிறகு கல்வி கற்ற மனிதர்களை இறைவனோடு ஒன்றிவிட்ட மனிதர்களாக மாற்றினார்கள். ஆன்மீக நிலையை அவர்களிடம் ஊதினார்கள். உண்மையான இறைவனிடம் அவர்களுக்கு தொடர்பை ஏற்படுத்தினார்கள். அத்தகையவர்கள் இறைவனின் வழியில் ஆடுகளைப் போன்று அறுக்கப்பட்டார்கள். எரும்புகளைப் போன்று கால்களின் கீழ் மிதிக்கப்பட்டார்கள். ஆனால் அவர்கள் ஈமானை கைவிடவில்லை. ஒவ்வொரு துன்பத்தின் போது அவர்கள் முன்னேறிச் சென்றார்கள்.

எனவே எவ்வித சந்தேகமுமின்றி நமது நபி (ஸல்) அவர்கள் ஆன்மீகத்தை நிலைநாட்டுவதன் அடிப்படையில் இரண்டாவது ஆதமாக இருக்கின்றார்கள். இன்னும் சொல்வதென்றால் உண்மையான ஆதமும் அவர்களே ஆவார்கள். அவர்கள் மூலமாகவே மனிதத் தன்மையின் எல்லா சிறப்புகளும் அதன் முழுமையை அடைந்தன. எல்லா நல்ல ஆற்றல்களும் தத்தமது இடத்தில் தமது பணிகளை செய்தன. மனித இயல்பின் எந்தவொரு கிளையும் பயனளிக்காமல் இருக்கவில்லை. காலத்தால் தாமதமாக வந்தவர்கள் என்பதன் அடிப்படையில் அவர்கள் மூலம் நபித்துவம் முற்றுப் பெறவில்லை. மாறாக, நபித்துவத்தின் எல்லா சிறப்புகளும் அவர்கள் மூலமாக நிறைவை எட்டியது.

(லக்சர் சியால்கோட், ரூஹானி கஸாயின் தொகுதி 20 பக்கம் 206–207)

சகோதரர்களே ! பெருமானார் (ஸல்) அவர்கள் அரபு நாட்டிற்காக மட்டும் தூதராக அனுப்பப்பட்டவர்கள் அல்ல. மாறாக, அவர்கள் முழு மனித இனத்திற்கும் தூதராக அனுப்பப்பட்டுள்ளார்கள். அல்லாஹ் திருக்குர்ஆனில் முஹம்மது (ஸல்) அவர்களே ! நீர் கூறுவீராக. மனித இனமே. நிச்சயமாக நான் உங்கள் அனைவருக்கும் அல்லாஹ்வின் தூதராக இருக்கின்றேன் (7:159).

நான் ஆரம்பத்தில் ஓதிய அஹ்ஸாப் அதிகாரத்தின் ஒரு வசனத்தில் பெருமானார் (ஸல்) அவர்களைப் பற்றி இறைவன் ஒளி தரும் சூரியன் என்று கூறுகின்றான். இதிலுள்ள தூதுச் செய்தி என்னவென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது தூய வாழ்நாளில் எல்லா மனிதர்களுக்கும் இஸ்லாத்தின் தூதுச் செய்தி சென்று சேர்வது என்பது சாத்தியமற்றதாக இருந்தது. ஆனால் இந்த ஆன்மீக சூரியன் அஸ்தமித்த பிறகும் கூட அதன் ஒளி ஒருபோதும் முழுவடைந்து விடவில்லை. ஏனென்றால் மீண்டும் ஒரு நிலவு உதித்து அந்த சூரியனின் ஒளியை உலகிற்கு வழங்கி உலகை ஒளிமயமானதாக ஆக்க வேண்டியதிருந்தது. 14 வது இரவில் தோன்றும் அந்த சந்திரன் மூலமாக அதாவது பெருமானார் (ஸல்) அவர்களின் ஆன்மீக புதல்வரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக இஸ்லாத்தின் வெற்றிக்கான பணி ஆரம்பமாக இருக்கின்றது. இதைப் பற்றிய சூரா ஜுமுஆவில் இவர்களைச் சாராத மற்றவர்களுக்கு மத்தியிலும் அவரை எழுப்புவான் என்ற வசனத்தில் கூறப்பட்டிருக்கின்றது.

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களும் தமது நூல்களில் மிகவும் விளக்கமாக இதைப் பற்றி எடுத்துக் கூறியுள்ளார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலகட்டத்தில் நேர்வழியை முழுமைப்படுத்துகின்ற கடமையானது மிகவும் சிறந்த முறையில் நிறைவேறியது. இப்போது அன்னாரது இரண்டாவது வருகையின் போது அவர்களது ஆன்மீக புதல்வரான ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் மூலமாக நேர்வழியை முழு உலகிலும் பரப்பும் பணி நிறைவு பெற வேண்டியது விதிக்கப்பட்டிருந்தது.

எனவே அல்லாஹ் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி (அலை) அவர்களை பெருமானார் (ஸல்) அவர்களின் முழுமையான நிழலாக தோன்றச் செய்தான். மேலும் அன்னாரை மஸீஹாஹவும், மஹ்தியாகவும் ஆக்கினான். அன்னார் இந்திய நாட்டில் தோன்றினார்கள். பிறகு அன்னாரது தூதுச் செய்தியை முழு உலகிலும் எட்ட வைப்பதற்கான எல்லா ஏற்பாடுகளையும் அல்லாஹ் செய்தான். இன்று உலகம் பல்வேறு ஊடகங்கள் மூலமாக முன்னேறி சென்று கொண்டிருக்கின்றது. அதன் காரணமாக ஒரு செய்தி எல்லா இடங்களுக்கும் சென்று சேர்வதற்கான வசதியையும் இறைவன் ஏற்படுத்தித் தந்துள்ளான்.

எனவே ஜமாஅத் சகோதரர்கள் இந்த புதிய கண்டுபிடிப்புகளை சரியான முறையில் பயன்படுத்தி அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கின்ற இந்த முக்கியமான கடமையை சிறந்த முறையில் நிறைவேற்ற வேண்டும்.

நம்முடைய அன்பான எஜமானரான ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 8 செப்டம்பர் 2017 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையில் மீண்டும் ஒரு முறை அல்லாஹ்வின் பக்கம் மக்களை அழைக்கும் பணியைப் பற்றி கவனமூட்டியவாறு இவ்வாறு கூறுகின்றார்கள்.

நாம் தப்லீக் பணிகளை தொடர்ந்து செய்து வர வேண்டியது அவசியமாகும். வருடத்தில் ஒரு முறை அல்லது இரு முறை அல்லது எப்போதாவது தப்லீக் வாரம் கொண்டாடுவது, தெருக்களில் நின்று கொண்டு பிரசுரங்கள் வழங்குவது ஆகியவற்றால் தப்லீக்கிற்கான உரிமையை நாம் நிறைவேற்றி விட்டோம் என்று மக்கள் புரிந்து கொள்கின்றனர்..... அல்லாஹ் நுட்பமான ஞானத்துடனும், அழகான போதனைகளுடனும், மறுக்க முடியாத உறுதியான ஆதாரங்களுடனும் தப்லீக் செய்யுமாறு கட்டளையிடுகின்றான். அதற்கேற்ப செயல்படுவது நமது பணியாக இருக்கின்றது. நிரந்தரமான இயல்புடன் இந்த பணியை தொடர்ந்து செய்து வருவது நமது பணியாகும். அதற்கான விளைவுகளை நானே உருவாக்குவேன் என்று அல்லாஹ் கூறுகின்றான்.

எவர் வழிகேட்டில் திரிவார். எவர் நேர்வழியைப் பெறுவார் என்பதைப் பற்றிய அறிவு அல்லாஹ்வுக்கு இருக்கின்றது. நம்மிடம் கேட்கப்படும் கேள்வி இது மட்டுமே ஆகும். நாம் தூதுச் செய்தியை பிறருக்கு எட்ட வைத்து விட்டோமா? என்பதை மட்டுமே அல்லாஹ் நம்மிடம் கேட்பான். அவ்வாறிருக்கும் போது நாம் நமது தப்லீக் செய்யும் கடமையை நிறைவேற்றினோமா ? என்பதைப் பற்றி நம்மிடம் கேட்கப்படும்.

அல்லாஹ்வின் வழிகாட்டலுக்கேற்ப நீங்கள் செயல்பட்டீர்களா? இல்லையா? என்றே நம்மிடம் கேட்கப்படும். யார் நேர்வழியைப் பெறுவார்? யாருக்கு நேர்வழி கிடைக்காது ? என்பதைப் பற்றிய அறிவு அல்லாஹ்விற்கு மட்டுமே இருக்கின்றது. நாம் நமது கடமையை நிறைவேற்றுபவர்களாக இருந்தால் மரணித்த பிறகு உலகம் குறைந்த பட்சம் அல்லாஹ்விடம் எங்களுக்கு இஸ்லாம் பற்றிய தூதுச் செய்தி கிடைக்கவேயில்லை என்று கூற முடியாமல் போய் விடும்.

தமது குத்பா பேருரையின் இறுதியில் ஹுஸூர் அவர்கள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் இந்த போதனையை கூறினார்கள். ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள் :

இஸ்லாத்தை பாதுகாப்பதற்காகவும் அதன் உண்மையை வெளிப்படுத்துவதற்காகவும் எல்லாவற்றிற்கும் முதலாவதாக நீங்கள் உண்மையான முஸ்லிம்களின் முன்மாதிரியை காட்ட வேண்டும். இது முதல் அம்சமாகும். இஸ்லாத்தின் சிறப்புகளையும் அதன் முழுமைத் தன்மையையும் உலகில் பரப்ப வேண்டும். இது இரண்டாவது அம்சமாகும். (மல்ஃபூஸாத் தொகுதி 8 பக்கம் 323)

இதற்குப் பிறகு ஹுஸூர் அவர்கள் இவ்வாறு கூறுகின்றார்கள்:

தப்லீக் செய்வதற்கு உங்களது நிலைமைகளில் தூய மாற்றத்தை ஏற்படுத்துவது அவசியமாகும். ஒரு உண்மையான முஸ்லிமின் முன்மாதிரியை காட்டுபவராக ஒரு மனிதன் ஆகும் போது மக்களது கவனம் இதன் பக்கம் திரும்பாமல் இருக்கவே முடியாது. முன்மாதிரியைப் பார்த்து மக்களின் கவனம் நம் பக்கம் திரும்புகின்றது. இதன் மூலம் முறையாக நீங்கள் தப்லீக் செய்வதற்கு முன்னரே தப்லீக்கிற்கான வழிகள் திறக்க ஆரம்பித்து விடுகின்றன. அல்லாஹ் நமக்கு இதற்கேற்ப செயல்படுவதற்கான நல்வாய்ப்பை வழங்குவானாக.

---

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

அதன் பிறகு அந்த கொடியவன் அந்த நகரத்தின் பைத்தியக்காரர்களையும் அன்னாருக்கு பின்னால் அனுப்பினான். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்த நகரத்திலிருந்து வெளியேறும் போது அந்த மக்கள் கூச்சலிட்டவாறு அன்னார் பின் தொடர்ந்தது மட்டுமல்லாமல் அன்னாரின் மீது எவ்வித இரக்கமுமின்றி கற்களை எறியத் தொடங்கினர். அதனால் அன்னாருடைய உடல் முழுவதும் இரத்தம் வழிந்தோடியது. தொடர்ந்து மூன்று மைல் வரை அந்த மக்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை ஏசிப்பேசியும், கற்களை எறிந்தும் பின் தொடர்ந்து வந்தனர்.

தாயிஃபின் மூன்று மைல் தொலைவில் மக்காவின் செல்வந்தரும் தலைவருமான உத்பா பின் ரபீஆ என்பவரின் ஒரு தோட்டம் இருந்தது. அதில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தஞ்சம் புகுந்தார்கள். அன்னார் பின்தொடர்ந்து வந்த கொடியவர்கள் கலைப்படைந்து திரும்பி விட்டார்கள். அங்கு ஒரு நிழலில் நின்று கொண்டு அல்லாஹ்விடம் இவ்வாறு துஆ செய்தார்கள்.

என் இறைவா! எனது பலவீனங்களையும், எனது பொருள் வளமின்மையையும் மக்களின் பார்வையில் நான் இழிவாக கருதப்படுவதையும் உன்னிடமே முறையிடுகிறேன்.

என் இறைவா! நீ எல்லாரையும்விட கருணைகாட்டக் கூடியவனாவாய். ஏழைகள், பலவீனர்கள் ஆகியவர்களை நீயே கண்காணிப்பவனாவாய். உன்னுடைய முகத்தின் ஒளியில் நான் புகலிடம் தேடுகிறேன். உலகிலிருந்து இருளை விரட்டியடிப்பதும், இவ்வுலகிலும் மறுமையிலும் சாந்தியை வழங்குவதும் உனது செயல்களே ஆகும். நீயே மனிதனை இம்மை மற்றும் மறுமையின் வாரிசாக ஆக்குகிறாய்.

உத்பா மற்றும் ஷுபா அந்நேரத்தில் அந்த தோட்டத்திலேயே தான் இருந்தார்கள். அவர்கள் இருவரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காயமடைந்த அந்த நிலைமையை பார்த்ததும் தொலைதூர உறவின் காரணமாகவோ அல்லது சமுதாய உணர்வின் காரணமாகவோ அல்லது வேறு ஏதோ காரணத்தினால் அவ்விருவரும் ஒரு தட்டில் திராட்சைகளை நிரப்பி தமது அடிமை அத்தாஸிடம் இந்த திராட்சைகளை எடுத்துச் சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு கொடு என்றார்கள்.

அதை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வாங்கிக் கொண்டு அத்தாஸிடம், நீங்கள் எந்த ஊரை சேர்ந்தவர்கள்? மேலும் எந்த மார்க்கத்தை பின்பற்றக் கூடியவர்கள்? எனக் கேட்டார்கள். அதற்கு அவர், நான் நினிவே நாட்டைச் சேர்ந்தவன். மார்க்கத்தின் அடிப்படையில் நான் கிறித்தவன் ஆவேன் என்று கூறினார்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், இறைவனின் நல்லடியாராகிய யூனுஸ் பின் மதா வாழ்ந்த இடமா? என்று கேட்க அதற்கு அத்தாஸ், ஆம்! என்று பதிலளித்தார்கள்.

ஆனால் தாங்கள் யூனுஸ் பின் மதா அவர்களின் நிலையை அறிவீர்கள்? ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அவர் என்னுடைய சகோதரர் ஆவார். ஏனென்றால் அவரும் அல்லாஹ்வின் நபியாவார்கள். நானும் அல்லாஹ்வின் நபி ஆவேன் என்று கூறினார்கள். பிறகு இஸ்லாம் மார்க்கம் குறித்து அவர்களுக்கு பிரச்சாரம் செய்தார்கள். அத்தாஸின் திகைப்பு சில நிமிடங்களுக்குள் வியப்பாக மாறிவிட்டது. இந்த வியப்பு நம்பிக்கையாக மாறிவிட்டது. பின்னர் அவர்களின் கைகளை முத்தமிட தொடங்கினர்.

இந்த காட்சியை தூரத்திலிருந்து நின்றவாறே உத்பா மற்றும் ஷுபாவும் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அத்தாஸ் திரும்பி வந்ததும் அவர்கள் அத்தாஸிடம் இவ்வாறு கூறினார்கள். அத்தாஸே ! உனக்கு என்ன ஆயிற்கு? நீ அந்த நபரின் கையில் ஏன் முத்தமிட்டாய்? இந்த நபர் உன் மார்க்கத்தை சீர்குலைத்த விடுவார். மாறாக, உன்னுடைய மார்க்கமோ அவருடைய மார்க்கத்தை விட சிறந்ததாக உள்ளது.

(சீரத் காத்தமுன் நபிய்யீன். ஆசிரியர்: ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் M.A (ரலி) அவர்கள். பக்கம் 182)

அத்தாஸ் ஈமான் கொண்டது தொடர்பாக ஹஸ்ரத் முஸ்லிஹ் மவ்வூது (ரலி) அவர்கள் அன்னாரின் மந்திர ஜாலத்தை வெளிப்படுத்துகின்ற ஒரு சில வரியை படியுங்கள். நிச்சயமாக ஆனந்தம் அடைவீர்கள். அன்னார் (ரலி) அவர்கள் கூறுகின்றார்கள்:

அத்தாஸ் என்பவர் நினிவே என்ற ஊரைச் சேர்ந்த ஒரு கிறித்தவர். இவர் அந்த திராட்சைகளை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன் சமர்ப்பிக்கவே, அளவற்ற அருளாளனும் மேன்மேலும் கருணை காட்டுபவனுமாகிய அல்லாஹ்வின் பெயரால் நான் இவற்ற வாங்கிக் கொள்கின்றேன் என்று மொழிந்து கொண்டே அத்திராட்சைகளை அவர்கள் வாங்கிய போது அடிமை அத்தாஸிற்கு கிறித்தவத்தின் நினைவு மீண்டும் உள்ளத்தில் புத்துணர்வு பெற்றது. இதனால் அவர் ஹீப்ரு மொழி பேசும் ஓர் இறைதூதர் தமக்கு முன்னால் உட்கார்ந்திருக்கிறார் என்று உணர்ந்து கொண்டார். நீங்கள் எந்த ஊரைச் சார்ந்தவர்கள்? என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கேட்டதற்கு, நினிவே நாட்டைச் சேர்ந்தவன் என்று அவர் பதிலளித்த போது, நினிவேயைச் சேர்ந்தவரும் நபிமார்களின் அரசரும் மத்தேவுடைய மகனுமகிய அந்த நல்ல மனிதர் யூனுஸ் (அலை) அவர்கள் போன்று இறைவனுடைய ஒரு நபி ஆவார்கள் என்று அவர்கள் கூறிவிட்டு தங்களுடைய இஸ்லாம் மார்க்கம் குறித்து அவருக்கு பிரச்சாரம் செய்ய தொடங்கி விட்டார்கள்.

அத்தாஸின் திகைப்பு சில நிமிடங்களில் வியப்பாக மாறிவிட்டது. இந்த வியப்பு நம்பிக்கையாக மாறிவிட்டது. சிறிது நேரத்திலேயே

அயலாராக அந்த அடிமை கண்ணீர் நிறைந்த கண்களுடன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை கட்டி அணைத்துக் கொண்டார். பின்னர் அவர்களின் கைகளிலும் கால்களிலும் அவர் முத்தமிடத் தொடங்கினார். (ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்களின் வாழ்க்கை பக்கம் 55,59)

வாசகர்களே ! சிந்தித்துப் பாருங்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் இரத்தம் வழிந்த நிலையிலும் மிகுந்த வேதனையிலும், காயங்களால் அவதிக்குள்ளாகி இருந்தும், மிகுந்த சோர்வடைந்தவர்களாகவும், பலகீனமான நிலையில் இருந்தும் கூட தாடங்கள் அந்த சந்தர்ப்பத்தை கையிலிருந்து நழுவ விடவில்லை. அத்தாஸிற்கு தப்லீக் செய்து முஸ்லிமாக ஆக்கி விட்டார்கள். மேலும் நரக நெருப்பிலிருந்து காப்பாற்றி விட்டார்கள்.

வாசகர்களே! சற்று சிந்துத்துப் பாருங்கள். மலைகளுக்கான வானவர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் வந்து, இந்த மக்கள் செய்த அத்துமீறலினால் தாயிஃப் நகரத்தின் இரண்டு மலைகளையும் ஒன்று சேர்த்து அதில் உள்ள மக்களில் ஒருவரை கூட உயிருடன் இல்லாமல் செய்து விடுகிறேன் என்று அனுமதி கேட்கிறார்.

அதற்கு, ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், வேண்டாம். இந்த மக்களின் வழித்தோன்றல்களில் அல்லாஹ்விற்கு எதையும் இணை கற்பிக்காத அவனை மட்டும் வழிபடுபவரை அல்லாஹ் உருவாக்குவான் என்று நான் நம்புகிறேன் என கூறினார்கள். எப்படிப்பட்ட துடிப்பு அன்னாரின் உள்ளத்தில் இருந்து என்றால் பாமர மக்கள் தன்னுடைய உண்மையான படைப்பாளன் மற்றும் எஜமானனை அடையாளம் கொள்ள வேண்டும். மேலும் உலகில் ஓர் இணை வைப்பாளரும் கூட இருக்கக் கூடாது என்பதே அன்னாரின் நோக்கமாக இருந்தது.

ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் 20 ஏப்ரல் 2018 அன்று ஆற்றிய ஜுமுஆ பேருரையில் இவ்வாறு கூறுகின்றார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு சந்தர்ப்பதில் ஹஸ்ரத் அலி (ரலி) அவர்களிடம் கூறினார்கள். இறைவன் மீது ஆணையாக! உன் மூலமாக ஒரு மனிதர் நேர்வழி பெற்றால் உயர்ரக செந்நிற ஒட்டகத்தை விட அது சிறந்தாகும். இந்த உலக செல்வங்களும் காரணிகளும் அதற்கெதிராக ஒன்றுமற்றதாகும். ஆக, நீங்கள் தப்லீக் (பிரச்சாரம்) செய்யுங்கள். யாராவது நேர்வழி பெறுவதற்காக வழிமுறையை ஏற்படுத்துங்கள். அல்லாஹ்வின் அருட்கொடையின் வாரிசாக ஆகுவதற்கு நேரத்தை கொடுக்க வேண்டும்.

அல்லாஹ் நம் அனைவருக்கும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் அழகிய முன்மாதிரியை பின்பற்றக்கூடிய நற்பாக்கியத்தை வழங்குவானாக. மேலும் ஹுஸூர் அவர்களின் வழிகாட்டலின்படி தப்லீக் மற்றும் நற்செயல்களின் மூலம் மனிதர்கள் நேர்வழி பெற காரணியாக அமைவோமாக. ஆமீன்.

**சகோதர, சகோதரிகளின் கவனத்திற்கு**

அஹ்மதி மாணவ, மாணவிகள் மற்றும் வக்ஃபே நவ் சிறார்கள் பல்வேறு சந்தர்ப்பங்களில் ஹஸ்ரத் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்யதஹுல்லாஹு தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்களிடம் கேட்ட கேள்விகளுக்கு, ஹுஸூர் அவர்கள் மிகுந்த பரிவுடன் கூறிய பதில்களை தற்போது நூருல் இஸ்லாம் துறை சார்பாக தமிழில் மொழியாக்கம் செய்யப்பட்டு ISLAMININDIA என்ற official Youtube Channel –ல் upload செய்யப்பட்டுள்ளது. அல்ஹம்துலில்லாஹ்.

சகோதர, சகோதரிகள் இவற்றிலிருந்து பலன்பெறுமாறு விரும்பி வேண்டி கேட்டுக் கொள்கின்றேன். ஜஸாகுமுல்லாஹ்.

(அமீர், மேலப்பாளையம்)

*(3-வது பக்கத்தின் தொடர்ச்சி....)*

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் நடுநிலை உயரம் கொண்டவர்களாக இருந்தார்கள். அதிக உயரமாகவே, குள்ளமாகவோ இருக்வில்லை. அன்னாரது நிறம் பொலிவு கொண்ட வெள்ளையாக இருந்தது. அன்னார் வெளிர் நிறமாகவோ, அடர் கோதுமை நிறமாகவோ இருக்கவில்லை. அன்னாரது முடிகள் ஓரளவு நேராக இருந்தது.

அதிக சுருளாகவோ, முற்றிலும் நேராகவோ இருக்கவில்லை. அன்னார் நபித்துவ வாதம் செய்யும் போது அன்னாரது வயது நாற்பதாக இருந்தன. நபித்துவ வாதத்திற்குப் பிறகு பத்து வருடங்கள் மக்காவிலும், மதீனாவில் பத்து வருடங்களும் இருந்தார்கள். அன்னார் மரணிக்கும் போது அன்னாருக்கு அறுபது வயதாக இருந்தது. அன்னாரது தலையிலும், தாடியிலும் அதிகமான வெள்ளை முடிகள் இருந்தன.

(அல்முஃஜமுஸ் ஸகீர் லித்திப்ரானி பாபுல் ஜீம் மின் இஸ்முஸ் ஜஃபர் தொகுதி 1 பக்கம் 118)

ஹஸ்ரத் ஸாது பின் ஸூஸ்ஸாம் பின் ஆமிர் (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். நான் ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்களிடம் சென்றேன். மேலும் அவர்களிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நல்லொழுக்கம் தொடர்பாக கூறும்படி கேட்டேன்.

அதற்கு ஹஸ்ரத் ஆயிஷா (ரலி) அவர்கள் கூறினார்கள்:

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் நற்குணங்களும், நன்னடத்தையும் முற்றிலும் திருக்குர்ஆனுக்கு ஏற்பவே அமைந்திருந்தது. மேலும் நீங்கள் திருக்குர்ஆனில் வ இன்னக்க லஅல குலுகின் அழீம் அதாவது நபியே! நிச்சயமாகத நீர் உயர் நல்லொழுக்க நிலையில் உள்ளீர் என்பதை படிக்கவில்லையா என்று கூறினார்கள்.

(முஸ்னது அஹ்மது பக்கம் 90 தொகுதி 6. தலாயில் அன்னுபுவதி லில்பைஹக்கி பக்கம் 309 தொகுதி 1)

ஹஸ்ரத் ஜாபிர் பின் சம்ரா (ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். ஒரு நாள் நிலவு எழிலுடன் காட்சியளித்து கொண்டிருந்தது. மறுபுறம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளியில் வந்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிவப்பு நிற போர்வையை போர்த்தி இருந்தார்கள்.

அந்த இரவு நான் சில நேரம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மீதும் சில நேரம் மின்னிக் கொண்டிருக்கும் நிலவின் மீதும் பார்வையை செலுத்திக் கொண்டிருந்தேன். அப்போது நிலவை விட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் அழகாக இருந்தார்கள். (திர்மிதி பாடம் அதப்)

ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்கள் கூறுகின்றார்கள்:

நாம் நேர்மையுடன் பார்க்கும் போது நபித்துவ தொடரில் மிக உயர் தகுதியுடைய, கண்ணியமிக்க நபியாகவும், உயிருள்ள நபியாகவும், இறைவனின் அன்பிற்குரிய நபியாகவும் ஒருவரையே காண்கின்றோம். அவர் நபிமார்களின் தலைவரும், தீர்க்கதரிசிகளில் பெருமைக்குரியவரும், அனுப்பப்பட்ட அனைவரின் கிரீடமுமாகிய **ஹஸ்ரத் முஹம்மது முஸ்தஃபா (ஸல்)** அவர்களேயாவார். அவரது நிழலின் கீழ் பத்து நாட்கள் நடந்தால் இதற்கு முன் ஆயிரம் வருடங்கள் வரை கிடைக்க முடியாத அந்தப் பிரகாசம் கிடைத்து விடுகின்றது.

(ரூஹானி கஸாயின் தொகுதி 12 சிராஜுல் முனீர் பக்கம் 82)